நம்மாழ்வாரின்

திருவிருத்தம்

(மூலம், பதவுரை ...தமிழில்)



தொகுத்தளிப்பவர் ::வழுத்தூர் ஸ்ரீதரன்

ஆண்டவன் திருவடி

திருவிருத்தம்

தனியன் :

ஒரு விருத்தம் புக்கு , உழலுறுவீர் ! ஒரு விருத்தம் புகுதாமல் , குருகையர் கோன் உரைத்த , திரு விருத்தத்து , ஓரடி , கற்று இரீர் !

தனியன் :

கரு , விருத்தக் , குழி , நீத்தபின் ; காமக் , கடும் - குழி , வீழ்ந்து ;

ஒரு , விருத்தம் , புக்கு ; உழல் , உறுவீர் ! உயிரினம் பொருள்கட்கு -

ஒரு , விருத்தம் , புகுதாமல் ; குருகையர் , கோன் - உரைத்த ,

திருவிருத்தத்து - ஓர் - அடி , கற்று - இரீர் ! திரு நாட்டு - அகத்தே

கரு ..... கர்ப்பம் ஆகிற ,

விருத்தக் ..... வட்டமான ,

குழி ..... குழியை ,

நீத்தபின் ..... விட்ட பின்பு ;

காமக் ..... சிற்றின்ப அனுபவம் ஆகிய ,

கடும் ..... கொடிய ,

குழி ..... குழியில் ,

வீழ்ந்து ..... விழுந்து ;

ஒரு .... ஒப்பற்ற ,

விருத்தம் ..... மிக்க கிழத்தனத்தை ,

புக்கு ..... அடைந்து ;

உழலுறுவீர் ..... அலைந்து கொண்டிருக்கும் ஜனங்களே !

உயிரின் ..... உங்கள் உயிர் ,

பொருள்கட்கு ..... அடைய வேண்டிய பயன்களுக்கு ,

ஒரு விருத்தம் ..... இடையூறு ,

புகுதாமல் ..... சிறிதும் நேராதபடி ,

குருகையர் ..... திருக் குருகூரில் உள்ளார்க்கு ,

கோன் ..... தலைவர் ஆன நம்மாழ்வார் ,

உரைத்த ..... அருளிச் செய்த ,

திருவிருத்தத்து ..... திருவிருத்தம் எனும் நூலில் ,

ஓர் அடி ..... ஒரு பாதத்தை ,

கற்று ..... அப்யஸித்து உணர்ந்து ,

திருநாட்டு அகத்தே ..... பரம பதத்தில்,

இரீர் ..... வாழ்வீராக !

001 / 100

உயிர் அளிப்பான் , எந்நின்ற யோநியுமாய்ப் பிறந்தாய் ! இமையோர் தலைவா !
அடியேன் செய்யும் விண்ணப்பம் , நின்று , கேட்டு , அருளாய் !

பொய்ந் , நின்ற , ஞானமும் ; பொல்லா , ஒழுக்கும் - அழுக்கு - உடம்பும் ;

இந்நின்ற , நீர்மை ; இனி , யாம் - உறாமை ; உயிர் - அளிப்பான் ,

எந்நின்ற , யோநியுமாய்ப் , பிறந்தாய் ! இமையோர் , தலைவா !

மெய்ந் , நின்று , கேட்டு , அருளாய் ! அடியேன் , செய்யும் , விண்ணப்பமே !

உயிர் ..... எல்லாப் பிராணிகளையும் ,

அளிப்பான் ..... ரக்ஷித்து அருள்வதற்காக ,

எந்நின்ற ..... பல வகைப்பட்ட ,

யோநியுமாய்ப் .... பிறப்புகளையும் உடையனாய் ,

பிறந்தாய் ..... திரு அவதரித்தவனே !

இமையோர் ..... தேவர்களுக்குத்,

தலைவா ..... தலைவனே !

பொய்ந் ..... பொய்ம்மை ,

நின்ற ..... நிலை பெற்ற ,

ஞானமும் ..... அறிவும் ;

பொல்லா ..... தீய ,

ஒழுக்கும் ..... நடத்தையும் ;

அழுக்கு ..... அசுத்தங்களோடு கூடிய ,

உடம்பும் ..... சரீரமும் ஆக , இவற்றோடு கூடிய ,

இந்நின்ற ..... இவ்வண்ணமான ,

நீர்மை ..... பிறப்புத் துன்பத்தை ;

இனி ..... இனிமேல் ,

யாம் ..... நாங்கள் ,

உறாமை ..... அடைய முடியாதபடி ,

அடியேன் ..... உனது அடியவனான நான் ;

செய்யும் ..... சொல்லும் ,

மெய் ..... உண்மையான ,

விண்ணப்பமே ..... விஜ்ஞாபனத்தை ,

நின்று ..... நின்று ,

கேட்டு ..... நீ கேட்டு ,

அருளாய் ..... அருள வேண்டும் !

002 / 100

கண்ணன் இணை அடிக்கே , அன்பு சூட்டிய , சூழ் குழற்கே ,

சே அரிக் கண், அழு நீர் துளும்ப அமலருகின்றன ! வாழி !

செழுநீர்த் , தடத்துக் , கயல் , மிளிர்ந்தால் - ஒப்ப ; சே - அரிக் , கண் ;

அழு , நீர் , துளும்ப - அமலருகின்றன ! வாழி ! அரோ ;

முழு , நீர் , முகில் , வண்ணன் ; கண்ணன் ; விண் - நாட்டவர் ;

தொழு , நீர் - இணை - அடிக்கே ; அன்பு , சூட்டிய , சூழ் , குழற்கே !

முழு நீர் ..... நிறைந்த நீரை உடைய ,

முகில் வண்ணன் ..... காளமேகம் போல் , நிறத்தை உடையவனான ,

கண்ணன் ..... எம்பெருமானுடைய ;

மூதுவர் ஆம் ..... யாவர்க்கும் முற்பட்டவர் ஆன ,

விண் - நாட்டவர் ..... பரம பதத்து நித்ய ஸூரிகள் ,

தொழு நீர் ..... வணங்கும் தன்மையை உடைய ,

இணை அடிக்கே ..... திருவடிகளின் இணைகளில் ;

அன்பு சூட்டிய ..... தனது அன்பைச் செலுத்தின ,

சூழ் குழற்கே ..... அடர்ந்த கூந்தலை உடைய பெண்மகளுக்கு ;

செழுநீர்த் ..... மிக்க நீரை உடைய ,

தடத்துக் ..... ஒரு தடாகத்தில் ;

கயல் ..... கயல் மீன் ,

மிளிர்ந்தால் ஒப்ப ..... பிறழ்ந்தாற் போல் ,

சே அரிக் கண் ..... சிவந்த வரிகளை உடைய கண்கள் ,

அழு ..... நாயகனுடைய பிரிவை ஆற்றாமல் புலம்பிய ,

நீர் துளும்ப ..... நீர் ததும்ப ;

அமலருகின்றன ..... தடுமாறுகின்றன !

வாழி ..... இந்த அன்பு நிலை என்றும் நிலைத்திருக்க வேண்டும் !

அரோ ..... (அசைச் சொல்)

003 / 100

அழல் போல் அடும் , சக்கரத்து அண்ணல் , குழல் கோவலர் மடப்பாவையும் , மண்மகளும் , திருவும் நிழல் போல்வனர் கண்டு , நிற்கும் கொல் ? மீளும் கொல் ?

குழல் - கோவலர் , மடப் , பாவையும் , மண் , மகளும் - திருவும் ;

நிழல் - போல்வனர் , கண்டு , நிற்கும் - கொல் ? மீளும் - கொல் ? தண் - அம் - துழாய் ,

அழல் , போல் , அடும் , சக்கரத்து - அண்ணல் , விண்ணோர் , தொழக் , கடவும் -

தழல் - போல் - சினத்த , அப் , புள்ளின் , பின் , போன , தனி , நெஞ்சமே !

தண் ..... குளிர்ந்த ,

அம் ..... அழகிய ,

துழாய் ..... திருத் துழாயை உடையவனும் ;

அழல் போல் ..... அஸுர ராக்ஷஸர்களை , நெருப்பு போல் ,

அடும் ..... அழிக்கின்ற ,

சக்கரத்து ..... திரு ஆழியை உடையவனும் ஆன ;

அண்ணல் ..... எம்பெருமான் ;

விண்ணோர் ..... மேல் உலகத்தோர் ,

தொழக் ..... வணங்கும்படி ,

கடவும் ..... ஏறி நடத்துகிற ;

தழல் போல் ..... பகைவர் திறத்தில் நெருப்பு போல் ,

சினத்த ..... கடும் கோபத்தை உடைய ,

அப் புள்ளின் ..... அக் கருடாழ்வானது ,

பின் போன ..... பின்னே சென்ற ,

தனி நெஞ்சமே ..... எனது தனிப்பட்ட மனம் ஆனது ;

குழல் ..... புல்லாங்குழலை உடையரான ,

கோவலர் ..... இடையரது ,

மடப் ..... குணவதியான ,

பாவையும் ..... மகள் நப்பின்னையும் ,

மண் மகளும் ..... பூமிப் பிராட்டியும் , திருவும் ..... பெரிய பிராட்டியும் ,

நிழல் போல்வனர் ... எம்பெருமானுக்கு நிழல் போல் இருக்கக் ,

கண்டு ..... அவர்களைப் பார்த்துக் கொண்டு ,

நிற்கும் கொல் ..... அவ்விடத்தை விடாது நிற்குமோ அல்லது ,

மீளும் கொல் ..... திரும்பி வருமோ ?

004 / 100

தனி நெஞ்சம் , முன் , அவர் , புள்ளே , கவர்ந்தது ! பேய்ச்சி முலை சுவைத்தான் துழாய்ப் பனி நஞ்சம் , மாருதமே ! எம்மது ஆவி பனிப்பு , இயல்வே ?

தனி , நெஞ்சம் , முன் - அவர் , புள்ளே , கவர்ந்தது ! தண் - அம் - துழாய்க்கு - இனி , நெஞ்சம் - இங்குக் , கவர்வது - யாம் - இலம் ! நீ , நடுவே , முனி , வஞ்சப் , பேய்ச்சி , முலை , சுவைத்தான் , முடி , சூடு , துழாய்ப் - பனி , நஞ்சம் , மாருதமே ! எம்மது - ஆவி , பனிப்பு - இயல்வே ?

தனி ..... எம்மோடு உறவற்று நீங்கிய ,

நெஞ்சம் ..... என் மனம் முழுவதையும் ,

முன் ..... முன்னமே ,

அவர் ..... அவருடைய ,

புள்ளே ..... கருடப் பறவையே ,

கவர்ந்தது ..... பிற்ர்க்கு மிச்சம் இல்லாதபடி கவர்ந்து கொண்டு போயிற்று !

தண் ..... ஆதலால் அப் பெருமானுடைய குளிர்ந்த ,

அம் ..... அழகிய ,

துழாய்க்கு ..... திருத் துழாய்க்கு ,

கவர்வது ..... கவர்ந்து கொண்டு செல்வதற்கு உரியதான ,

நெஞ்சம் ..... வேறொரு நெஞ்சை ,

இனி ..... இனி ,

இங்கு ..... இவ்விடத்தில் ,

யாம் ..... யாம் ,

இலம் ..... உடையோம் அல்லோம் !

முனி ..... கோபிக்கும் தன்மை உள்ள ,

வஞ்சப் ..... வஞ்சனையை உடையதான ,

பேய்ச்சி ..... பேய் மகளான பூதனையுடைய ,

முலை ..... விஷம் தடவிய முலையை ,

சுவைத்தான் ..... பசையற உருகிப் பார்த்து உண்ட கண்ண பிரானுடைய ,

முடி ..... திருமுடியில் ,

சூடு ..... சூடப்பட்ட ,

துழாய்ப் ..... திருத்துழாயினது ,

பனி ..... குளிர்ச்சியை உடைய ,

நஞ்சம் ..... விஷம் போன்ற ,

மாருதமே ..... காற்றே !

நீ ..... நீ ,

நடுவே ..... இடையில் புகுந்து ,

எம்மது ..... ஏற்கனவே நோவு பட்டிருக்கிற ,

ஆவி ..... எம்முடைய உயிரை ,

பனிப்பு ..... மேலும் நடுங்கச் செய்வது ,

இயல்வே ..... உனக்குத் தக்க இயற்கையோ ? (தகாது)

005 / 100

தண் வாடை , எரி வீசும் , பனிப்புயல் , அம் தண்ணம் துழாய்ப் பனிப்புயல் சோரும் , பனிப்புயல் , தடம் கண்ணி , மாமைத் திறத்துக் கொலாம் !

பனிப்பு - இயல்வு - ஆக , உடைய ; தண் , வாடை , இக்காலம் , இவ்வூர்ப் ,

பனிப்பு - இயல்வு - எல்லாம் , தவிர்ந்து - எரி , வீசும் , அம் - தண்ணம் - துழாய்ப் ,

பனிப் புயல் , சோரும் , தடம் - கண்ணி , மாமைத் , திறத்துக் , கொலாம் ?

பனிப் , புயல் , வண்ணன் ; செங்கோல் - ஒரு , நான்று , தடாவியதே !

பனிப்பு ..... குளிரச் செய்வதையே ,

இயல்வு ஆக ..... இயற்கைத் தொழிலாக ,

உடைய ..... உடைய ,

தண் வாடை ..... குளிர்ந்த காற்றானது ;

இக்காலம் ..... இப்போது மாத்திரம் ,

இவ்வூர்ப் ..... இவ்விடத்தில் மாத்திரம் ;

பனிப்பு ..... குளிரச் செய்வதாகிய ,

இயல்வு ..... தன்னுடைய இயற்கையை ,

எல்லாம் ..... முழுதும் ,

தவிர்ந்து ..... விட்டு ,

எரி ..... வெப்பத்தை ,

வீசும் ..... வீசுகின்றது !

பனிப் புயல் ..... இவ்வாறு குளிர்ந்த காளமேகம் ,

வண்ணன் ..... போன்ற தன்மையை உடைய எம்பெருமானது ,

செங்கோல் ..... என்றும் மாறாத கட்டளை ;

ஒரு நான்று ..... இவ்வொரு காலத்தில் மட்டும் ,

தடாவியதே ..... கோணலாய்ப் போனது ,

அம் ..... அழகிய ,

தண்ணம் ..... குளிர்ந்த ,

துழாய்ப் ..... அவனது திருத்துழாய் விஷயமாக ஆசைப்பட்டு ,

சோரும் ..... மழைத்துளித்தலை உடைய ,

பனிப் புயல் ..... மேகம் போல் , தடம் ..... பெரிய ,

கண்ணி ..... கண்களை உடைய இவளது , மாமைத் ..... மேனி நிறத்தை ,

திறத்துக் ..... அழிப்பதற்கோ , கொலாம் ..... போலும் !

006 / 100

வேகப் பறவை , இன் பாகன் ; மதன செங்கோல் , நடாவிய கூற்றம் ,
ஞாலத்துள்ளே , கண்டீர் ! உயிர் காமின்கள் !

தடாவிய - அம்பும் , முரிந்த , சிலைகளும் , போகவிட்டு ;
கடாயின , கொண்டு - ஒல்கும் , வல்லி - இது - ஏனும் , அசுரர் , மங்கக் ;
கடாவிய , வேகப் , பறவை - இன் , பாகன் , மதன , செங்கோல் ;
நடாவிய , கூற்றம் , கண்டீர் ! உயிர் காமின்கள் ! ஞாலத்துள்ளே !

இது ..... இவ்வடிவானது ,

தடாவிய ..... வளைந்த ,

அம்பும் ..... பாணங்களையும் ;

முரிந்த ..... ஒடிந்த ,

சிலைகளும் ..... விற்களையும் ;

போகவிட்டு ..... கொள்ளாமல் ஒழித்து ;

கடாயின ..... உபயோகிக்கத் தக்க அம்புகளையும் விற்களையும் ,

கொண்டு ..... தரித்து ;

ஒல்கும் ..... துவண்டு கிடக்கிற ,

வல்லி ஏனும் ..... ஒரு பூங்கொடி போன்ற பெண் வடிவமாய் இருந்ததாயினும் ,

அசுரர் ..... அசுரர்கள் ,

மங்கக் ..... அழியும்படி ,

கடாவிய ..... ஏறி நடத்துகிற ,

வேகப் ..... விரைவை உடைய ,

பறவை ..... பக்ஷிராஜன் ஆகிய வாஹனத்துக்கு ,

இன் ..... இனிய ,

பாகன் ..... பாகன் ஆகிய எம்பெருமானது ஸம்பந்தம் பெற்ற ,

மதன ..... மன்மதனுடைய ,

செங்கோல் ..... ஆளுகையை ,

நடாவிய ..... நடத்துகிற ,

கூற்றம் ..... யமனாய் இருக்கும் !

ஞாலத்துள்ளே ..... இந் நில உலகத்திலே ,

கண்டீர் ..... இவ்வழகிய வடிவத்தைக் பார்த்தவர்களே !

உயிர் ..... உங்களது உயிரைத் ,

காமின்கள் ..... காத்துக் கொள்ளுங்கள் !

007 / 100

திருமால் , கோலம் சுமந்து ;பிரிந்தார் கொடுமை குழறு ;தண் பூங்காலம் கொலோ ?
வினையாட்டியேன் , காண்கின்றனவே அறியேன் !

ஞாலம் , பனிப்பச் , செறுத்து ; நல் - நீர் - இட்டுக் ; கால் , சிதைந்து ;

நீல , வல் - ஏறு , பொராநின்ற , வானம் - இது ! திருமால் ,

கோலம் - சுமந்து , பிரிந்தார் , கொடுமை , குழறு , தண் , பூம் -

காலம் , கொலோ ? அறியேன் , வினையாட்டியேன் , காண்கின்றனவே !

ஞாலம் ..... உலகம் ,

பனிப்பச் ..... நடுங்கும்படி ;

செறுத்து ..... ஒன்றோடு ஒன்று நெருங்கி ,

நல் நீர் ..... தம் உடம்பின் நீரை ,

இட்டு ..... நன்றாக வெளியிட்டு ,

கால் ..... கால்களால் ,

சிதைந்து ..... தரையைக் கீறிக் கொண்டு ,

நீல ..... கரிய ,

வல் ..... வலிய ,

ஏறு ..... எருதுகள் ,

பொராநின்ற ..... போர் செய்யப்பெற்ற ,

வானம் இது ..... ஆகாசம் ஆகும் இது !

திருமால் ..... எம்பெருமானுடைய ,

கோலம் ..... வடிவத்தை ,

சுமந்து ..... உடையதாய் ;

பிரிந்தார் ..... பிரிந்து போன நாயகனது ,

கொடுமை ..... கொடுமையைக் ,

குழறு ..... கூறுகிற ,

தண் ..... குளிர்ந்த ,

பூம் காலம் ..... அழகிய கார்காலம் ,

கொலோ ..... தானோ ?

வினையாட்டியேன... தீ வினை உடைய நான் ,

காண்கின்றனவே .... காண்கின்றவற்றை ,

அறியேன் ..... இன்னது என்று அறிகிறேன் இல்லேன் !

008 / 100

குன்ற நாடர் , மாண் குன்றம் ஏந்தி , தண் மா மலை வேங்கடத்து , சேண் குன்றம் சென்று , பொருள் படைப்பான் கற்ற , திண் அளவே ! அறிந்தோம் !

காண்கின்றனகளும் - கேட்கின்றனகளும் , காணில் ; இந்நாள் ,

பாண்குன்றநாடர் , பயில்கின்றன , இது - எல்லாம் - அறிந்தோம் !

மாண் , குன்றம் - ஏந்தி , தண் , மா , மலை , வேங்கடத்து - உம்பர் , நம்பும் ,

சேண் , குன்றம் -சென்று ; பொருள் ,படைப்பான், கற்ற , திண் -அனவே !

குன்ற ..... மலைகளை உடைத்தான ,

நாடர் ..... நாட்டுக்குத் தலைவரான நாயகர் ,

இந்நாள் ..... இன்றைய தினத்தில் ,

பயில்கின்றன ..... பலவாறாக நடத்துகின்றவையான ;

காண்கின்றனகளும் .... காணப் படுகிற செய்கைகளும் ,

கேட்கின்றனகளும் ..... கேட்கப் படுகிற சொற்களும் ;

காணில் ..... ஆராய்ந்து பார்க்குமிடத்து ,

பாண் ..... வெளி உபசாரம் மட்டுமாம் !

இது எல்லாம் ..... இந்த மிக்க உபசாரம் எல்லாம் ,

மாண் ..... மாட்சிமை தங்கிய ,

குன்றம் ..... கோவர்த்தன கிரியை ,

ஏந்தி ..... களைப்பின்றி எடுத்து ;

தண் ..... குளிர்ந்த ,

மா ..... சிறந்த .

வேங்கடத்து ..... திருவேங்கட மலையின் ,

உம்பர் ..... மேல் உலகத்தாரால் ,

நம்பும் ..... விரும்பப் படுகிற ,

சேண் ..... உயர்ந்த ,

குன்றம் ..... சிகரத்தைச் ,

சென்று ..... சென்று அடைந்து ;

பொருள் ..... அங்கு பொருள் ,

படைப்பான் ..... ஈட்டும் பொருட்டு ,

கற்ற ..... புதியதாக அப்யஸித்த ,

திண் அனவே ..... வலிமையின் செயல் ,

அறிந்தோம் ..... என்று தெரிந்து கொண்டோம் !

009 / 100

வண் பூ மணி வல்லி கண்கள் , பூங் கமலம் ! கரும் சுடர் ஆடி , வெண் முத்து அரும்பி , வண் பூங்குவளை , மா இதழே , மடமான் விழிக்கின்ற !

திண் , பூம் - சுடர் , நுதி , நேமி - அம் - செல்வர் , விண் - நாடு - அனைய ,

வண் , பூ , மணி , வல்லி ! யாரே , பிரிபவர் , தாம் ? இவையோ ,

கண் ? பூம் - கமலம் , கரும் - சுடர் - ஆடி , வெண் , முத்து , அரும்பி ,

வண் , பூம் - குவளை , மட , மான் , விழிக்கின்ற , மா , இதழே !

திண் ..... வலிய ,

பூம் ..... அழகிய ,

சுடர் ....,..... ஒளி உள்ள ,

நுதி ..... கூர்மை உடைத்தான ,

நேமி ..... திரு ஆழியை உடைய ;

அம் ..... அழகிய ;

செல்வர் ..... எல்லா செல்வங்களையும் உடைய எம்பெருமானது ,

விண் நாடு ..... பரம பதத்தை ,

அனைய ..... ஒத்த ,

வண் ..... அழகிய ,

பூ ..... சிறந்த ,

மணி வல்லி ..... பூங் கொடி போன்றவளை ,

யாரே தாம் ..... எவர் தாம் ,

பிரிபவர் ..... பிரிய வல்லார் ? [எவரும் அல்லர்]

கண் ..... இவளது கண்கள் ,

இவையோ ..... கண்களாக மாத்திரம் இருக்கின்றனவா ?

பூம் கமலம் ..... தாமரை மலர்களாய் ;

வண் ..... அழகிய ,

பூம் குவளை ..... செங்கழுநீர் மலர்களுமாய் ;

மா இதழே ..... பெரிய இதழ்களை உடையனவாய் ;

கரும் ..... கரிய அஞ்சனத்தின் ,

சுடர் ..... ஒளியை ,

ஆடி ..... அணிந்து ;

வெண் முத்து ..... பிரிவாற்றாமையால் உண்டான கண்ணீர் , முத்துகள்

அரும்பி ..... தோன்றப் பெற்று ,

மட மான் ..... மடப்பத்தை உடைய ,

விழிக்கின்ற ..... மான் போல விழிக்கின்றன !

010 / 100

திருவேங்கட நாட வல்லிக் கொடிகாள் !நுமது வாயோ ?ஆயோ ?தொண்டையோ ?
அடும் ! இது அறிவு அரிதே ! உரையீர் !

மாயோன் , வட , திருவேங்கட , நாட ; வல்லிக் , கொடிகாள் !

நோய் - ஓ , உரைக்கிலும் , கேட்கின்றிலீர் ! உரையீர் ! நுமது ,

வாயோ அது , அன்றி , வல்வினையேனும் , கிளியும் , எள்கும் ,

ஆயோ ? அடும் , தொண்டையோ ? அறையோ ? இது , அறிவு , அரிதே !

மாயோன் ..... ஆச்சரியமான குண சேஷ்டிதங்களை உடைய எம்பெருமானது ,

வட திருவேங்கட ..... வட திருவேங்கடத்தை ,

நாட ..... இருப்பிடமாக உடைய ,

வல்லிக் கொடிகாள் ..... பூங்கொடி போன்ற இளம் பெண்களே !

நோய் ஓ ..... என்னுடைய காதல் நோயையோ ,

உரைக்கிலும் ..... நீங்கள் தாமாக அறியாவிட்டாலும் , நான் சொன்னாலும் ,

கேட்கின்றிலீர் ..... கேட்கிறதில்லை !

நுமது ..... உங்களுடைய

வாயோ ..... வாயின் அழகோ ?

அது அன்றி ..... அது அல்லாமல் ,

வல்வினையேனும் ..... கொடிய தீவினையை உடைய நானும் ,

கிளியும் ..... கிளியும் ,

எள்கும் ..... தளரும்படியாக ;

ஆயோ ..... உங்களது "ஆயோ" என்ற சொல்லோ ?

தொண்டையோ ..... கோவைக்கனி போன்ற அதரமோ ?

அடும் ..... என்னை உயிரைக் கொலை செய்யும் !

இது ..... இவற்றில் இன்னது என்னை வருத்தும் என்பது ,

அறிவு ..... அறிய ,

அரிதே ..... முடியாமல் இருக்கிறது !

உரையீர் ..... நீங்கள் சொல்லுங்கள் !

அறையோ ..... (இது முறையிட்டுக் கூறும் சொல்)

011 / 100

கண்ணன் விண் அனையாய் ! பெரிய , கெண்டை மீன்களைப் போன்ற உனது கண்கள் , ஒள் முத்தும் , பைம்பொன்னும் , வந்து , பேர்கின்றனவே ! ஓ!

அரியன , யாம் - இன்று , காண்கின்றன ; கண்ணன் , விண் - அனையாய் !

பெரியன , காதம் , பொருட்கோ , பிரிவு - என , ஞாலம் - எய்தற்கு -

உரியன - ஒள் - முத்தும் , பைம் , பொன்னும் - ஏந்தி , ஓரோ , குடங்கைப் ,

பெரியன , கெண்டைக்குலம் ; இவை , ஓ ! வந்து , பேர்கின்றனவே !

யாம் ..... நாம் ,

இன்று ..... இப்பொழுது ,

காண்கின்றன ..... பார்க்கின்றவை ;

அரியன ..... உலகத்தில் வேறு எங்கும் பார்ப்பதற்கு அருமையானவை !

கண்ணன் ..... எம்பெருமானுடைய ,

விண் அனையாய் ..... பரம பதம் போல் அளவற்ற இன்பம் தருபவளே !

பெரியன ..... அதிக ,

காதம் ..... தூரங்களான பல காதங்களில் ,

பிரிவு ..... பிரிந்து போவதானது ,

பொருட்கோ ..... பொருள் சம்பாதிப்பதற்காகவோ ?

என ..... என்று யான் பொதுப்படையாக உலக நிகழ்ச்சியைப் பற்றிக் கேட்க ;

ஞாலம் ..... எல்லா உலகங்களையும் ,

எய்தற்கு ..... வசப்படுத்திக் கொள்ளக் ,

உரியன ..... கூடியவையாயும் ;

ஓரோ ..... தனித்தனி ,

குடங்கைப் ..... ஒரு அகங்கை அளவுப்பட ,

பெரியன ..... பெரியனவாயும் உள்ள ,

கெண்டைக்குலம் ..... கெண்டை மீன்களின் இனமான ,

இவை ..... இக் கண்கள் ; ,

ஒள் முத்தும் ..... பிரிவாற்றாமையால் வந்த கண்ணீர்த் துளிகள் ஆகிய முத்துக்களையும் ,

பைம் பொன்னும் ..... பசலை நிறம் ஆகிய பசும் பொன்னையும் ,

ஏந்தி ..... கொண்டு ;

வந்து ..... என் முன்னே வந்து ,

பேர்கின்றனவே ..... உலாவுகின்றன !

ஓ ..... இது என்ன வியப்பு !

012 / 100

பேர்கின்ற மணி மாமை ; ஊர்கின்ற , பயலை ; இது எல்லாம் , எம்பிரான் , கண்ணன் , தண் அம் துழாய் , சார்கின்ற , நல் நெஞ்சினார் , தந்து போன தனி வளமே !

பேர்கின்றனது ! மணி , மாமை ; பிறங்கி - அள்ளல் , பயலை ;

ஊர்கின்றது ! கங்குல் - ஊழிகளே ! இது - எல்லாம் - இனவே ,

ஈர்கின்ற , சக்கரத்து - எம்பெருமான் , கண்ணன் , தண் - அம் - துழாய் ;

சார்கின்ற , நல் - நெஞ்சினார் , தந்து , போன , தனி , வளமே !

மணி மாமை ..... எனது அழகிய நிறமானது ,

பேர்கின்றனது ..... விகாரப்பட்டு நின்றது !

பிறங்கி ..... விளங்கி ,

அள்ளல் ..... அடர்தலை உடைய ,

பயலை ..... பயலை நிறமானது ,

ஊர்கின்றது ..... மேன்மேல் பரவி நின்றது !

கங்குல் ..... இராப் பொழுது ,

ஊழிகளே ..... பல யுகங்களாக நின்றது !

இனவே ..... இத்தன்மை உள்ள ,

இது எல்லாம் ..... இவை எல்லாம் ;

ஈர்கின்ற ..... கொடியாரை அறுத்திடும் ,

சக்கரத்து ..... திரு ஆழியை உடைய ,

எம்பெருமான் ..... எனது தலைவனான ,

கண்ணன் ..... கண்ண பிரானுடைய ,

தண் ..... குளிர்ந்த ,

அம் ..... அழகிய ,

துழாய் ..... திருத்துழாயில் ,

சார்கின்ற ..... ஆசைப்பட்டுச் செல்கிற ,

நல் நெஞ்சினார் ..... எனது நல்மனம் ,

தந்து போன ..... தான் செல்கிற போது எனக்குக் கொடுத்துவிட்டுச் சென்ற ,

தனி வளமே ..... ஒப்பற்ற செல்வங்கள் ஆகும் !

013 / 100

துழாயைத் துளாவு , தண் வாடை , தடிந்து ; இனி , வளை , காப்பவர் யார் ? எனை , ஊழிகள் , ஈர்வனவே !

தனி , வளர் , செங்கோல் , நடாவு , தழல் , வாய் , அரசு - அவியப் ,

பனி , வளர் , செங்கோல் - இருள் , வீற்று - இருந்தது ! பார் , முழுதும் ,

துனி , வளர் , காதல் , துழாயைத் , துழாவு , தண் , வாடை , தடிந்து ,

இனி , வளை , காப்பவர் - ஆர் ? எனை - ஊழிகள் - ஈர்வனவே !

தனி ..... ஒப்பில்லாமல் ,

வளர் ..... வளரும் தன்மை உள்ள ,

செங்கோல் .... தனது ஒளி ஆகிய அரசாட்சியை ,

நடாவு ..... எங்கும் தடை இன்றிச் செலுத்துகிற ;

தழல் ..... வெப்பம் ,

பார் ..... பூமி ,

முழுதும் ..... முழுவதும் ,

வீற்று ..... அரசு வீற்று ,

இருந்தது ..... இருந்தது !

இனி ..... இனிமேல் ,

துனி ..... துன்பத்தை

வளர் ..... அதிகப் படுத்துகிற ;

காதல் ..... என் ஆசைக்கு இலக்கான ,

துழாயைத் ..... தலைவனது திருத் துழாய் மாலையை ,

துழாவு ..... அளைந்து வருகிற ,

தண் ..... குளிர்ந்த ,

வாடை ..... காற்றை ,

தடிந்து ..... தண்டித்து அழித்து ;

வளை ..... மெலிந்த என் கைகளிலிருந்து , வளைகளை ,

காப்பவர் ..... கழலவிடாது தடுத்துக் காப்பவர்,

ஆர் ..... யார் உளர் ?

ஊழிகள் ..... ஊழியாக நீளும் இராத்திரிகள் ,

எனை ..... என்னைப் ,

ஈர்வனவே ..... பிளக்கின்றன

014 / 100

தலைவியின் கண்கள் ; கயல் மீன்களைப் போலவும் , வேல் போலவும் , பரம பதத்தைப் போலவும் , உள்ளன ! இவை மன்மதனது ஒளியை வெளிவிடுகின்றன !

ஈர்வன , வேலும் , அம் - சேலும் , உயிர் , மேல் , மிளிர்ந்து - இவை - ஓ ;

பேர்வனவோ - அல்ல ! , தெய்வ , நல் , வேள் , கணை , பேர் - ஒளியே ,

சோர்வன ; நீலச் , சுடர் , விடு , மேனி - அம்மான் , விசும்பு - ஊர் ;

தேர்வன ; தெய்வம் , அன்னீரக் கண்ணோ ? இச் , செழும் - கயல் - ஏ !

ஈர்வன ..... பகையைப் பிளப்பனவான ,

வேலும் ..... வேல்கள் போலவும் ;

அம் ..... அழகிய ,

சேலும் ..... சேல் மீன்கள் போலவும் உள்ளனவான ,

இவை ..... இவை ,

உயிர் மேல் ..... எனது உயிரை வசப்படுத்தும் பொருட்டு ,

மிளிர்ந்து ..... அதன் மேல் பாய்ந்து ,

பேர்வனவோ .... தை விட்டு நீங்குவன ,

அல்ல ..... அல்ல !

தெய்வ ..... தெய்வத் தன்மையை உடைய ,

நல் ..... அழகிய ,

வேல் ..... மன்மதனுடைய ,

கணை ..... அம்புகளினுடைய ,

பேர் ஒளியே ..... சிறந்த ஒளியினையே ,

சோர்வன ..... தாம் வெளியிடுவன !

நீலச் சுடர் ..... நீல மணியினுடைய ஒளியை ,

விடு ..... வீசுகின்ற ,

மேனி ..... திருமேனியை உடைய ,

அம்மான் ..... எம்பெருமானது ,

ஊர் ..... திரு நாடாகிய ,

விசும்பு ..... பரம பதத்தை ,

தேர்வன ..... தனக்கு ஒப்பாகத் தேடும் தன்மை உடைய ,

இச் செழும் ..... கொழுத்த ,

கயல் ஏ ..... கயல் மீன்கள் என்று சொல்லத்தக்க இவை ;

தெய்வம் ..... மோஹினி என்னும் பெண் தெய்வத்தை

அன்னீர்க் ..... ஒத்த ,

கண்ணோ ..... உமது கண்களோ ?

015 / 100

"கயலோ , நும் கண்கள் ? " என்று வினவி , நிற்றீர் ! எம்மோடு பயலோ இலீர் !

கயலோ , நும் , கண்கள் ? என்று , களிறு , வினவி , நிற்றீர் !

அயலோர் - அறியிலும் - இது - என்ன , வார்த்தை ! கடல் , கவர்ந்த ,

புயலோடு - உலாம் , கொண்டல் , வண்ணன் , புன , வேங்கடத்து , எம்மொடும் ,

பயலோ - இலீர் ! கொல்லை , காக்கின்ற , நாளும் , பல , பலவே !

களிறு ..... யானை இங்கு வரக் கண்டீரோ ?

வினவி ..... என்று கேட்கத் தொடங்கி ,

நும் ..... உங்கள் ,

கண்கள் ..... கண்கள் ,

கயலோ ..... கயல் மீன்கள் தாமோ ?

என்று ..... என்று எங்கள் கண்களைக் கொண்டாடிக் கொண்டு ,

நிற்றீர் ..... கால் பேராமல் நின்றீர் !

அயலோர் ..... அயலார் ,

அறியிலும் ..... அறிந்தாலும் ;

இது என்ன ..... இது என்ன ,

வார்த்தை ..... பொருந்தாத வார்த்தை ? என்பர் !

கடல் ..... கடல் நீரை ,

கவர்ந்த ..... முழுதும் கொள்ளை கொண்டதும் ;

புயலோடு ..... மழையோடு ,

உலாம் ..... மந்தமாக சஞ்சரிப்பதுமான ;

கொண்டல் ..... காளமேகம் போன்ற ,

வண்ணன் ..... குளிர்ந்த திருநிறத்தை உடைய ,

புன ..... பல கொல்லைகளை உடைய ,

வேங்கடத்து ..... திரு வேங்கட மலையில் ,

கொல்லை ..... நாங்கள் கொல்லை ,

காக்கின்ற ..... காத்து வருகின்ற ,

பல பலவே ..... மிகப் பல ,

நாளும் ..... நாட்களில் ஒன்றிலும் ,

எம்மொடும் ..... எங்களோடு ,

பயலோ ..... நீர் பாகம் உடையீர் ,

இலீர் ..... அல்லீர் !

016 / 100

கண்ணன் , விண் அனையாய் ! அன்பர் பல பல நாள் , கூடிலும் , நீங்கிலும் , யாம் மெலிதும் ! அம்ம ! வாழி ! இப் பாய் இருளே !

பல , பல - ஊழிகள் - ஆயிடும் ! அன்றி - ஓர் , நாழிகையைப் ,

பல , பல , கூறு - இட்ட , கூறு - ஆயிடும் ! கண்ணன் , விண் - அனையாய் !

பல , பல , நாள் - அன்பர் ; கூடிலும் , நீங்கிலும் , யாம் - மெலிதும் !

பல , பல , சூழல் - உடைத்து , அம்ம ! வாழி - இப் , பாய் - இருளே !

கண்ணன் ..... எம்பெருமானுடைய ,

விண் ..... பரம பதம் போல் ,

அனையாய் ..... மிகப் பிரியமானவளே !

பல பல ..... நாயகரைப் பிரிந்த நிலையில் இருட் பொழுது , மிகப்பல ,

ஊழிகள் ..... கற்பங்களாக ,

ஆயிடும் ..... நிற்கும் !

அன்றி ..... அதுவல்லாமல் , நாயகரைக் கூடி இருக்கும் நிலையில் ,

ஓர் நாழிகையைப் ..... இந்தப் பொழுதானது , ஒரு நாழிகையைப் ,

பல பல கூறு இட்ட .... பலப் பல பகுப்புகள் ஆக்கிய கூறுகளில் ,

கூறு ஆயிடும் ..... ஒரு கூறு ஆகிடும் !

அன்பர் ..... நாயகர் ,

பல பல நாள் ..... பல பல நாள்,

கூடினும் ..... கூடி இருந்தாலும் ,

யாம் மெலிதும் ..... காலம் மிகச் சுருங்குவதால் , யாம் வருந்துகிறோம் !

நீங்கிலும் ..... நாயகர் , பல பல நாள் நீங்கி இருந்தாலும் ,

யாம் மெலிதும் ..... காலம் மிக வளர்வதால் , யாம் வருந்துகிறோம் !

இப் பாய் இருளே ..... இந்தப் பரந்த இருட் பொழுது ,

பல பல ..... சிறுமைக்கும் , பெருமைக்கும் ,

சூழல் உடைத்து ..... பல உபாயம் உடையதாய் இருக்கிறது !

அம்ம ..... அந்தோ ! எந்த நிலையிலும் வருத்துகிற ,

வாழி ..... இந்த இருட் பொழுது வாழ்க !

017 / 100

திருமால் , அரவணை மேல் , பள்ளி கொள்ளும் , அலை வீசுகிற கடலே , வாழ்க ! உன் அலைகளால் ; பிரிந்து சென்ற , தலைவரது , தேர் சென்ற வழியை , அழிக்காது , ஒழிவாயாக !

இருள் , விருந்தால் - அன்ன , மா , நீர்த் , திரை , கொண்டு , வாழியரோ !

இருள் , பிரிந்தார் - அன்பர் , தேர் , வழி , தூரல் ; அரவு - அணை , மேல் ,

இருள் , விரி , நீலக் , கரு , நாயிறு , சுடர் கால்வது , போல் ,

இருள் , விரி , சோதி , பெருமான் - உறையும் - எறி , கடலே !

இருள் விரி ..... இருளை வெளி உமிழ்கிற ,

நீலக் ..... நீல ரத்தினம் போன்ற ,

கரு ..... கருமை நிறமுடைய ;

நாயிறு ..... ஸூரிய மண்டலம் ஒன்று ,

சுடர் ..... ஒளி ,

கால்வது போல் ..... வீசுவது போல் ;

இருள் விரி ..... கருமை நிறம் மிக்க ,

சோதி ..... ஒளியை ,

பெருமான் ..... உடைய திருமால் ,

அரவு அணை மேல் .... சேஷ சயனத்தின் மேல் ,

உறையும் ..... நித்ய வாஸம் செய்கிற ,

எறி கடலே ..... அலை வீசுகிற கடலே !

வாழி ..... வாழ்வாயாக !

இருள் ..... இருள் ,

விரிந்தால் ..... பரப்பினால் ,

அன்ன ..... போன்று ,

மா ..... கருத்த ,

நீர்த் ..... நீரை உடைய ,

திரை கொண்டு ..... அலைகளால் ,

இருள் ..... இருளிலே ,

பிரிந்தார் ..... என்னை விட்டுச் சென்ற ,

அன்பர் ..... நாயகருடைய ,

தேர் வழி ..... தேர் போன வழியை ,

தூரல் ..... அழிக்காது ஒழிவாயாக !

018 / 100

கண்ணீர் சொரியும் காரிகையே ! இது , கண்ணனது மண்ணையும் , விண்ணையும் ,கவர்ந்து செல்லும் , பிரளய காலமோ ? அன்றி , மழைக் காலமோ ? அறியேன் !

கடல் , கொண்டு - எழுந்தது , வானம் ; அவ் , வானத்தை - அன்றிச், சென்று ,

கடல் , கொண்டு , ஒழிந்த - அதனால் - இது ! கண்ணன் , மண்ணும் , விண்ணும் ;

கடல் , கொண்டு , எழுந்த - அக் , காலம் , கொல் - ஓ ? புயல் - காலம் - கொலோ ?

கடல் , கொண்ட , கண் - நீர் ; அருவி , செய்யாநிற்கும் - காரிகையே !

கடல் கொண்ட .... கடல் அளவினதான ,

கண் நீர் ..... கண்ணீர் ,

அருவி ..... வெள்ளத்தை ,

செய்யாநிற்கும் ..... சொரிந்து நிற்கும் ,

காரிகையே ..... அழகிய நங்காய் !

வானம் ..... ஆகாயமானது ,

கடல் கொண்டு ..... கடலைக் கவர்ந்து கொண்டு ,

எழுந்தது ..... கிளம்பியது !

கடல் ..... அக்கடல் தான் ,

அன்றிச் ..... கோபித்துக் கொண்டு ;

அவ் வானத்தை ..... தன்னைக் கவர்ந்த ஆகாயத்தை ,

சென்று ..... கவர்ந்து , கொண்டு ..... கொண்டு ,

ஒழிந்த அதனால் ... விட்டதனால் , இது ..... இந்த நிலை உண்டாகிறது !

கண்ணன் ..... எம்பெருமானுடைய உடைமையான ,

மண்ணும் ..... மண் உலகத்தையும் , விண்ணும் ..... விண் உலகத்தையும் ,

கடல் கொண்டு ..... பிரளய ஸமுத்ரம் தன்னுடையதாக ஆக்கிக் கொண்டு ,

எழுந்த ..... மேல் கிளர்ந்த , அக் காலம் ..... அந்தக் கல்பாந்த காலம் ,

கொல் ஓ ..... தானோ ?, புயல் காலம் ..... அன்றி , மழைக்காலம்

கொல் ஓ ..... தானோ ? அறியேன் !

019 / 10

புள்ளர் , தண்ணம் துழாய் , இறை , கூய் , அருளார் !என் சில் மொழிக்கே , சேரி , கை ஏறும் பழியாய் , விளைந்தது ! வாழியரோ !

காரிகையார் , நிறை , காப்பவர் , யார் - என்று , கார் , கொண்டு -இன்னே ;

மாரி , கை - ஏறி , அறை - இடும் , காலத்தும் ; வாழியரோ !

சாரிகைப் , புள்ளர் - அம் - தண்ணம் - துழாய் - இறை , கூய் - அருளார் !

சேரி , கை - ஏறும் ; பழி - ஆய் , விளைந்தது - என் , சில் - மொழிக்கே ;

காரிகையார் .... ஸ்த்ரீகளுள் ,

நிறை ..... எம்முன் அடக்கத்தை ,

காப்பவர் ..... அழியாமல் பாதுகாத்துக் கொள்ள வல்லவர் ,

யார் ..... யாவர் உள்ளார் ?

என்று ..... என்று கருதிச் செருக்கி ,

மாரி ..... மேகங்கள் ,

கார் ..... கருமை நிறம் ,

கொண்டு ..... கொண்டு ,

இன்னே ..... இவ்வாறு ,

கை ஏறி ..... ஒழுங்காக வானத்தின் மீது , ஏறி நின்று ,

அறை இடும் ..... அறை கூவும் ,

காலத்தும் ..... காலத்திலும் ;

சாரிகைப் ..... விரைந்த நடையை உடைய ,

புள்ளர் ..... கருடப் பறவையை வாஹனமாய் உடைய இத் தலைவர் ;

அம் ..... அழகிய ,

தண்ணம் ..... குளிர்ந்த ,

துழாய் ..... தமது திருத் துழாயை ;

கூய் ..... இவளைக் கூவி அழைத்து ,

இறை ..... சிறிது ,

அருளார் ..... இவளுக்குக் கொடுக்க வில்லை !

என் ..... என் மகளான ,

சில் ..... சில ,

மொழிக்கே ..... பேச்சுக்களை உடைய இவளுக்கு ;

சேரி ..... இவ் வூர் முழுதும்

கை ஏறும் ..... பரவும் ,

பழி ஆய் ..... பழியாய்ப் ,

விளைந்தது ..... பலித்தது !

வாழியரோ ..... இவள் இத் துன்பம் நீங்கி வாழ்ந்திடுக !

020 / 100

என் அம்மனைமீர் ! என் மொழி கேண்மின் ! உலகேழும் உண்டான் ;சொல் ,மொழி ; மாலை அம் தண்ணம் துழாய் கொண்டு , சூட்டுமினே !

சில் - மொழி , நோயோ ? கழி , பெரும் - தெய்வம் ! இந் நோய் - இனது - என்று - இல் மொழி , கேட்கும் - இளம் - தெய்வம் - அன்று - இது ! வேல ! நில் , நீ ! என் , மொழி , கேண்மின் ! என் - அம்மனைமீர் ! உலகு - ஏழும் - உண்டான் , சொல் - மொழி ; மாலை - அம் - தண்ணம் - துழாய் , கொண்டு , சூட்டுமினே !

சில் மொழி ..... சில பேச்சுக்களே பேசவல்ல இவளுடைய ,

நோயோ ..... நோயோ என்றால் ;

கழி பெரும் ..... மிகப் பெரிய ,

தெய்வம் ..... தெய்வமான எம்பெருமான் விஷயமாக உண்டானது !

இந் நோய் ..... இந்த நோய் ,

இனது என்று ..... இப்படிப்பட்டது என்று வரையறுத்து ,

இல் மொழி ..... இல்லாத மொழிகளைப் படைத்து ,

கேட்கும் ..... சொல்லக் கேட்கத் தக்க ,

இளம் தெய்வம் .... க்ஷுத்ர தெய்வத்தின் விஷயமாக வந்தது ,

அன்று இது ..... அன்று இது !

வேல ..... வெறியாட்டாளனே !

நீ நில் ..... நீ சற்று விலகி நிற்பாயாக !

என் அம்மனைமீர் . எனது தாய்மார்களே !

என் மொழி ..... இவளது தன்மையை உண்மையாக அறிந்த எனது ,

கேண்மின் ..... வார்த்தையைக் கேளுங்கள் !

லகு ஏழும் ..... எல்லா உலகங்களையும் ,

உண்டான் ..... பிரளயம் கொள்ளாதபடி வயிற்றில் கொண்டு காத்த எம்பெருமானது ,

சொல் மொழி ..... திருநாமத்தைச் ,

கொண்டு ..... சொல்லிக் கொண்டு ,

மாலை ..... அவனது மாலையாக உள்ள ,

அம் ..... அழகிய ,

தண்ணம் ..... குளிர்ந்த ,

துழாய் ..... திருத்துழாயை ,

சூட்டுமினே ..... இவளுக்குச் சூட்டுங்கள் !

021 / 100

மாயையினால் , ஈட்டிய வெண்ணெய் தொடு உண்ணப் போந்து ; இமில் ஏற்று வன் கூன் கோட்டு இடை ; அடல் ஆயர் தம் கொம்பினுக்கே , ஆடினை கூத்து !

சூட்டு , நல் - மாலைகள் , தூயன - ஏந்தி ; விண்ணோர்கள் , நல் - நீர் - ஆட்டி ; அம் - தூபம் - தராநிற்கவே - அங்கு ; ஓர் , மாயையினால் , ஈட்டிய , வெண்ணெய் , தொடு - உண்ணப் , போந்து - இமில் - ஏற்று , வன் , கூன் , கோட்டு - இடை - ஆடினை , கூத்து ! அடல் - ஆயர் - தம் , கொம்பினுக்கே !

அங்கு ..... பரம பதம் ஆகிற அந்த விபூதியில் ,

விண்ணோர்கள் ..... நித்ய ஸூரிகள் ,

நல் நீர் ஆட்டி ..... நன்றாகத் திரு மஞ்சனம் ஸமர்ப்பித்து ,

தூயன ..... பரிசுத்தமான ,

சூட்டு ..... உனக்குச் சூட்டத் தகுந்த ,

நல் மாலைகள் ..... அழகிய மாலைகளைக் ,

ஏந்தி ..... கைகளில் ஏந்திக் கொண்டு நின்று ;

அம் தூபம் ..... அழகிய தூபத்தை ,

தராநிற்கவே ..... ஸமர்ப்பித்து நிற்க ;

ஓர் ..... உனது ஒப்பற்ற ,

மாயையினால் ..... மாயையினால் ;

ஈட்டிய ..... ஆய்ப்பாடிப் பெண்கள் கடைந்து சேர்த்த ,

வெண்ணெய் ..... வெண்ணெயை ,

தொடு ..... எடுத்து ;

உண்ணப் போந்து .... அமுது செய்ய விரும்பி வந்து ;

அடல் ..... வலிமையை உடைய ,

ஆயர் தம் ..... இடையர் குலத்தில் பிறந்த ,

கொம்பினுக்கே ...பூங்கொம்பு போன்ற மகளான நப்பின்னையைதிருமணம் செய்ய ;

இமில் ..... முசுப்பை உடைய ,

ஏற்று ..... ஏழு எருதுகளினுடைய ,

வன் கூன் ..... வலிய வளைந்த ,

கோட்டு இடை ..... கொம்புகளில் நடுவில் ,

கூத்து ஆடினை ..... கூத்தாடி அருளினாய் !

022 / 100

ஐயர் ; கை , கொம்பு ஆர் தழை ! வினவுவது , அம்பு ஆர் கலிறு ! புள் ஊரும் கள்வர் பார் அகத்து , என்றும் ஆடாதன ! தம்மில் கூடாதன ! வினாச் சொல்லவோ , எம்மை , வைத்தது , இவ்வான் புனத்தே ?

கொம்பு - ஆர் , தழை , கை, சிறு , நாண் , எறிவு - இலம் ; வேட்டை , கொண்டாட்டு ,

அம்பு - ஆர் , கலிறு , வினவுவது - ஐயர் ; புள் - ஊரும் - கள்வர் ,

தம் , பார் - அகத்து - என்றும் - ஆடாதன ! தம்மில் - கூடாதன !

வம்பு - ஆர் , வினாச் , சொல்லவோ ; எம்மை , வைத்தது - இவ்வான், புனத்தே ?

ஐயர் ..... இப் பெரியவருடைய ,

கை ..... கையில் உள்ளது ,

கொம்பு ஆர் ..... மரக் கிளையில் பொருந்திய ,

தழை ..... தழை ஆகும் !

சிறு நாண் ..... சிறிய நாணியை ,

எறிவு இலம் ..... கை விரலில் தெறித்து , ஒலி செய்தலைக் கேட்டிலோம் !

கொண்டாட்டு .... இவர் தமக்குப் பிரியமாக வெளிக்காட்டுவது ,

வேட்டை ..... வேட்டை ஆகும் !

வினவுவது ..... இவர் நம்மை நோக்கிக் கேட்பது ,

அம்பு ஆர் ..... எய்யப் பட்ட அம்போடு பொருந்திய ,

களிறு ..... யானையாம் ! , புள் ..... கருடப் பறவையை .

ஊரும் ..... ஏறி நடத்துகிற , கள்வர் ..... மாயவரான திருமாலினது ,

தம் ..... உரிய பொருள் ஆகிய , பார் அகத்து ..... இவ் வுலகத்தில்

என்றும் ..... எக்காலத்திலும் , ஆடாதன ..... நடவாதன !

தம்மில் ..... தமக்குள் , கூடாதன ..... ஒன்றுக்கொன்று பொருந்தாதன !

வம்பு ஆர் ..... புதுமை மிக்க , வினாச் ..... கேள்விகளுக்கு ,

சொல்லவோ ..... விடை கூறும் பொருட்டோ , எம்மை ..... எம்மை ,

இவ்வான் ..... இந்தப் பெரிய கொல்லையில் ,

வைத்தது ..... நமது முது குரவர் காவல் வைத்தது ?

023 / 100

மகளிர் ! புண்டரீகத்து அம் கேழ் வனம் ஓர் அனைய கண்ணான் ; கண்ணன் , வான் நாடு அமரும் தெய்வத்து இனம் ஓர் அனையீர்கள் ! நும் இயல்வுகள் இவையோ ?

புனமோ ? புனத்து , அயலே , வழி , போகும் , அரு , வினையின் ,

மனமோ ? மகளிர் ! நும் - காவல் , சொல்லீர் ! புண்டரீகத்து - அம் , கேழ் ,

வனம் - ஓர் - அனைய , கண்ணான் , கண்ணன் , வான் - நாடு - அமரும் - தெய்வத்து -

இனம் - ஓர் - அனையீர்கள் - ஆய் ; இவையோ , நும் - இயல்வுகளே ?

மகளிர் ..... பெண்களே !

நும் காவல் ..... உங்கள் காவலுக்கு உரிய பொருள் ,

புனமோ ..... இந்தத் தினைப் புனமோ ?

புனத்து ..... அல்லது இந்தப் புனத்தின் ,

அயலே ..... அருகே ,

வழி போகும் ..... வழிச் செல்லுகிற ,

அரு வினையின் ..... பாவியேனான என்னுடைய ,

மனமோ ..... நெஞ்சமோ ?

சொல்லீர் ..... சொல்லுங்கள் !

புண்டரீகத்து ..... செந்தாமரை மலரின் ,

அம் ..... அழகிய ,

கேழ் ..... ஒளியை உடைய ,

வனம் ..... காட்டை ,

ஓர் அனைய ..... ஒருவாறு ஒத்திருக்கிற ,

கண்ணான் ..... திருக் கண்களை உடையவன் ஆகிய ,

கண்ணன் ..... கண்ண பிரானது , வான் நாடு ..... பரம பதத்தில் ,

அமரும் ..... வாஸம் செய்கிற ,

தெய்வத்து இனம் ..... நித்ய ஸூரி வர்க்கத்தை ,

ஓர் ..... ஒருவாறு , அனையீர்கள் ஆய் .... ஒத்தவர்களாய் ;

நும் இயல்வுகளே ..... நீங்கள் கொண்டிருக்கிற தன்மைகள் ,

இவையோ ..... அயலார் மனத்தைக் கொள்ளைத் தகுமோ ?

024 / 100

புயல் வாய் ; இன நிரை காத்த ; புள் ஊர்தி ; துழாய் மலர் மேல் மனத்தொடு ; வஞ்ச நோய் கொண்டு , உலாவும் ; எம் கோல் வளைக்கு , என் ஆம் கொல் ?

இயல்வு - ஆயின , வஞ்ச , நோய் , கொண்டு - உலாவும் ; ஓரோ , குடங்கைக், கயல் , பாய்வன , பெரு , நீர்க் , கண்கள் , தம்மொடும் ; குன்றம் - ஒன்றால் , புயல் , வாய் - இன , நிரை , காத்த , புள் - ஊர்தி , கள் - ஊரும் - துழாய்க் , கொயல் , வாய் , மலர் , மேல் ; மனத்தொடு-என்-ஆம் - கொல் ? எம்-கோல் ,வளைக்கே !

இயல்வு ஆயின .... இயற்கை ஆனதும் ;

வஞ்ச ..... பிறர் அறியாதபடி உள்ளதுமான ,

நோய் ..... காதல் நோயை ,

கொண்டு ..... உடையவையும் ;

உலாவும் ..... ஆற்றாமை மிகுதியால் எங்கும் பரந்து பார்க்கிற ,

ஓரோ ..... ஒவ்வொன்று ,

குடங்கைக் ..... ஒரு அகங்கை அளவாய் உள்ளவையும் ;

கயல் ..... கயல் மீன் போலப் ,

பாய்வன ..... பிறழ்வனவாயும் ஆகிய ;

பெரு நீர்க் ..... மிக்க நீர் பரப்பை உடைய ,

கண்கள் ..... கண்கள் ,

தம்மொடும் ..... உடனும் ;

புயல் வாய் ..... முன்பு பெரு மழை பெய்த காலத்து ,

குன்றம் ஒன்றால் .. கோவர்த்தன மலையினால் ,

இன நிரை ..... பசுக் கூட்டங்களைக் ,

காத்த ..... காத்து அருளினவனும் ;

புள் ஊர்தி ..... கருட வாஹனனுமான கண்ண பிரானது ,

கள் ஊரும் ..... தேன் பெருகும் ,

துழாய்க் ..... திருத் துழாயினுடைய ,

கொயல் வாய் ..... பறிக்கப்படுதல் பொருந்தின ,

மலர் மேல் ..... பூவின் மேல் ஆசைப் பட்டுச் சென்ற ,

மனத்தொடு ..... மனத்தோடும் ,

எம் கோல் ..... அழகிய ,

வளைக்கே ..... வளையல்களை உடைய என் மகளுக்கு ,

என் ஆம் கொல் .... இன்னும் என்ன நிலைமை நேருமோ ?

025 / 100

எல்லார்க்கும் கோன் ஆன கண்ணன் ; உகக்கும் துழாய் , எம் கோல் வளைக்கே , செங்கோல் வளைவு , விளைவிக்கும் ! இனி நானிலத்தே , என் செய்யாது ?

எம் , கோல் , வளைக்கே , முதல் - ஆக் , கண்ணன் , மண்ணும் , விண்ணும் - அளிக்கும் ;

செங்கோல் , வளைவு , விளைவிக்கும் - ஆல் ; திறல் , சேர் - அமரர் ,

தம் - கோனுடைய , தம் - கோன் , உம்பர் - எல்லா - அவர்க்கும் - தம் - கோன் ,

நம் - கோன் - உகக்கும் - துழாய் , என் , செய்யாது - இனி , நானிலத்தே ?

திறல் சேர் ..... வலிமை பொருந்திய ,

அமரர் தம் ..... தேவர்கள் எல்லோர்க்கும் ,

கோனுடைய ..... தலைவன் ஆன பிரமனுக்கும் ,

தம் கோன் ..... தலைவனாய் இருப்பவனும் ;

உம்பர் ..... பரம பதத்தில் உள்ள நித்யஸூரிகள் ,

எல்லா அவர்க்கும் ... எல்லோர்க்கும் ,

தம் கோன் ..... தலைவனாய் இருப்பவனும் ;

நம் கோன் ..... இவ்வுலகத்தில் உள்ள நமக்கும் தலைவனாகிய எம்பெருமான் ,

உகக்கும் ..... விரும்பித் தரித்துள்ள ,

துழாய் ..... திருத்துழாயானது ;

எம் ..... எனது கையில் உள்ள ,

கோல் ..... அழகிய ,

வளைக்கே ..... வளை ,

முதல் ஆக் ..... நிமித்தமாக ;

கண்ணன் ..... அப் பெருமானது ,

மண்ணும் ..... லீலா விபூதியையும் ,

விண்ணும் ..... நித்ய விபூதியையும் ,

அளிக்கும் ..... பாதுகாக்கிற ,

செங்கோல் ..... தட்டில்லாத கட்டளையின் நேர்மைக்கும் ,

வளைவு ..... ஒரு கோடுதலை ,

விளைவிக்கும் ..... உண்டாக்கியது !

இனி ..... இங்ஙனம் ஆனபின்பு ,

நானிலத்தே ..... இவ்வுலகத்தில் ,

என் ..... அந்தத் திருத்துழாய் வேறு எத் தீங்கைத்தான் ,

செய்யாது ..... செய்யாது ?

ஆல் ..... (அசைச் சொல்)

026 / 100

பொன்னே ! விண்ணோர் ; கால் நிலம் தோய்ந்து , தொழும் கண்ணன் வெஃகா ,உது !
அம் பூம் தேன் இளம் சோலை அப்பாலதே ! எப்பாலைக்கும் , சேமத்தது !

நால் - நிலம் , வாய்க் , கொண்டு , நல் - நீர் - அறம் - என்று , கோது , கொண்ட ;

வேனில் - அம் - செல்வன் ; சுவைத்து - உமிழ் , பாலை ; கடந்த , பொன்னே !

கால் - நிலம்-தோய்ந்து ; விண்ணோர் - தொழும் , கண்ணன் , வெஃகா - உது ! அம் - பூம் ,

தேன் - இளம் - சோலை - அப்பாலது ! எப்பாலைக்கும் , சேமத்தது !

நால் ..... முல்லை , குறிஞ்சி , மருதம் , நெய்தல் என்னும் நால் வகை ,

நிலம் ..... நிலங்களையும் ,

வாய்க் கொண்டு ..... தன் கிரண முகத்தாலே , வாயில் பெய்து கொண்டு ,

நல் நீர் ..... ஸாரமான நீர்ப்பசை ,

அற மென்று ..... அறும்படி மென்று ,

கோது கொண்ட .... அஸாரமான பாகம் இது என்று அறிந்த ,

வேனில் ..... வெப்பத்தைத் ,

அம் செல்வன் ..... தனக்குச் செல்வமாக உடைய ஸூரியன் ,

சுவைத்து ..... உருசி பார்த்து ,

உமிழ் ..... வெறுத்துக் கழித்த ,

பாலை ..... பாலை நிலத்தைத் ,

கடந்த ..... தாண்டி வந்த ,

பொன்னே ..... பொன் போன்றவளே !

விண்ணோர் ..... மேல் உலகத்தோர் யாவரும் ;

கால் ..... நிலம் தோய்தல் இல்லாத தமது கால்களை ,

நிலம் தோய்ந்து ..... நிலத்தில் படியும்படி ,

தொழும் ..... இங்கு வந்து நிலைத்து நின்று வணங்கும்படியான ,

கண்ணன் ..... கண்ணபிரானது ,

வெஃகா ..... திவ்ய தேசமான வெஃகா ,

உது ..... அடுத்து உள்ளது !

அம் ..... அழகிய ,

பூம் தேன் ..... பூவையும் தேனையும் உடைய ,

இளம் ..... இளமை மாறாத ,

சோலை ..... சோலையானது ,

அப்பாலது ..... அவ்விடத்து உள்ளது !

எப்பாலைக்கும் ..... அது நமது எல்லாத் துன்பங்களுக்கும் ,

சேமத்தது ..... மாறாய் இன்பம் தருவது ஓர் இடமாம் !

027 / 100

பண்டு எல்லாம் , அறை கூய் ; யாமங்கள் தோறும் , எரி வீசு அவ் வாடை , நம் கண்ணன் , அம் தண் அம் துழாய்த் தாமம் புனைய ; ஈதோ வந்து , தண் என்றதே !

சேமம் - செம் - கோன் - அருளே ; செறுவாரும் , நட்பு - ஆகுவர் - என்று , ஏமம் , பெற , வையம் , சொல்லும் , மெய்யே ; பண்டு - எல்லாம் - அறை , கூய் , யாமங்கள் - தோறு - எரி , வீசு , நம் - கண்ணன் - அம் - தண் - அம் - துழாய்த் , தாமம் , புனைய ; அவ் வாடை - ஈதோ , வந்து , தண் - என்றதே !

செம் கோன் ..... எல்லாப் பொருள்களுக்கும் நேரில் தலைவன் ஆன எம்பெருமானது

அருளே ..... திருவருளே ,

சேமம் ..... நம்மைப் பாதுகாப்பது என்று கொள்ள ;

செறுவாரும் ..... பிரதிகூலரும் ,

நட்பு ஆகுவர் .... அநுகூலர் ஆவர் ,

என்று ..... என்று ,

ஏமம் பெற ..... உறுதி பொருந்த ,

வையம் ..... உலகத்தோர் ,

சொல்லும் ..... கூறுகிற ,

மெய்யே ..... உண்மை மொழியின் படியே ;

பண்டு ..... முன்பு பிரிந்திருந்த காலத்தில் ,

எல்லாம் ..... எல்லாம் ,

அறை கூய் ..... பகைத்து எதிர் வந்து சண்டைக்கு அழைத்து ;

யாமங்கள் ..... இரவுகள் ,

தோறு ..... தோறும் ,

எரி ..... அக்நி ஜ்வாலையை ,

வீசு ..... எம் மேல் வீசுகின்ற ,

அவ் வாடை ..... அந்தக் காற்றானது ,

நம் ..... நமது தலைவன் ஆன ,

கண்ணன் ..... எம்பெருமானது ,

அம் ..... அழகிய ,

தண் ..... குளிர்ந்த ,

அம் துழாய்த் ..... திருத் துழாய் மாலையை ,

தாமம் ..... யாம் பெற்று ,

புனைய ..... தரித்ததனால் ,

ஈதோ ..... இதோ , வந்து ..... வந்து இப்பொழுதே ,

தண் ..... குளிர்ச்சியாய் ,

என்றதே ..... இருக்கிறதே !

028 / 100

பொரு நீர்த் திரு அரங்கா ! வண்ணம் துழாவி , ஓர் வாடை உலாவும் ! அருளாய் !

தண் - அம் - துழாய் , வளை கொள்வது , யாம் - இழப்போம் ; நடுவே ,

வண்ணம் - துழாவி - ஓர் , வாடை - உலாவும் , வள் , வாய் - அலகால் ,

புள் - நந்து - உழாமே , பொரு , நீர்த் , திரு - அரங்கா ! அருளாய் !

எண்ணம் - துழாவும் - இடத்து ; உளவோ , பண்டும் - இன் - அன்னவே ?

வள் ..... கூர்மையான ,

வாய் ..... வாயின் ,

அலகால் ..... நுனியினால் ;

புள் ..... பறவைகள் ,

நந்து ..... தன்னிடத்தில் உள்ள ,

உழாமே ..... சங்கைக் கொத்தாதபடி ,

பொரு ..... அலை மோதுகிற ,

நீர்த் ..... காவிரி நீர் சூழ்ந்த ,

திரு அரங்கா .... ஸ்ரீரங்கம் என்னும் திருப்பதியை உடையவனே !

தண் ..... குளிர்ந்த ,

அம் ..... அழகிய ,

துழாய் ..... உன் திருத் துழாயானது ,

வளை ..... எமது கை வளைகளை ,

கொள்வது ..... கொள்ளை கொள்வது ;

யாம் ..... உன் பக்கல் ஈடுபட்ட நாம்,

இழப்போம் ..... வளையை இழக்கிறோம் !

ஓர் ..... எமக்கும் தமக்கும் ஸம்பந்தமே இல்லாத ஒரு ,

வாடை ..... காற்றானது ,

நடுவே ..... இடையிலே பிரவேசித்து ;

வண்ணம் ..... எமது மாமை நிறத்தைக் கவரும் பொருட்டு ,

துழாவி ..... தடவித் தேடிக் கொண்டு ,

உலாவும் ..... ஸஞ்சரிக்கத் தொடங்குகிறது !

அருளாய் ..... மாமை இழக்காதபடி வந்து அருள வேண்டும் !

எண்ணம் ..... மனம் ,

ழாவும் ..... தடுமாறும் ,

இடத்து ..... அளவிலும் ,

பண்டும் ..... முன்பும் ,

இன் அன்னவே .. இப்படிப்பட்ட நிலைமைகள் ,

உளவோ ..... வேறு எங்கும் உளதோ !

029 / 100

மின் அன்ன மேனிப் , பெருமான் உலகில் , பெண் தூது செல்லா ,அன்னன்ன நீர்மை , கொலோ ?

இன்னன்ன , தூது - எம்மை - ஆள் - அற்றப் , பட்டு - இரந்தாள் - இவள் - என்று ,

அன்னன்ன , சொல்லாப் , பெடையோடும் , போய் , வரும் ; நீலம் - உண்ட ,

மின் - அன்ன , மேனிப் , பெருமான் - உலகில் - பெண் , தூது , செல்லா ;

அன்னன்ன , நீர்மை , கொலோ ? குடிச் , சீர்மை - இல் - அன்னங்களே !

குடிச் சீர்மை இல் .... உயர்குடிப் பிறப்பால் வரும் சிறப்பு இல்லாத ,

ன்னங்களே ..... இந்த அன்னப் பறவைகள் ;

இவள் ..... "இந்தப் பராங்குச நாயகி ஆனவள் ,

ஆள் அற்றப் பட்டு .... தனக்கு வேறு ஆள் இல்லாமையால் ,

இன்னன்ன தூது ..... இப்படிப்பட்ட தூது ஆக ,

எம்மை ..... நம்மைக் ,

இரந்தாள் ..... குறை கூறி வணக்கத்தோடு வேண்டிக் கொண்டாள்"

என்று ..... என்று எண்ணி ,

அன்னன்ன ..... அப்படிப்பட்ட தூது மொழிகளை ,

சொல்லாப் ..... தலைவனிடம் சென்று சொல்லாமல் ,

பெடையோடும் ..... தமக்கு இனிய பெண் பறவைகளோடு ,

போய் வரும் ..... மகிழ்ச்சியாக உலவித் திரிகின்றன !

நீலம் உண்ட ..... நீல நிறத்தை உட்கொண்ட ,

மின் அன்ன ..... மின்னல் போன்ற ,

மேனிப் ..... திருமேனியை உடைய ,

பெருமான் ..... எம்பெருமானுடையதான ,

உலகில் ..... உலகத்தில் ,

பெண் ..... பெண்களுக்காக

தூது செல்லா ..... தூது செல்வது இல்லாத ,

அன்னன்ன ..... அப்படிப்பட்ட ,

நீர்மை கொலோ ..... தன்மை உடைமையோ ?

030 / 100

கண்ணன் வைகுந்தனோடு , என் நெஞ்சினாரைக் கண்டால் , அவரிடை , என்னைச் சொல்லி , " நீர் இன்னம் செல்லீரோ ? இது தகவோ ? " என்று இசைமின்களே !

அன்னம் - செல்வீரும் , வண்டானம் - செல்வீரும் - தொழுது - இரந்தேன் !

முன்னம் - செல்வீர்கள் ! மறவேன்மினோ ! கண்ணன் வைகுந்தனோடு -

என் - நெஞ்சினாரைக் - கண்டால் - என்னைச் , சொல்லி - அவரிடை , நீர் ,

இன்னம் - செல்லீரோ ? இதுவோ ? தகவு - என்று - இசைமின்களே !

அன்னம் செல்வீரும் ..... பறந்து செல்லுகிற அன்னப் பறவைகளாகிய உங்களையும் ,

வண்டானம் செல்வீரும் .... அப்படியே செல்பவர்களாகிய வண்டானமாகிய உங்களையும் ,

தொழுது இரந்தேன் ..... யான் வணங்கிப் பிரார்த்திக்கிறேன் !

முன்னம் செல்வீர்கள் ..... உங்களுள் முன்னே செல்பவர்கள் ,

மறவேன்மினோ ..... என் வேண்டுகோளை மறவாது ஒழிவீராக !

கண்ணன் ..... கிருஷ்ணாவதாரம் செய்தவனும் ,

வைகுந்தனோடு ..... பரம பதத்துக்குத் தலைவன் ஆகிய பெருமானுடன் ,

என் நெஞ்சினாரைக் ..... முன்பு போயிருக்கிற , என் மனத்தை ,

கண்டால் ..... அங்கு நீங்கள் பார்த்தால் ,

என்னைச் சொல்லி ..... அம்மனதிடம் என்னைக் குறிப்பிட்டுச் சொல்லி ,

அவரிடை ..... அவரிடத்து ,

நீர் ..... நீர் ,

இன்னம் செல்லீரோ ..... இன்னும் போய்ச் சேராது இருக்கிறீரோ ?

இது தகவோ என்று ..... இது தகுதியோ ?

இசைமின்களே ..... என்று சொல்லுங்கள் !

31 / 100

திருவேங்கடத்து வழி கொண்ட மேகங்களே ! " என் தலை மேல் அசைமின்கள் !" என்றால் அசையும் கொல் , ஆம் ?

இசைமின்கள் , தூது - என்று - இசைத்தால் - இசை - இலம் ! என் , தலை , மேல் அசைமின்கள் ! என்றால் - அசையும் - கொல் - ஆம் ? அம் , பொன் , மா , மணிகள் , திசை , மின் , மிளிரும் - திருவேங்கடத்து , வன் , தாள் , சிமயம் , மிசை ; மின் மிளிரிய , போவான் , வழிக் , கொண்ட , மேகங்களே !

அம் பொன் ..... அழகிய பொன்னும் ,

மா மணிகள் ..... சிறந்த இரத்தினங்களும் ,

திசை ..... திக்குகள் தோறும் ,

மின் மிளிரும் ..... மின்னல் போல் ஒளி வீசும் ,

திருவேங்கடத்து ..... திரு வேங்கட மலையினது ,

வன் தாள் ..... வலிய அடிவாரத்தை உடைய ,

சிமயம் மிசை ..... சிகரத்தின் மேல் , (சிகரத்தை நோக்கி) ,

மின் மிளிரிய ..... மின்னல்கள் விளங்கச் ,

போவான் ..... செல்லும் பொருட்டு ,

வழிக் கொண்ட ..... பிரயாணப் பட்ட ,

மேகங்களே ..... மேகங்களானவை ;

தூது இசைமின்கள் .... "நீங்கள் எமக்காகத் தூதுக்கு இசைந்து செல்லுங்கள் !"

என்று இசைத்தால் ..... என்று சொல்லி வேண்டினாலும் ,

இசை இலம் ..... அதற்கு உடனே உடன்பட்டுச் செல்லவில்லை !

என் தலை மேல் ..... "நீங்கள் என் தலையின் மேல்

அசைமின்கள் ..... பொருந்துங்கள் !"

என்றால் ..... என்று வேண்டினால் ,

அசையும் ..... அவை அங்கு செல்லக் ,

கொல் ஆம் ..... கூடுமோ ?

032 / 100

ஓ மேகங்கள் ! உங்களுக்கு , திருமால் திருமேனி ஒக்கும் யோகங்கள் , எவ்வாறு பெற்றீர் ? ஆகங்கள் நோவ , வருத்தும் தவம் ஆம் , அருள் பெற்றதே !

மேகங்கள் - ஓ ! உரையீர் ! திருமால் , திருமேனி - ஒக்கும் ,

யோகங்கள் - உங்களுக்கு - எவ்வாறு , பெற்றீர் ? உயிர் - அளிப்பான் ,

மா , கங்கள் - எலாம் - திரிந்து ; நல் - நீர்கள் , சுமந்து ; நும் - தம் ,

ஆகங்கள் , நோவ , வருத்தும் - தவம் - ஆம் - அருள் , பெற்றதே !

ஓ மேகங்கள் ..... ஓ மேகங்களே !

திருமால் ..... எம்பெருமானது ,

திருமேனி ..... திருமேனியை ,

ஒக்கும் ..... ஒத்திருக்கும் படியான ,

யோகங்கள் ..... உபாயங்களை ;

உங்களுக்கு ..... உங்களுக்கு ஸித்திக்கும்படி ,

எவ்வாறு ..... எவ்விதமாய் ,

பெற்றீர் ..... அடைந்தீர்கள் ?

உரையீர் ..... சொல்லுங்கள் !

உயிர் ..... உயிர்களைப் ,

அளிப்பான் ..... பாதுகாக்கும் பொருட்டு ;

நல் ..... நல்ல ,

நீர்கள் ..... ஜலத்தைத் ,

சுமந்து ..... தரித்து ;

மா ..... பெரிய ,

கங்கள் எலாம் ..... வானங்களில் எல்லாம் ,

திரிந்து ..... ஸஞ்சரித்து ;

நும் தம் ..... உங்களுடைய , ஆகங்கள் ..... உடம்புகள் ,

நோவ ..... நோகும்படி , வருத்தும் ..... வருந்திச் செய்த ,

தவம் ஆம் ..... தபஸ்ஸோ , அருள் ..... அந்த எம்பெருமானது அருளைப் ,

பெற்றதே ..... பெற்ற காரணம் ?

33 / 10

அரவு அணையீர் ! இவள் மாமை சிதைக்கின்றதே ! பெண்பால் பொருளோ எனும் இகழ்வோ ? புறத்தாள் என்று எண்ணோ ? தெருளோம் !

அருள் - ஆர் , திருச் சக்கரத்தார் - அகல் , விசும்பும் , நிலனும் ;

இருள் - ஆர் , வினை , கெடச் , செங்கோல் , நடாவுதீர் ! ஈங்கு - ஓர் , பெண்பால் ,

பொருளோ - எனும் - இகழ்வோ ? இவற்றின் , புறத்தாள் , என்று , எண்ணோ ?

தெருளோம் , அரவு - அணையீர் ! இவள் , மாமை , சிதைக்கின்றதே !

அரவு அணையீர் ..... ஆதி சேஷ சயனத்தை உடையவரே !

அருள் ஆர் ..... கருணை நிறைந்த ,

திருச் சக்கரத்தார் .... திரு ஆழியைக் கொண்டு ;

அகல் விசும்பும் ..... பரந்த விண் உலகத்திலும் ,

நிலனும் ..... மண் உலகத்திலும் ,

இருள் ஆர் ..... இருளை ஒத்த ,

வினை கெடச் ..... கொடிய வினை நிகழாதபடி ,

செங்கோல் ..... உமது கட்டளையை ,

நடாவுதீர் ..... தடையின்றிச் செலுத்துகிறீர் !

இவள் ..... இப் பராங்குச நாயகியினுடைய ,

மாமை ..... மேனி நிறத்தை , சிதைக்கின்றதே ..... அழிப்பதானது ;

ஈங்கு ..... இப் பூவுலகத்தில் ,

ஓர் பெண்பால் ..... ஒரு பெண்ணைக் காப்பது ,

பொருளோ எனும் ..... ஒரு புருஷார்த்தமோ எனும் ,

இகழ்வோ ..... அநாதரவோ ?

இவற்றின் ..... விண் , மண்ணுக்கு உள்ளாகாமல் ,

புறத் தாள் என்று ..... வெளியில் இருப்பவள் ,

எண்ணோ ..... என்ற எண்ணமோ ?

தெருளோம் ..... தெரியவில்லை !

034 / 100

மாலே ! உனது தண் அம் துழாய் அணிவான் ; அதுவே மனமாய் , பதைக்கின்ற மாதின் திறத்து , செயற்பாலதுவே அறியேன் !

சிதைக்கின்றது - ஆழி - என்று - ஆழியைச் , சீறி ; தன் சீறு - அடியால் ,

உதைக்கின்ற , நாயகம் - தன்னொடு , மாலே ! உனது , தண் - தார் ,

தைக்கின்ற , தண் - அம் - துழாய் - அணிவான் - அதுவே , மனம் - ஆய்ப் ,

பதைக்கின்ற , மாதின் , திறத்து ; அறியேன் , செயற்பாலதுவே !

மாலே ..... எம்பெருமானே !

ஆழி ..... கூடல் வட்டமானது ,

சிதைக்கின்றது ..... காரியத்தைக் கெடுக்கிறது ,

என்று ..... என்ற காரணத்தினால் ,

ஆழியைச் ..... அக் கூடல் வட்டத்தை ,

சீறி ..... கோபித்து ;

தன் ..... தனது ,

சீறு அடியால் ..... சிறு கால்களால் ,

உதைக்கின்ற ..... உதைக்கும்படியான ,

நாயகம் தன்னொடு ... மேம்பாடுடனே ;

உனது ..... உன்னுடையதான ,

தண் தார் ..... வாடாத மலர்கள் ,

ததைக்கின்ற ..... நிறைந்த ,

தண் ..... குளிர்ந்த ,

அம் ..... அழகிய ,

துழாய் ..... திருத்துழாயை ,

அணிவான் ..... சூடும் பொருட்டு ;

அதுவே ..... அதிலேயே ,

மனம் ஆய்ப் ..... கருத்தாய் ,

பதைக்கின்ற ..... வருந்துகிற , மாதின் திறத்து ..... இம் மங்கை விஷயத்தில் ,

செயற்பாலதுவே ..... செய்யத் தக்கதை , அறியேன் ..... நான் அறியவில்லை !

035 / 100

உலகு அளந்த மால் பால் துழாய்க்கு மனமுடையார்க்கு , நல்கிற்றை எல்லாம் சோல்வான் புகுந்து , இது ஓர் பனி வாடை துழாகின்றது , ஏ !

பால் , வாய்ப் , பிறைப் , பிள்ளை - ஒக்கலைக் , கொண்டு , பகல் - இழந்த ;

மேல் , பால் - திசைப் , பெண் , புலம்பு , உறும் , மாலை ; உலகு - அளந்த ,

மால் , பால் - துழாய்க்கு , மனம் - உடையார்க்கு , நல்கிற்றை - எல்லாம் ,

சோல்வான் , புகுந்து ; இது - ஓர் , பனி , வாடை , துழாகின்றதே !

பிறைப் ..... அமிருத கிரணத்தை உமிழ்கிற இளம் பிள்ளைச் சந்திரன் ஆகிற ,

பால் வாய்ப் ..... பால் மாறாத வாயை உடைய ,

பிள்ளை ..... தன் இளம் குழந்தையை ,

ஒக்கலைக் ..... தன் இடைப் புறத்தில் ஒரு பக்கத்தில் ,

கொண்டு ..... வைத்துக் கொண்டு ;

பகல் இழந்த ..... ஸூர்யன் ஆகிய கணவனை இழந்த ,

மேல் பால் ..... மேற்குப் பக்கத் ,

திசைப் பெண் ..... திக்காகிய பெண் ;

புலம்பு உறும் ..... வருந்தி அழும் ,

மாலை ..... மாலைப் பொழுதானது ;

உலகு அளந்த ..... உலகங்களை அளவிட்ட ,

மால் பால் ..... திருமாலிடத்து உள்ள ,

துழாய்க்கு ..... திருத்துழாய்க்கு ,

மனம் ..... ஆசைப்பட்ட நெஞ்சை ,

உடையார்க்கு ..... உடையவர்களுக்கு ,

நல்கிற்றை ..... அருள் செய்த உதவியை ,

எல்லாம் ..... முழுவதும் ,

சோல்வான் ..... கவர்ந்து கொள்ளும் பொருட்டு ,

புகுந்து ..... வந்து ,

இது பனி ..... இந்தக் குளிர்ந்த ,

ஓர் வாடை ..... காற்று ,

துழாகின்றது ..... என் மேல் தடவுகின்றது !

ஏ ..... அந்தோ !

036 / 100

இலங்கைக் குழாம் நெடு மாடம் இடித்த பிரானார் கொடுமைகளே ! வழா நெடும் துன்பத்தள் என்று இரங்கார் !

துழா , நெடும் - சூழ் - இருள் - என்று ; தம் - தண் - தார் - அது , பெயர் - ஆ ,

எழா , நெடு - ஊழி - எழுந்த , இக் , காலத்தும் ; ஈங்கு - இவளோ ,

வழா , நெடும் , துன்பத்தள் - என்று - இரங்கார் - அம்மனோ ! இலங்கைக் ,

குழாம் - நெடு , மாடம் - இடித்த , பிரானார் , கொடுமைகளே !

துழா ..... கைகளால் தடவித் தேடும்படியான ,

நெடும் ..... முடிவில்லாத ,

சூழ் ..... நிறைந்த ,

இருள் என்று ..... இருட்பொழுது என்று பேரிட்டுக்கொண்டு ;

எழா ..... முன்பு ஒரு காலும் தோன்றி அறியாத ,

நெடு ..... நீண்ட ,

ஊழி எழுந்த ..... கல்பம் தோன்றின ,

இக் காலத்தும் ..... இச் சமயத்திலும் ;

ஈங்கு ..... இவ்விடத்து ,

இவளோ ..... தனிமை பொறுக்க மாட்டாமல் இருக்கிற இவளோ ,

தம் ..... தமது ,

தண் தார் அது ..... குளிர்ந்த திருத் துழாய் மாலை விஷயமாக ,

பெயர் ஆ ..... துழாய் மாலை எனும் பெயரையே உரு இட்டு ,

என்று ..... சொல்லிக் கொண்டு ,

வழா நெடும் ..... தவறுதல் இல்லாத மிக்க முடிவு இல்லாத ,

துன்பத்தள் ..... துன்பம் உடையவள் ,

என்று ..... என்று இவள் நிலைமையைத் திரு உள்ளத்தில் கொண்டு ,

இரங்கார் ..... தலைவர் இரக்கம் கொண்டு அருளுவது இல்லை !

அம்மனோ ..... அந்தோ !

இலங்கைக் ..... இலங்காபுரியில் உள்ள ,

குழாம் ..... கூட்டமான ,

நெடு மாடம் ..... பெரிய மாளிகைகளை ,

இடித்த ..... தம் சேனைகளைக் கொண்டு இடித்துத் தள்ளிய ,

பிரானார் ..... தலைவருடைய ,

கொடுமைகளே ..... கொடும் செயல்களே

037 / 100

அருவினையேன் ; நெடும் காலமும் கண்ணன் நீள் மலர்ப் பாதம் பரவிப் பெற்ற , இள மான் ; சூழ் கடம் சென்றதே !

கொடும் - கால் - சிலையர் , நிரை , கேள் - உழவர் ; கொலையில் , வெய்ய ,

கடும் - கால் - இளைஞர் , துடி , படும் , கவ்வைத்து ; அரு , வினையேன் ,

நெடும் - காலமும் - கண்ணன் , நீள் - மலர்ப் , பாதம் , பரவிப் , பெற்ற ,

தொடும் - கால் - ஒசியும் - இடை ; இள , மான் , சென்ற , சூழ் , கடமே !

ரு வினையேன் ... அனுபவிக்க முடியாத தீவினைப் பயனை உடைய நான் ,

நெடும் காலமும் ..... வெகு காலமும் ,

கண்ணன் ..... கண்ணபிரானுடைய ,

நீள் மலர்ப் பாதம் .... நீண்ட தாமரை மலர் போன்ற திருவடிகளை .

பரவிப் ..... வழிபட்டு ,

பெற்ற ..... அந்த ஆராதனையின் பயனாய் ஈன்ற ;

தொடும் கால் ..... தொட்டால் ,

ஒசியும் ..... ஒடியும்படியான மிக மெல்லிய ,

இடை ..... இடையை உடையவளும் ,

இள மான் ..... இளமை தங்கிய மான் போன்ற பார்வை உடையவளுமான மகள் ,

சென்ற ..... கடந்து போன ,

சூழ் கடமே ..... பரந்த பாலை நிலம் ;

கொடும் கால் ..... வளைந்த ,

சிலையர் ..... விற்கழுந்தை உடையவர்களும் ,

நிரை ..... பசுக்கூட்டங்களைக் ,

கோள் ..... கவர்ந்து கொள்வதையே ,

உழவர் ..... தொழிலாக உடையவர்களும் ;

கொலையில் ..... கொலைத் தொழிலில் ,

வெய்ய ..... கொடியவர்களும் ;

கடும் கால் ..... நடை விரைந்த கால்களை உடையவர்களும் ;

இளைஞர் ..... இள வீரர்களின் ,

துடி ..... பறைகள் ,

படும் கவ்வைத்து ..... ஒலித்தல் ஆகிய ஆரவாரம் உடையது !

038 / 100

நீலங்கள் ; நீர் நிலை நின்ற தவம் இது கொல் ? குடம் ஆடி , உலகு அளந்து நடம் ஆடிய பெருமான் உரு ஒத்தன !

கடம் - ஆயினகள் , கழித்துத் , தம் , கால் , வன்மையால் ; பல , நாள் ,

தடம் - ஆயின , புக்கு , நீர் , நிலை , நின்ற , தவம் - இது , கொல் ?

குடம் - ஆடி - இம் , மண்ணும் , விண்ணும் - குலுங்க , உலகு - அளந்து ,

நடம் - ஆடிய , பெருமான் ; உரு - ஒத்தன , நீலங்களே !

கடம் ஆயினகள் ..... காடுகளாக உள்ளவற்றைக் ,

கழித்துத் ..... கடந்து ஒழித்து ,

தடம் ஆயின ..... தடாகங்களாக உள்ளவற்றில் ,

புக்கு ..... பிரவேசித்து ,

தம் ..... அங்கு தமது ,

கால் வன்மையால் .... கால்களின் வலிமையால் ,

பல நாள் ..... அனேக காலம் ,

நீர் நிலை நின்ற ..... நீரிலே நீங்காது நின்று ,

தவம் இது கொல் ..... செய்த இத் தவத்தினாலேயோ ,

நீலங்களே ..... நீலோத்பலங்கள் ;

குடம் ஆடி ..... கிருஷ்ண அவதாரத்தில் குடக்கூத்து ஆடினவனும் ,

இம் மண்ணும் ..... த்ரிவிக்ரம அவதாரத்தில் இந்த மண்ணுலகமும் ,

விண்ணும் ..... விண்ணுலகமும் ,

குலுங்க ..... நெகிழும்படி ,

உலகு அளந்து ..... உலகங்களை அளவிட்டு ,

நடம் ஆடிய ..... இங்ஙனம் திருவிளையாடல் செய்தவனுமான ,

பெருமான் ..... எம்பெருமானுடைய ,

உரு ஒத்தன ..... திருமேனி நிறம் பெற்றன !

039 / 100

ஞாலப் பிரான் , விசும்பின் பிரான் , நல்லோர் பிரான் , கரிய பிரான் , எம் பிரான் , கண்ணின் கோலங்கள் ; எல்லா இடத்தவும் !

நீலத் , தட , வரை , மேல் ; புண்டரீக , நெடும் - தடங்கள் ,

போல ; பொலிந்து - எமக்கு - எல்லா , இடத்தவும் ; பொங்கு , முந்நீர் ,

ஞாலப் , பிரான் ; விசும்புக்கும் , பிரான் ; மற்றும் , நல்லோர் , பிரான் ;

கோலம் - கரிய , பிரான் ; எம் , பிரான் , கண்ணின் , கோலங்களே !

நீலத் ..... நீல மணி மயமான ,

தட வரை மேல் ..... பெரியதொரு மலை மேல் உள்ள ,

புண்டரீக ..... பெரிய செந்தாமரைப் பூம் ,

நெடும் தடங்கள் ..... பொய்கைகள் ,

போல ..... போல் ,

பொலிந்து ..... விளங்குகின்றவைகளும் ;

எமக்கு ..... எமக்குக் ,

எல்லா இடத்தவும் .... காணும் இடம் தோறும் தோன்றுகிறவையுமாய் உள்ளவை :

பொங்கு ..... கிளர்கின்ற ,

முந்நீர் ..... கடல் சூழ்ந்த ,

ஞாலப் பிரான் ..... மண்ணுலகத்துக்குத் தலைவனும் ;

விசும்புக்கும் ..... விண்ணுலகத்துக்கும் ,

பிரான் ..... தலைவனும் ;

மற்றும் ..... மற்றும் உள்ள ,

நல்லோர் ..... நல்லவர் யாவர்க்கும் ,

பிரான் ..... தலைவனும் ;

கோலம் ..... திருமேனி நிறம் ,

கரிய பிரான் ..... கருத்திருக்கப் பெற்ற பிரபுவுமான ;

எம் பிரான் ..... எம்பெருமானுடைய ,

கண்ணின் ..... திருக்கண்களினுடைய

கோலங்களே ..... அழகுகளே ஆகும் !

040 / 100

நேர் இழையீர் ! ஞாலப் பொன் மாதின் மணாளன் துழாய் ; நங்கள் , சூழ் குழற்கே , ஏலப் புனைந்து , என்னைமார் , எம்மை நோக்குவது , என்று கொலோ ?

கோலப் , பகல் - களிறு - ஒன்று ; கல் - புய்ய ; குழாம், விரிந்த ,

நீலக் , கங்குல் - களிறு - எல்லாம் , நிரைந்தன ! நேர் - இழையீர் !

ஞாலப் , பொன் , மாதின் , மணாளன் , துழாய் ; நங்கள் , சூழ் , குழற்கே,

ஏலப் , புனைந்து - என்னைமார் ; எம்மை , நோக்குவது - என்று , கொலோ ?

கோலப் ..... அலங்காரத்தை உடைய ,

பகல் ..... ஸூர்யன் ஆகிய ,

களிறு ஒன்று ..... ஒப்பில்லாத ஒரு யானை ,

கல் புய்ய ..... அஸ்தமன பர்வதத்தில் மறைய ;

குழாம் விரிந்த ..... திரளாகப் பரந்த ,

நீலக் ..... நீல நிறத்தை உடைய ,

கங்குல் ..... இரவு ஆகிய ,

களிறு எல்லாம் ..... யானைகள் எல்லாம் ,

நிரைந்தன ..... அடைவே எதிரே வந்து சேர்ந்தன !

நேர் இழையீர் ..... தகுதியான ஆபரணங்களை உடையவர்களே !

ஞாலப் ..... பூதேவிக்கும் ,

பொன் மாதின் ..... ஸ்ரீதேவிக்கும் ,

மணாளன் ..... நாயகனான எம்பெருமான் ;

துழாய் ..... தனது திருத் துழாய் மாலையை ,

நங்கள் ..... எமது ,

சூழ் குழற்கே ..... அடர்ந்த கூந்தலில் ,

ஏலப் புனைந்து ..... தகுதியாகச் சூட்ட ,

என்னைமார் ..... எமது தாய்மார் ,

எம்மை ..... என்னைப் ,

நோக்குவது ..... பார்ப்பது ,

என்று கொலோ ..... என்றைக்கோ ?

041 / 100

ஓங்கு அசுரர் , பொன்றும் வகை , புள்ளை ஊர்வான் ; அருள் அருளாத இந்நாள் ;
வன், காற்று , மன்றில் , நிறை பழி தூற்றி , நின்று , என்னை , அடுமே !

என்றும் , புன் , வாடை - இது , கண்டு - அறிதும் ; இவ் , வாறு , வெம்மை ,

ஒன்றும் - உருவும் - சுவடும் - தெரியிலம் ; ஓங்கு - அசுரர் ,

பொன்றும் , வகை , புள்ளை - ஊர்வான் - அருள் - அருளாத - இந்நாள் ;

மன்றில் , நிறை , பழி , தூற்றி ; நின்று - என்னை , வன் , காற்று - அடுமே !

என்றும் ..... எப்பொழுதும் ,

புன் ..... கொடுமை செய்கிற ,

வாடை இது ..... இந்த வாடையைக் ,

கண்டு அறிதும் ..... கண்டு அறிவோம் !

இவ் வாறு ..... இப்படிப் பட்ட வாடையின் ,

வெம்மை ..... வெப்பத்தின் ,

உருவும் ..... தன்மையையும் ,

சுவடும் ..... குறிப்பையும் ,

ஒன்றும் ..... ஒரு விதத்தாலும் ,

தெரியிலம் ..... அறியோம் !

ஓங்கு ..... வலிமையால் கிளர்கின்ற ,

அசுரர் ..... அசுரர்கள் ,

பொன்றும் வகை .... அழியும் படி ,

புள்ளை ..... கருடப் பறவையை ,

ஊர்வான் ..... ஏறி நடத்துகிற ;

அருள் ..... தனது கருணையால் ,

அருளாத ..... என்னை வந்து காத்து அருளாத ,

இந்நாள் ..... இக் காலத்தில் ,

வன் காற்று ..... வலிய வாடையானது ,

என்னை ..... என்னை ,

மன்றில் ..... வெளியே ,

நிறை ..... பரவி நிறைகிற ,

பழி ..... பழிப்பை ,

தூற்றி ..... அயலாரை இட்டு தூற்றுவித்து ,

நின்று அடுமே ..... அப்பால் போகாமல் நின்று அழிக்கின்றது !

042 / 100

எம்பிரான் தடம் கண்களே ; தன் கால் பணிந்த , என்பால் , ஒருங்கே மறிந்து , கிடந்து , அலர்ந்த , மென் கால் , கமலத் தடம் போல் பொலிந்தன !

வன் , காற்று - அறைய - ஒருங்கே , மறிந்து , கிடந்து - அலர்ந்த ,

மென் , கால் - கமலத் , தடம் , போல் - பொலிந்தன ! மண்ணும் , விண்ணும் ,

என் , காற்கு - அளவு - இன்மை , காண்மின் ! என்பான் - ஒத்து , வான் , நிமிர்ந்த ,

தன் , கால் - பணிந்த - என் , பால் ; எம் , பிரான் , தடம் - கண்களே !

எம் பிரான் ..... எம்பெருமானுடைய ,

தடம் ..... பெரிய ,

கண்களே ..... திருக் கண்கள் ஆனவை ;

மண்ணும் ..... மண் உலகமும் ,

விண்ணும் ..... விண் உலகமும் ஆகிய விசாலமான இடம் இரண்டும் ;

என் காற்கு ..... எனது இரண்டு பாதங்களின் ,

அளவு இன்மை .... அளவுக்கு இடம் போதாத ,

காண்மின் ..... அற்புதத்தைப் பாருங்கள் !

என்பான் ..... என்று அந்தந்த உலகில் இருந்தார்க்குக் கூறி ,

ஒத்து ..... ஒரு வித்தை காட்டுபவன் போன்று ,

வான் ..... மேல் உலகை நோக்கி ,

நிமிர்ந்த ..... வளர்ந்த ,

தன் கால் ..... தன்னுடைய திருவடிகளை ,

பணிந்த ..... வணங்கிய ,

என் பால் ..... என்னிடத்து ,

வன் காற்று ..... பெரும் காற்று ,

அறைய ..... வீசுவதால் ,

ஒருங்கே ..... ஒரு பக்கமாகச் ,

மறிந்து ..... சாய்ந்து ,

கிடந்து ..... கிடந்து ,

அலர்ந்த ..... மலர்ந்த ,

மென் கால் ..... மெல்லிய நாளத்தை உடைய ,

கமலத் ..... தாமரைத் ,

தடம் போல் ..... தடாகம் போல் ,

பொலிந்தன ..... அழகு மிக்கு விளங்கின !

043 / 100

கண்ணும் , கையும் , அடியும் , செந்தாமரையான , எம்பெருமானது எழில் நிறமே ; விண்ணும் கடந்து , உம்பர் அப்பால் மிக்கு , மற்ற எப்பால் யவர்க்கும் , எண்ணும் இடத்ததுவோ ?

கண்ணும் - செந்தாமரை , கையும் - அவை , அடியோ - அவையே ;

வண்ணம் , கரியது - ஓர் , மால் , வரை , போன்று ; மதி , விகற்பால் ,

விண்ணும் , கடந்து - உம்பர் - அப்பால் , மிக்கு , மற்ற , எப்பால் , யவர்க்கும் ,

எண்ணும் - இடத்ததுவோ ? எம்பிரானது - எழில் , நிறமே !

கண்ணும் ..... திருக் கண்களும் ,

செந்தாமரை ..... செந்தாமரைப் பூவை ஒப்ப ,

கையும் ..... திருக் கைகளும் ;

அவை ..... அத் தாமரைப் பூவை ஒப்ப ,

அடியோ ..... திருவடிகளும் ,

அவையே ..... அத் தாமரைப் பூக்களையே ஒப்ப ,

எம்பிரானது ..... எம்பெருமானுடைய ,

எழில் நிறமே ..... அழகிய திருமேனி விளக்கம் ;

வண்ணம் ..... நிறத்தில் ,

கரியது ..... கறுத்ததான ,

ஓர் மால் வரை ..... ஒரு பெரிய மலையை ,

போன்று ..... ஒத்து ;

மதி ..... ஞானத்தின் ,

விகற்பால் ..... மிகுதியால் ,

விண்ணும் ..... ஸ்வர்க்க லோகத்தாரை ,

கடந்து ..... மேலிட்டு ;

உம்பர் ..... அதன் மேல் இடத்தில் உள்ள ஸத்யலோகத்தார்க்கும் ,

அப்பால் ..... அப்பால் ,

மிக்கு ..... சென்று ,

மற்ற ..... அதன் மேல் பரம பதத்தில் ,

எப்பால் ..... எவ்விடத்தில் உள்ள ,

யவர்க்கும் ..... நித்ய ஸூரிகளுக்கும் ,

எண்ணும் ..... இப்படிப்பட்டது என்று அளவிடும்படியான ,

இடத்ததுவோ ..... தன்மை உடையதோ ? (அன்று !)

044 / 100

எம்பிரான் பெருமையை ; நிறம் , கோலம் , பேர் , உரு இவை இவை என்று , ஞானச் சமயிகள் பேசிலும் , அதுவன்றி ஒன்றும் , பெற முயன்றார் இல்லை !

நிறம் - உயர் , கோலமும் , பேரும் , உருவும் - இவை - இவை - என்று ;

அறம் , முயல் , ஞானம் , சமயிகள் , பேசிலும் ; அங்கு - அங்கு - எல்லாம் ,

உறவு - உயர் , ஞானச் , சுடர் , விளக்கு - ஆய் , நின்று - அது - அன்றி - ஒன்றும் ,

பெற , முயன்றார் - இல்லையால் ; எம் , பிரான் , பெருமையையே !

நிறம் ..... திருமேனி நிறமும் ,

உயர் கோலமும் ..... சிறந்த அலங்காரமும் ,

பேரும் ..... திருநாமமும் ,

உருவும் ..... வடிவமும் ,

இவை இவை என்று ..... இன்னின்னவை என்று ,

அறம் முயல் ..... தரும மார்க்கத்தால் முயன்று ;

ஞானம் சமயிகள் ..... பெற்ற ஞானத்தை உடைய வைதிக ஸம்ப்ரதாயஸ்தர்கள் ,

பேசிலும் ..... ஒருவாறு பிறர்க்குச் சொன்னாலும் ,

அங்கு அங்கு எல்லாம் ..... கீழ்ச் சொன்ன நிறம் ,அலங்காரம் ,நாமம் எல்லாவற்றிலும் ,

உற உயர் ஞானச் ..... மிக உயர்ந்த தமது ஞானம் ஆகிய திறத்தால் ,

சுடர் விளக்கு ஆய் ..... சிறிது விளக்கத்தைப் ,

நின்றது அன்றி ..... பெறுகின்றது ஒழிய ,

எம்பிரான் ..... எம்பெருமானுடைய ,

பெருமையையே ..... ஒப்பு உயர்வற்ற மஹிமையை ,

ஒன்றும் பெற ..... ஒருவகையாலும் முற்றும் அளவிட்டுப் பெறும்படி ,

முயன்றார் இல்லை ..... முயற்சி செய்தார் இல்லை !

ஆல் ..... (அசைச் சொல்)

045 / 100

மட நெஞ்சமே ! பெரும் கேழலார் , தம் பெரும் , கண்மலர்ப் புண்டரீகம் , நம் மேல் , ஒருங்கே , பிறழ வைத்தார் ! சூழ் பிறப்பு , மருங்கே வரப்பெறுமே ?சொல்லு ! வாழி !

பெரும் - கேழலார் , தம் , பெரும் - கண் , மலர்ப் , புண்டரீகம் ; நம் , மேல் ,

ஒருங்கே , பிறழ , வைத்தார் ! இவ் - அகாலம் ; ஒருவர் , நம் , போல் ,

வரும் - கேழ்பவர் - உளரே ? தொல்லை , வாழியம் , சூழ் , பிறப்பு ,

மருங்கே , வரப் , பெறுமே ? சொல்லு ! வாழி ! மட , நெஞ்சமே !

மட நெஞ்சமே ..... பேதை நெஞ்சே !

பெரும் கேழலார் ..... பிரளய வெள்ளத்தில் அழுந்தின பூமியை எடுப்பதற்கு மஹா வராஹ ரூபி ஆனவர் ,

இவ் அகாலம் ..... ரக்ஷிப்பதற்கு எளியது அல்லாத இக்காலத்தில் ,

தம் ..... தம்முடைய ,

பெரும் ..... பெரிய ,

மலர்ப் புண்டரீகம் .... செந்தாமரைப் பூப் போன்ற ,

கண் ..... திருக் கண்களை ,

நம் மேல் ..... நம் பக்கலில் ,

ஒருங்கே ..... ஒரு படிப் பட ,

பிறழ வைத்தார் ..... மிளிர வைத்தார் ! (கடாக்ஷித்து அருளினார்)

நம் போல் வரும் ..... அவரோடு , நம்மைப் போல் ,

கேழ்பவர் ..... ஸம்பந்தம் பொருந்தியவரும் ,

ஒருவர் உளரே ..... வேறு ஒருத்தர் உண்டோ ? (இல்லை)

தொல்லை ..... அவரோடு பழமையான ,

வாழியம் ..... வாழ்க்கையையும் யாம் உடையோம் !

சூழ் பிறப்பு ..... அப்படிப்பட்ட நமக்கு விடாது சூழ்கிற பிறப்பத் துன்பங்கள் ,

மருங்கே ..... அருகிலும் ,

வரப் பெறுமே ..... வரக் கூடுமோ ?

சொல்லு ..... சொல்லாய் !

வாழி ..... கலக்கம் தெளிந்து வாழ்வாயாக !

046 / 100

என் நெஞ்சைப் ; பொன் பெயரோன் , தட நெஞ்சம் கீண்ட பிரானார் , அடிக் கீழ்த் , தூது விடப் , போய் ; அது , எம்மை நீத்து ; இன்று தாறும் திரிகின்றதே !

மட , நெஞ்சம் - என்றும் - தமது - என்றும் ; ஓர் , கருமம் - கருதி ,

விட , நெஞ்சை - உற்றார் , விடவோ - அமையும் ; அப் , பொன் , பெயரோன் ,

தட , நெஞ்சம் - கீண்ட , பிரானார் , தமது - அடிக் , கீழ் , விடப் , போய்த் ,

திட , நெஞ்சமாய் ; எம்மை , நீத்து - இன்று , தாறும் , திரிகின்றதே !

மட நெஞ்சம் ..... பேதைமையை உடைய மனம் ,

என்றும் ..... என்று எண்ணியும் ,

தமது என்றும் ..... நமக்கு அந்தரங்கமானது என்று எண்ணியும் ,

ஓர் கருமம் ..... ஒரு காரியத்தை ,

கருதி ..... உத்தேசித்து ,

நெஞ்சை விட ..... மனதைத் தூது போக விடத் ,

உற்றார் ..... துணிந்தவர் ,

விடவோ ..... அத்துணிவை விட்டு ஒழிதல் ,

அமையும் ..... தகுதி !

அப் ..... அந்தக் கொடிய ,

பொன் பெயரோன் .... இரணியனுடைய ,

தட நெஞ்சம் ..... பெரிய மார்பை ,

கீண்ட ..... எளிதில் பிளந்து அருளிய ,

பிரானார் தமது ..... பராக்ரமசாலியான எம்பெருமானுடைய ,

அடிக் கீழ் ..... திருவடிகளிலே ,

விடப் ..... எமது நெஞ்சைத் தூது விட ;

போய்த் ..... அது போய் ,

திட ..... உறுதியான ,

நெஞ்சம் ஆய் ..... கருத்து உள்ளதாய் ;

எம்மை நீத்து ..... தூது விட்டவரும் உரிமையாளரும் ஆன நினையாது கைவிட்டு ,

இன்று தாறும் ..... இன்று வரையில் ,

திரிகின்றதே ..... எம்பெருமானைத் தொடர்ந்து உல்லாஸமாய்த் திரிகின்றதே !

047 / 100

கண்ணன் விண் ஊர் தொழவே ;திங்கள் , வெம் தீ சொரிகின்றது!சங்கம் சரிகின்றது ! முழு மெய்யும் பசலை விரிகிறது ! என் மெல்லியற்கே , என்னும் கொல் ?

திரிகின்றது , வட , மாருதம் ! திங்கள் , வெம் - தீ , முகந்து ,

சொரிகின்றது ! அதுவும் - அது ! கண்ணன் , விண் - ஊர் , தொழவே ,

சரிகின்றது , சங்கம் ! தண் - அம் - துழாய்க்கு , வண்ணம் , பயலை ,

விரிகின்றது ! முழு , மெய்யும் ; என்னும் - கொல் - என் , மெல்லியற்கே

வட மாருதம் ..... வாடைக்காற்று ,

திரிகின்றது ..... உலாவுகின்றது !

திங்கள் ..... குளிர்ந்த இயல்பை உடைய சந்திர மண்டலம் ,

வெம் தீ ..... கொடிய நெருப்பை ,

முகந்து ..... வாரி ,

சொரிகின்றது ..... இறைக்கிறது !

அதுவும் ..... வாடைக்காற்றும் ,

அது ..... அப்படியே , கொடிய நெருப்பை வீசுகிறது !

கண்ணன் ..... கண்ணபிரானுடைய ,

விண் ஊர் ..... பரம பதமாகிய வாசஸ்தானத்தை ,

தொழவே ..... இடைவிடாமல் தொழுது , அது கிடைக்காமையால் ,

சங்கம் ..... கையில் அணிந்துள்ள சங்கு வளை ,

சரிகின்றது ..... கழன்று விழுகிறது !

தண் ..... அவனது குளிர்ந்த ,

அம் ..... அழகிய ,

துழாய்க்கு ..... திருத் துழாய் கிடையாமையால் ,

முழு மெய்யும் ..... உடம்பு முழுவதிலும் ,

வண்ணம் பயலை ..... இயற்கையான மாமை நீங்கி , பசப்பு நிறம் ,

விரிகின்றது ..... பரவுகின்றது !

என் மெல்லியற்கே ..... மென்மையான என் மகளுக்கே ,

என்னும் கொல் ..... யாதாய் முடியுமோ ?

048 / 100

என்னாலும் , தன்னைச் சொல்லிய சூழல் , திருமாலவன் , கவி யாது கற்றேன் ?
பல்லியின் சொல்லும் , சொல்லாய்க் கொள்வது உண்டு பண்டே !

மெல் - இயல் - ஆக்கைக் , கிருமி ; குருவில் , மிளிர்தந்து - ஆங்கே ,

செல்லிய , செல்கைத்து - உலகை - என் , காணும் ? என்னாலும் - தன்னைச் ,

சொல்லிய , சூழல் - திருமாலவன் , கவி , யாது , கற்றேன் ?

பல்லியின் , சொல்லும் - சொல்லாக் , கொள்வதோ - உண்டு , பண்டு , பண்டே !

மெல் இயல் ..... மென்மையான தன்மையை உடைய ,

ஆக்கைக் ..... உடம்பை உடைத்தான ,

கிருமி ..... புழுவானது ,

குருவில் ..... புண்ணிலே ,

மிளிர்தந்து ..... வெளிப்பட்டு ,

ஆங்கே ..... அவ்விடத்திலேயே ,

செல்லிய ..... நடமாடும்படியான ,

செல்கைத்து ..... ஸ்வபாவத்தை உடையது !

உலகை ..... உலக நடத்தையை ,

என் காணும் ..... எவ்வாறு அறியும் ? (அறியமாட்டாது)

என்னாலும் ..... அதுபோல் என்னைக் கொண்டும் ,

தன்னைச் ..... தன்னைப் ,

சொல்லிய ..... பாடுவித்த ,

சூழல் ..... சூழ்ச்சியை உடைய ,

திருமாலவன் ..... ச்ரிய: பதியான எம்பெருமானுடைய ,

கவி ..... புகழுரையை ,

யாது கற்றேன் .... யான் யாது என்று அறிவேன் ?

பல்லியின் ..... பல்லியின் , சொல்லும் ..... வார்த்தையையும் ,

சொல் ஆக் ..... பின் நிகழ்ச்சியை முன் குறிக்கும் சொல்லாகக் ,

கொள்வதோ ..... கொள்ளுதலோ , பண்டு பண்டே .... மிக வெகு காலமாக ,

உண்டு ..... உள்ளது !

049 / 100

பெருமான் , மதுசூதனன் , தாமோதரன் ; உண்டும் உமிழ்ந்தும் , கடாய , மண் , ஏர் அன்ன , ஒள் நுதலே ! இப் பாய் இருள் போல் கண்டும் அறிவதும் , கேட்பதும் , யாம் இலம் !

பண்டும் , பல , பல , வீங்கு - இருள் , காண்டும் , இப் , பாய் - இருள் , போல் - கண்டும் - அறிவதும் , கேட்பதும் , யாம் - இலம் ! காள , வண்ண , வண்டு - உண் , துழாய்ப் , பெருமான் , மதுசூதனன் , தாமோதரன் , உண்டும் - உமிழ்ந்தும் - கடாய , மண் - ஏர் - அன்ன - ஒள் - நுதலே !

காள வண்ண .... கருத்த திரு நிறத்தையும் ,

வண்டு உண் ..... வண்டுகள் தேன் உண்ணப் பெற்ற ,

துழாய்ப் ..... திருத் துழாய் மாலையையும் உடைய ,

பெருமான் ..... ஸர்வேச்வரனும் ;

மதுசூதனன் ..... மதுஸூதனன் என்றும் ,

தாமோதரன் ..... தாமோதரன் என்றும் நாமங்களை உடையவனுமான திருமால் ,

உண்டும் ..... பிரளய காலத்தில் , வயிற்றில் உட்கொண்டும் ,

உமிழ்ந்தும் ..... பிரளயம் நீங்கின அளவிலே வெளிப் படுத்தியும் ,

கடாய ..... பாதுகாக்கப் பெற்ற ,

மண் ..... பூமியினுடைய ,

ஏர் ..... அழகை ,

அன்ன ..... ஒத்த ,

ஒள் நுதலே ..... ஒளி பொருந்திய நெற்றியை உடையவளே !

பண்டும் ..... பண்டும் ,

பல பல ..... மிகப் பலவான ,

வீங்கு ..... பெரிய ,

இருள் ..... இருட்பொழுதுகளை ,

காண்டும் ..... பார்த்திருக்கிறோம் !

இப் பாய் ..... இந்தப்பரந்த ,

இருள் போல் .... இருட்பொழுது போல ,

கண்டும் ..... யாம் வேறொரு பொருளைக் கண்டு ,

அறிவதும் ..... அறிவதும் ,

கேட்பதும் ..... கேட்டு அறிவதும் ,

யாம் இலம் ..... இல்லோம் !

050 / 100

வலவ ! ஒள் நுதல் மாமை ஒளி , பயவாமை ; நம் தேர் , விரைந்து நண்ணுதல் வேண்டும் ! மாமலைக்கே , இன்று , கடாக !

ஒள் - நுதல் , மாமை , ஒளி , பயவாமை ; விரைந்து , நம் - தேர் ,

நண்ணுதல் , வேண்டும் ! வலவ ! கடாக ! இன்று ; தேன் , நவின்ற ,

விண் , முதல் , நாயகன் நீள் - முடி , வெள் - முத்த , வாசிகைத்து - ஆய்

மண் , முதல் , சேர்வு - உற்ற , அருவி , செய்யா , நிற்கும் , மா , மலைக்கே !

வலவ ..... பாகனே !

ஒள் நுதல் ..... அழகிய நெற்றியை உடைய நாயகியின் ,

மாமை ஒளி ..... மேனி நல் நிறத்தின் விளக்கம் ,

பயவாமை ..... பசப்பு அடையாதபடி ;

நம் தேர் ..... நமது தேர் ,

விரைந்து ..... துரிதமாகச் ,

நண்ணுதல் ..... சென்று சேர ,

வேண்டும் ..... வேண்டும் !

தேன் நவின்ற ..... வண்டுகள் பாடப் பெற்ற ,

விண் முதல் ..... பரம பத நாதனான ,

நாயகன் ..... பெருமானது ,

நீள் முடி ..... நீண்ட திருமுடியில் தரித்த ,

வெள் முத்த ..... வெண்ணிறமான முத்து ,

வாசிகைத்து ஆய் .... மாலையின் தன்மையதாய் ,

மண் முதல் ..... முடி தொடங்கி அடிவார நிலத்தில் ,

சேர்வு உற்ற ..... சேரும்படியான ,

அருவி ..... நீர்ப்பெருக்கை ,

செய்யா நிற்கும் ..... செய்து நிற்கிற , மா மலைக்கே ..... பெரிய திருமலைக்கு ,

இன்று கடாக ..... இப்பொழுது தேரை நடத்துவாயாக !

051 / 100

கடல் ; வேரித் துழாய் , துணையாத் , துலை கொண்டு , தாயம் கிளர்ந்து சங்கம் இவை , கொள்வான் ஒத்து , அழைக்கின்றதே !

மலை , கொண்டு , மத்து - ஆ - அரவால் - சுழற்றிய , மாயப் , பிரான் ;

அலை , கண்டு , கொண்ட - அமுதம் , கொள்ளாது , கடல் ; பரதர் ,

விலை , கொண்டு , தந்த , சங்கம்- இவை , வேரித் , துழாய் , துணை - ஆத் ,

துலை , கொண்டு , தாயம் - கிளர்ந்து ; கொள்வான் - ஒத்து - அழைக்கின்றதே !

கடல் ..... கடலானது ;

மலை ..... மந்தர பர்வதத்தை ,

மத்து ஆ ..... மத்தாகக் ,

கொண்டு ..... கொண்டு ;

அரவால் ..... வாஸுகி நாகம் ஆகிய கடை கயிற்றால் ,

சுழற்றிய ..... தன்னைக் கடைவதற்குச் சுழலச் செய்த ,

மாயப் ..... அற்புத சக்தி வாய்ந்த ,

பிரான் ...,..... எம்பெருமான் ,

அலை கண்டு ..... தன்னை அலைத்து ,

கொண்ட ..... தன்னிடத்திலிருந்து எடுத்துக் கொண்ட ,

அமுதம் ..... அமிர்தத்தை ,

கொள்ளாது ..... மீண்டும் வாங்கிக் கொள்ள மாட்டாமல் ;

வேரித் ..... பரிமளத்தை உடைய ,

துழாய் ..... எம்பெருமானது திருத்துழாயை ,

துணை ஆத் ..... தனக்குத் துணையாகக் கொண்டு ,

துலை கொண்டு ..... ஒத்து எதிர்வந்து ;

தாயம் ..... பங்காளி உரிமை கொண்டாடுதல் போல் ,

கிளர்ந்து ..... மேல் எழுந்து ,

பரதர் ..... நெய்தல் நில மாக்களான வலையர் ,

விலை கொண்டு ..... என்னிடத்தில் விலை வாங்கிக் கொண்டு ,

தந்த ..... எனக்குக் கொடுத்த ,

சங்கம் இவை ..... இச் சங்கு வளைகளை ,

கொள்வான் ஒத்து ..... மீண்டும் வாங்கிக் கொள்வது போன்று ,

அழைக்கின்றதே ..... சண்டைக்குக் கூப்பிடுகின்றது !

052 / 100

மண் மாதர் , விண் வாய் அழைத்து , புலம்பி , ஆறுகளாய் , மழைக் , கண்ண நீர் ;
திருமால் கொடியான் என்று வார்கின்றதே !

அழைக்கும் -கரும் - கடல் , வெள் - திரைக் ,கைக் , கொண்டு ,போய் ; அலர் , வாய் ,
மழைக் , கண் , மடந்தை , அரவு - அணை - ஏற , மண் , மாதர் , விண் , வாய் ,
அழைத்துப் , புலம்பி , முலை , மலை , மேல் - நின்றும் - ஆறுகள் - ஆய் ,
மழைக் , கண்ண , நீர் ; திருமால் , கொடியான் - என்று , வார்கின்றதே !

அழைக்கும் ..... அன்போடு அழைக்கிற ,

கரும் கடல் ..... எம்பெருமானது திருமேனியால் , கறுத்த , திருப் பாற்கடலானது ;

வெள் திரைக் ..... தன்னுடைய வெளுத்த அலைகள் ஆகிய ,

கைக் ..... கைகளாலே ,

கொண்டு போய் ..... எடுத்துக் கொண்டு போக ;

அலர் வாய் ..... தாமரை மலரில் வாழ்பவளும் ,

மழைக் கண் ..... மழை போல் குளிர்ந்த கண்களை உடையவளுமான ,

மடந்தை ..... திருமகள் ,

அரவு அணை ஏற ..... ஆதிசேஷன் ஆகிய சயனத்தின் மீது ஏற ;

மண் மாதர் ..... அது கண்டு , பூமிப், பிராட்டி ,

விண் வாய் ..... ஆகாயத்திலே ,

புலம்பி அழைத்து ..... மேக கர்ஜனை முகமாக அழுது கூப்பிட்டு ,

முலை மலை மேல் .... தனது ஸ்தனங்கள் ஆகிய மலைகளின் மேல் ,

நின்றும் ..... நின்றும் ,

ஆறுகள் ஆய் ..... ஆறுகளாகப் பெருகவிட்ட ,

மழைக் ..... மழை ஆகிய ,

கண்ண நீர் ..... கண்ணீரானது ;

திருமால் ..... திருமால் ,

கொடியான் என்று ..... கொடியவன் என்று வெளியிட்டுப் ,

வார்கின்றதே ..... பெருகுகின்றது !

053 / 100

இவளது தெய்வ நல் நோய் தீர , வானோர் தலை மகனது , துழாய்த் தார் , தழை , கொம்பு , வேர் , நின்ற மண் , ஏதாவது கொண்டு வீசுமினே !

வார் - ஆயின , முலையாள் - இவள் , வானோர், தலைமகன் - ஆம் ;

சீர் - ஆயின , தெய்வ , நல் - நோய் - இது ; தெய்வத் , தண் - அம் - துழாய்த் ,

தார் - ஆயினும் ; தழை - ஆயினும் ; தண் , கொம்பு - அது - ஆயினும் ; கீழ் ,

வேர் - ஆயினும் ; நின்ற , மண் - ஆயினும் ; கொண்டு , வீசுமினே !

வார் ஆயின ..... கச்சுப் பொருந்தின ,

முலையாள் ..... தனத்தை உடையவளான ,

இவள் ..... இப் பராங்குச நாயகியினுடைய ,

இது ..... இந்த நோயானது ;

வானோர் ..... தேவர்களது ,

தலைமகன் ஆம் .... தலைவனான திருமாலினது ;

சீர் ஆயின ..... தகுதியான ,

தெய்வ ..... திருக் கல்யாண குண விஷயமாக உண்டான ,

நல் நோய் ..... சிறந்த நல்ல நோய் !

தெய்வத் ..... இதற்குப் பரிஹாரமாவது திவ்ய ,

தண் ..... குளிர்ந்த ,

அம் ..... அழகிய ,

துழாய்த் ..... அப் பெருமானது திருத் துழாய் ,

தார் ஆயினும் ..... மாலையை ஆயினும் ;

தழை ஆயினும் ..... அத்திருத் துழாயினது ஓர் இலையை ஆயினும் ;

தண் கொம்பு ..... குளிர்ச்சியான அதன் கிளையை ,

அது ஆயினும் ..... ஆயினும் ;

கீழ் ..... கீழில் உள்ள ,

வேர் ஆயினும் ..... அதன் வேரை ஆயினும் ;

நின்ற ..... அதற்கு இருப்பிடமாய் நின்ற ,

மண் ஆயினும் ..... மண்ணை ஆயினும் ;

கொண்டு ..... நீங்கள் கைக் கொண்டு ,

வீசுமினே ..... அதன் காற்று இவள் மேல் படும்படி வீசுங்கள் !

054 / 100

எம் ஈசர் , மலர் அடிக்கீழ் , எம்மைச் சேர்விக்கும் வண்டுகளே ! பேசும்படி அன்ன பேசியும் , போவது !

வீசும் - சிறகால் , பறத்திர் ! விண் - நாடும் , நுங்கட்கு - எளிது ,

பேசும்படி - அன்ன , பேசியும் , போவது ! நெய் , தொடு , உண்டு -

ஏசும்படி - அன்ன , செய்யும் - எம் - ஈசர் , விண்ணோர் , பிரானார் ,

மாசு - இல் - மலர் - அடிக் , கீழ் ; எம்மைச் , சேர்விக்கும் , வண்டுகளே !

நெய் ..... திரு ஆய்ப்பாடியிலே நெய்யைக் ,

தொடு ..... கை தொட்டுக் கவர்ந்து ,

உண்டு ..... அமுது செய்து ,

ஏசும்படி ..... பலரும் பரிஹஸிக்கும்படி ,

அன்ன ..... மற்றும் பல அப்படிப்பட்ட காரியங்களைச் ,

செய்யும் ..... செய்து அருளிய ,

எம் ஈசர் ..... எமது தலைவரும் ,

விண்ணோர் ..... மேல் உலகில் உள்ளோர்க்குத் ,

பிரானார் ..... தலைவரும் ஆகிய எம்பெருமானுடைய ,

மாசு இல் ..... குற்றம் இல்லாத ,

மலர் அடிக் கீழ் .... செந்தாமரை மலர் போன்ற திருவடிகளின் கீழே ,

எம்மைச் ..... எம்மை ,

சேர்விக்கும் ..... அடைவிக்க வல்ல ,

வண்டுகளே ..... ஓ வண்டுகளே!

வீசும் சிறகால் ..... வேகமாக வீசுகின்ற சிறகுகளால் ,

பறத்திர் ..... பறந்து செல்ல வல்லீர் !

விண் நாடும் ..... அவர் வீற்றிருக்கும் பரம பதமும் ,

நுங்கட்கு ..... உங்களுக்குச் ,

எளிது ..... செல்ல எளிது !

பேசும்படி ..... நீங்கள் எனக்காக அவரிடம் பேசும்படியான ,

அன்ன ..... அவ் வார்த்தைகளை ,

பேசியும் ..... என்னிடம் சொல்லியும் , போவது ..... போக வேண்டும் !

055 / 100

வண்டுகளோ ! ஒன்று உரைக்கியம் ! வைகுந்தம் அன்னாள்குழல் வாய் விரை போல் , விண்டு , கள் வாரும் மலர் , நும் வியல் இடத்தே உளவோ ?

வண்டுகளோ ! வம்மின் ! நீர்ப் , பூ , நிலப் , பூ , மரத்தில் - ஒள் - பூ ,

உண்டு , களித்து - உழல்வீர்க்கு - ஒன்று - உரைக்கியம் ! ஏனம் - ஒன்று - ஆய் ,

மண் - துகள் - ஆடி, வைகுந்தம் - அன்னாள் , குழல் , வாய் , விரை , போல் ,

விண்டு , கள் , வாரும் ; மலர் - உளவோ , நும் , வியல் - இடத்தே ?

வண்டுகளோ ..... வண்டுகளே !

வம்மின் ..... வாருங்கள் !

நீர்ப் பூ ..... நீரில் உண்டாகிற பூவும் ,

நிலப் பூ ..... நிலத்தில் உண்டாகிற பூவும் ,

மரத்தில் ..... மரத்தில் உண்டாகிற ,

ஒள் பூ ..... சிறந்த பூவும் என்கிற இவை எல்லாவற்றிலும் ,

உண்டு ..... தேனைக் குடித்து , களித்து ..... களிப்பு அடைந்து ,

உழல்வீர்க்கு ..... எங்கும் திரிகிற உங்களுக்கு ;

ஒன்று ..... யாம் இப்பொழுது ஒரு புதுமையைச் ,

உரைக்கியம் ..... சொல்லுவோம் !

ஏனம் ஒன்று ஆய் ..... ஒப்பற்ற ஒரு வராஹ மூர்த்தியாய் ,

மண் துகள் ஆடி ..... பூமியின் தூளியை அளைந்த எம்பெருமானுடைய ,

வைகுந்தம் ..... பரம பதத்தை ,

அன்னாள் ..... ஒத்திருக்கின்ற இப் பராங்குச நாயகியினுடைய ,

குழல் வாய் ..... கூந்தலில் இயற்கையாய் அமைந்துள்ள ,

விரை போல் ..... பரிமளம் போல ,

விண்டு ..... மலர்ந்து மணம் வீசி ,

கள் வாரும் ..... தேன் பெருகப் பெற்ற , மலர் ..... பூக்கள் ,

நும் வியல் இடத்தே ... உங்கள் ஆட்சிக்கு உட்பட்ட விசாலமான இடத்தில் ,

உளவோ ..... இருக்கின்றதோ ?

056 / 100

தோழி ! வியல் இடம் உண்ட பிரானார் விடுத்த திரு அருளால் , உயல் இடம் பெற்று உய்ந்தம் ! அஞ்சலம் !

வியல் - இடம் - உண்ட , பிரானார் , விடுத்த , திரு - அருளால் ;

உயல் - இடம் , பெற்று - உய்ந்தம் ! அஞ்சலம் - தோழி ! ஓர் , தண் , தென்றல் வந்து

அயல் - இடை , யாரும் - அறிந்திலர் - அம் , பூந் , துழாயின் - இன் , தேன் ,

புயல் - உடை , நீர்மையினால் , தடவிற்று - என் , புலன் , கலனே !

வியல் ..... விசாலமான ,

இடம் ..... உலகங்களை ,

உண்ட ..... தன் திரு வயிற்றில் கொண்டு அருளிய ,

பிரானார் ..... பிரபு ஆகிய எம்பெருமான் ,

விடுத்த ..... எம்மிடத்துச் செலுத்திய ,

திரு அருளால் ..... சிறந்த கருணையினால் ;

உயல் ..... உஜ்ஜீவிப்பதற்கு ,

இடம் பெற்று ..... இடம் பெற்று ,

உய்ந்தம் ..... வாழ்ந்திட்டோம் !

அஞ்சலம் ..... இனி வாடை முதலியவற்றுக்கு அஞ்ச மாட்டோம் !

தோழி ..... வாராய் தோழி !

ஓர் தண் ..... ஒரு குளிர்ந்த ,

தென்றல் வந்து ..... தென்றல் காற்று வந்து ,

அயல் இடை ..... அருகில் ,

யாரும் ..... எவரும் ,

அறிந்திலர் ..... அறியாதபடி ,

அம் ..... அழகிய ,

பூந் துழாயின் ..... பூக்களை உடைய திருத் துழாயின் ,

இன் தேன் ..... இனிய தேன் துளிகளை ,

புயல் உடை ..... மழை துளித்தல் போல் ,

நீர்மையினால் ..... துளிக்கும் தன்மை உடையதாய் ,

என் புலன் ..... என் அவயவங்களிலும் ,

கலனே ..... ஆபரணங்களிலும் ,

தடவிற்று ..... ஸ்பர்சித்தது !

057 / 100

கண்ணன் கையால் மலக்குண்டு அமுதம் சுரந்த மறிகடல் போன்றவற்றால்
கலக்குண்ட நான்று கண்டார் யாரும் , எம்மை , கழறலரே !

புலக் , குண்டலப் , புண்டரீகத்த , போர்க் , கெண்டை ; வல்லி - ஒன்றால் ,

விலக்குண்டு - உலாகின்ற , வேல் , விழிக்கின்றன ; கண்ணன் , கையால் ,

மலக்குண்டு - அமுதம் - சுரந்த , மறி , கடல் , போன்றவற்றால் -

கலக்குண்ட , நான்று , கண்டார் ; எம்மை , யாரும் - கழறலரே !

புலக் ..... அழகிய ,

குண்டலப் ..... குண்டலங்களை உடைய ,

புண்டரீகத்த ..... தாமரை மலர் போன்றதான தலைவியின் முகத்தில் உள்ள ,

போர்க் ..... தம்மில் ஒன்றோடு ஒன்று எதிர்த்துப் போர் செய்கிற ,

கெண்டை ..... இரண்டு கெண்டை மீன்கள் போன்ற கண்கள் ,

வல்லி ஒன்றால் .... மூக்கு ஆகிய ஒரு கொடியால் ,

விலக்குண்டு ..... குறுக்கிட்டு இடையில் விலக்கப்பட்டு ,

உலாகின்ற ..... தனித்தனி சீற்றத்தோடு உலாவிக் கொண்டு ,

வேல் ..... வேலாயுதத்தைக் கொண்டு குத்தினாற்போல் ,

விழிக்கின்றன ..... வருத்துவனாய் நோக்குகின்றன !

கண்ணன் ..... எம்பெருமானுடைய ,

கையால் ..... திருக் கைகளால் ,

மலக்குண்டு ..... கடைந்து கலக்கப்பட்டு ,

அமுதம் ..... தன்னிடத்தில் உள்ள அமிர்தத்தை ,

சுரந்த ..... வெளிப்படுத்தின ,

மறி கடல் ..... அலை கிளரப் பெற்ற கடல் ,

போன்று ..... போல ;

அவற்றால் ..... அக் கண்களால்

கலக்குண்ட ..... கலக்கப்பட்ட ,

நான்று ..... பொழுது ,

கண்டார் ..... அக் கண்களின் நிலைமையை பார்த்தவர் ,

யாரும் ..... எவரும் ,

எம்மை ..... எம்மைக்

கழறலரே ..... குற்றம் சொல்ல மாட்டார்கள் !

058 / 100

உழறு அலர் ஞானச்சுடர் விளக்காய் ; உயர்ந்தோரை இல்லா ; அழறு அலர் தாமரைக் கண்ணன் , இங்கு அளக்கின்றது என்னோ ?

கழல் - தலம் - ஒன்றே , நிலம் - முழுது - ஆயிற்று ; ஒரு , கழல் , போய் ,

நிழல் , தர - எல்லா , விசும்பும் , நிறைந்தது ; நீண்ட - அண்டத்து -

உழறு - அலர் , ஞானச் , சுடர் , விளக்காய் - உயர்ந்தோரை - இல்லா ,

அழறு - அலர் , தாமரைக் , கண்ணன் ; என்னோ - இங்கு - அளக்கின்றதே ?

கழல் தலம் ஒன்றே .... ஒரு திருவடியிடமே ,

நிலம் முழுது ..... பூமி முழுவதும் ,

ஆயிற்று ..... தானாய்ப் பரந்தது !

ஒரு கழல் ..... மற்றொரு திருவடி ,

போய் ..... பூமியில் இடம் இல்லாமையால் மேலே போய் ,

நிழல் தர ..... நிழலைத் தரும்படி ,

எல்லா விசும்பும் ..... ஆகாச அவகாசம் முழுவதிலும் ,

நிறைந்தது ..... வியாபித்தது !

நீண்ட அண்டத்து ..... அளவிட ஒண்ணா பரம பதத்தில் எழுந்தருளி இருப்பவனும் ,

உழறு ..... எங்கும் செல்ல வல்ல ,

அலர் ..... பரந்த ,

ஞானச் சுடர் ..... ஞானமான ஒளிக்கு ,

விளக்காய் ..... இடமான விளக்கு போன்றவனும் ;

உயர்ந்தோரை ..... தன்னிலும் மேம்பட்டவரை ,

இல்லா ..... உடையவர் இல்லாதவனும் ;

அழறு அலர் ..... சேற்றில் மலர்ந்த செவ்வி மாறாத ,

தாமரைக் ..... செந்தாமரை மலர் போன்ற ,

கண்ணன் ..... திருக் கண்களை உடையவனுமான திருமால் ,

இங்கு ..... இந்த லீலா விபூதியில் ,

அளக்கின்றதே ..... அளக்க வேண்டியது ,

என்னோ ..... உண்டோ ?

059 / 101

வல் வினையேன் , ஓங்கு முந்நீர் , வளப் பெரு நாடன் , மது சூதனன் என்னும் !

அளப்பு - அரும் , தன்மைய , ஊழியம் - கங்குல் ; அம் - தண் - அம் - துழாய்க்கு -

உளப் , பெரும் - காதலின் , நீளிய - ஆய் , உள ! ஓங்கு , முந்நீர் ,

வளப் , பெரு , நாடன் , மதுசூதனன் - என்னும் ! வல் , வினையேன் ,

தளப் , பெரு , நீள் - முறுவல் ; செய்ய , வாய , தட , முலையே !

வல் வினையேன் ..... கொடிய தீவினையை உடைய எனது ,

தளப் பெரு நீள் ..... முல்லை அரும்பின் அளவான பெருமையையும் நீட்சியும் உள்ள ,

முறுவல் ..... பல் வரிசையையும் ,

செய்ய வாய ..... சிவந்த வாயையும் ,

தட முலையே ..... பெரிய தனங்களையும் உடைய இப் பெண் பிள்ளை ,

அளப்பு ..... அளவிடுவதற்கு ,

அரும் தன்மைய ..... அரியதான தன்மையை உடைய ,

ஊழி ..... கற்பங்களிலும் ,

அம் ..... அழகிய நீண்ட ,

கங்குல் ..... இராப் பொழுதுகள் ;

அம் ..... அழகிய ,

தண் ..... குளிர்ந்த ,

அம் துழாய்க்கு ..... திருத்துழாய் விஷயமாக ,

உளப் ..... என் உள்ளத்தில் ,

பெரும் காதலின் ..... வளர்கின்ற மிக்க வேட்கை போல ,

நீளிய ஆய் உள ..... நீண்டனவாய் உள்ளன !

ஓங்கு முந்நீர் ..... உயர்ந்த கடல் சூழ்ந்த ,

வளப் பெரு நாடன்.... வளப்பமுள்ள பெரிய நாட்டை ஆளுபவன் ,

மதுசூதனன் ..... மது எனும் பெரும் அசுரனை அழித்தவன் ,

என்னும் ..... என்று வாய் விட்டுச் சொல்லி அலற்றுகிறாள் !

060 / 101

மொய் பூங்குழல் , குறிய ! கலையோ , அரை இல்லை ! நாவோ குழறும் ! திரு வேங்கடமே , பெருமான் மலையோ என்று கற்கின்றனர் வாசகமே ! இவள் , பரமே ?

முலையோ , முழு , முற்றும் , போந்து - இல ! மொய் , பூங் , குழல் , குறிய !

கலையோ - அரை - இல்லை ! நாவோ , குழறும் ! கடல் , மண் , எல்லாம் ,

விலையோ - என , மிளிரும் ! கண் - இவள் , பரமே ? பெருமான் ,

மலையோ ? திரு வேங்கடம் - என்று , கற்கின்ற , வாசகமே !

முலையோ ..... ஸ்தனங்களோ எனில் ,

முழு முற்றும் ..... மிக முழுவதும் ,

போந்து இல ..... தோன்றின இல்லை !

மொய் பூங் குழல் ..... அடர்ந்த மென்மையான தலை மயிர்கள் ,

குறிய ..... முடி கூடாமல் குட்டையாய் உள்ளன !

கலையோ ..... ஆடையோ எனில் ,

அரை இல்லை ..... இடையில் பொருந்த உடுக்கள் படுவதில்லை !

நாவோ ..... நாக்கோ என்னில் ,

குழறும் ..... திருத்தமாகப் பேசாமல் குதலைச் சொல் பேசுகிறது !

கண் ..... கண்களோ என்னில் ,

கடல் மண் எல்லாம் ..... கடல் சூழ்ந்த உலகம் எல்லாம் ,

விலையோ என ..... இவற்றுக்கு விலைப் பொருளோ என்று சொல்லும்படி ,

மிளிரும் ..... ஒரு நிலையில் நில்லாமல் பிறழ்ந்து நோக்குகின்றன !

திரு வேங்கடம் ..... திருவேங்கடமலை ,

பெருமான் ..... எனது தலைவனது ,

மலையோ ..... இருப்பிடமோ ?

என்று கற்கின்ற ..... என்று பல காலும் சொல்லிப் ,

வாசகமே ..... பயில்கிற வார்த்தை ,

இவள் பரமே ..... இளமைப்பருவம் உடைய இவளிடம் உண்டாகக் கடவதோ ?

061 / 100

நம் இறையே , நாயகர் எல்லாம் தொழுமவன் ,ஞாலம் முற்றும் ,இரண்டே அடியால் , தாயவன் ; ஆய்க் குலம் ஆய் ; வந்து தோன்றிற்று ; வாசகம் செய்வது நம் பரமே !

வாசகம் , செய்வது , நம் , பரமே ! தொல்லை , வானவர் , தம் ,

நாயகன் ! நாயகர் - எல்லாம் , தொழுமவன் ! ஞாலம் - முற்றும் ,

வேயகம் - ஆயினும் , சோரா , வகை - இரண்டே - அடியால் ,

தாயவன் ! ஆய்க் , குலம் - ஆய் , வந்து , தோன்றிற்று , நம் - இறையே !

தொல்லை ..... பழமையான ,

வானவர் தம் ..... நித்ய ஸூரிகளுக்கு ,

நாயகன் ..... தலைவனும் ;

நாயகர் ..... ஈச்வரத்வம் பாராட்டுகிற பிரமன் ,

எல்லாம் ..... முதலியோர் எல்லோரும் ,

தொழுமவன் ..... தம் தம் தலைமை பெறும் பொருட்டு வணங்கும்படி ஆனவனும் ;

ஞாலம் ..... உலகம் ,

முற்றும் ..... முழுவதையும் ,

வேய் அகம் ஆயினும் ..... ஒரு கோற்குத்து நிலம் ஆயினும் ,

சோரா வகை ..... தவறாதபடி , துளி இடமும் மிச்சம் ஆகாதபடி ,

இரண்டே அடியால் ..... தனது இரண்டே காலடிகளால் ,

தாயவன் ..... அளந்து கொண்டவனும் ஆகிய ,

நம் இறையே ..... நமது தலைவன் ,

ஆய்க் குலம் ஆய் ..... இடையர் குலத்தை உடையவனாய்க் கொண்டு ,

வந்து தோன்றிற்று ..... அக்குலத்தில் வந்து தோன்றிய எளிமையை ,

வாசகம் செய்வது ..... எடுத்துப் புகழ்ந்து கூறுவது ,

நம் பரமே ..... நம்மால் ஆகக் கடவதோ (ஆகாது)

062 / 101

அரவு அணை மேல் பள்ளி கொண்ட முகில் வண்ணனே ! இவள்தன் நிறையோ , இனி , உன் திருவருளால் அன்றிக் காப்பு அரிது ! முறையோ ?

இறையோ - இரக்கினும் - ஈங்கு - ஓர் , பெண்பால் - எனவும் - இரங்காது ;

அறையோ ! என , நின்றது - இரும் - கரும் - கடல் ; ஈங்கு - இவள் , தன் ,

நிறையோ - இனி - உன் , திரு - அருளால் - அன்றிக் , காப்பு - அரிது - ஆல் !

முறையோ ? அரவு - அணை , மேல் - பள்ளி , கொண்ட , முகில் , வண்ணனே !

இரக்கினும் ..... எவ்வளவு வேண்டிக் கொண்டாலும் ,

ஓர் பெண்பால் ..... இவள் ஒரு பெண் மகள் ,

எனவும் ..... என்று கருதியும் ,

ஈங்கு ..... இவளிடத்தில் ,

இறை ..... சிறிதும் ,

இரங்காது ..... இரக்கம் கொள்ளாமல் ,

கரும் கடல் ..... கரிய கடலானது ,

அறையோ ..... இவளிடத்தில் அறை கூவுகின்றதோ ,

என நின்று ..... என்று சொல்லும் நிலை நின்று ,

அதிரும் ..... ஒரே விதமாகக் கோஷம் செய்கிறது !

ஓ ..... இது ஒரு கொடுமையே !

அரவு அணை மேல் .... சேஷ சயனத்தின் மீது ,

பள்ளி கொண்ட ..... சயனித்து அருளுகின்ற ,

முகில் வண்ணனே ..... காளமேகம் போன்ற வடிவுடையவனே !

ஈங்கு ..... இவளிடத்தில் ,

இவள்தன் ..... இவளுடைய ,

நிறையோ ..... நிறைக்குணமோ என்னில் ,

இனி ..... இனிமேல் ,

உன் திரு அருளால் .... உனது கிருபையனால் ,

அன்றிக் ..... அல்லாது வேறு ஒன்றினால்,

காப்பு ..... பாதுகாத்து வைக்க ,

அரிது ..... முடியாது !

முறையோ ..... இவளை இங்ஙனம் உபேக்ஷித்தல் முறைமையோ ?

ஆல் ..... (அசைச் சொல்)

063 / 100

கண்ணன் திருமால் திருமுகம் தன்னொடும் , காதல் செய்தேற்கு , அவனது திருக்கண்கள் , எண்ணம் புகுந்து , அடியேனொடு இருக்கின்றனவே !

வண்ணம் , சிவந்துள ; வான் - நாடு - அமரும் - குளிர் , விழிய ;

தண் , மென் , கமலத் , தடம் , போல் - பொலிந்தன ! தாம் - இவையோ ,

கண்ணன் - திருமால் , திருமுகம் - தன்னொடும் - காதல் , செய்தேற்கு ,

எண்ணம் , புகுந்து ; அடியேனொடு - இக்காலம் - இருக்கின்றவே !

வண்ணம் சிவந்துள ..... திருநிறம் சிவந்துளவையும் ;

வான் நாடு அமரும் ..... பரம பதம் ஆனந்தம் அடையும்படியான ,

குளிர் விழிய ..... குளிர்ந்த பார்வையை உடையவையும் ;

தண் மென் ..... குளிர்ந்த மென்மையான ,

கமலத் தடம் போல் ..... தாமரைத் தடாகம் போல் ,

பொலிந்தன ..... விளங்குகின்றவையும் ஆகிய ;

இவையோ தாம் ..... இத் திருக் கண்களோ ,

கண்ணன் ..... கிருஷ்ணாவதாரம் செய்தவனும் ,

திருமால் ..... திருமகள் கணவனுமாகிய பெருமானுடைய ,

திருமுகம் தன்னொடும் ... திருமுகமண்டலத்திலே ,

காதல் செய்தேற்கு ..... வேட்கை கொண்டிருக்கிற என்னுடைய ,

எண்ணம் புகுந்து ..... மனத்தில் பிரவேசித்து ,

இக் காலம் ..... இப்பொழுதும் ,

அடியேனொடு ..... விட்டு நீங்காமல் என்னோடு ,

இருக்கின்றவே ..... இருக்கின்றன !

064 / 100

உலகு அளந்த , திருத் தாள் இணை ; நிலத் தேவர் , இருக்கு ஆர் மொழி யால் , வணங்குவர் ! யாமும் , கனி இன்மையின் , கருக்காய் கடிப்பவர் போலே , திரு நாமச் சொல் கற்றனமே !

இருக்கு - ஆர் , மொழியால் , நெறி - இழுக்காமை ; உலகு - அளந்த ,

திருத் , தாள் - இணை , நிலத் தேவர் , வணங்குவர் ; யாமும் - அவா ,

ஒருக்கா , வினையோடும் - எம்மொடும் , நொந்து , கனி - இன்மையின் -

கருக்காய் , கடிப்பவர் , போல் ; திரு , நாமச் , சொல் , கற்றனமே !

நிலத் தேவர் ..... பூமி தேவர்கள் ஆகிய பிராமணர்கள் ,

இருக்கு ஆர் ..... வேதங்களில் பொருந்தின ,

மொழியால் ..... மந்திரங்களைக் கொண்டு ;

உலகு அளந்த ..... உலகை அளந்திட்ட ,

திருத் தாள் இணை .... எம்பெருமானது திருவடிகளை ,

நெறி இழுக்காமை ..... முறைமை தவறாமல் ,

வணங்குவர் ..... வணங்கி அனுபவிப்பர் !

யாமும் ..... நாமும் ,

அவா ஒருக்கா ..... எமது ஆசையை அடக்க மாட்டாமல் ,

வினையோடும் ..... எமது பாவத்தையும் ,

எம்மொடும் ..... எம்மையும் ,

நொந்து ..... வெறுத்துக் கொண்டு ;

கனி இன்மையின் ..... பழம் கிடைக்காமையால் ,

கருக்காய் ..... பிஞ்சைத் ,

கடிப்பவர் போல் ..... தின்பவர் போல் ,

திரு நாமச் சொல் ..... அவனது திரு நாமங்களாகிய சொற்களைச் ,

கற்றனமே ..... சொல்கிறோம் !

065 / 101

உலகம் எல்லாம் விழுங்கி , உமிழ்ந்த பிரானார் , திருவடிக் கீழ் ,

உற்றும் , உறாதும் , மிளிர்ந்த கண்ணாய் ; எம்மை உண்கின்றனவே !

கற்றுப் , பிணை , மலர் , கண்ணின் , குலம் , வென்று , ஒரோ , கருமம் -

உற்றுப் ; பயின்று ; செவியொடு , உசாவி ; உலகம் - எல்லாம் ,

முற்றும் , விழுங்கி - உமிழ்ந்த , பிரானார் , திருவடிக் , கீழ் ,

உற்றும் , உறாதும் ; மிளிர்ந்த , கண் - ஆய் ; எம்மை - உண்கின்றனவே !

கற்றுப் பிணை ..... இளமையான பெண் மான்களுடைய ,

மலர் கண்ணின் .... பரந்த கண்களின் ,

குலம் ..... சாதியை ,

வென்று ..... ஜயித்து ;

ஒரோ கருமம் ..... ஒரு காரியத்தில் ,

உற்றுப் ..... பொருந்தி ;

பயின்று ..... அக் காரியத்தில் பழகி,

செவியொடு ..... அக்காரியத்தைக் காதுகளால் ,

உசாவி ..... வினாவி , ஆலோசித்து ,

உற்றும் ..... எனக்கு அனுகூலமாயும் ,

உறாதும் ..... பிரதிகூலமாயும் ,

மிளிர்ந்த ..... தடுமாறுகிற ,

கண் ஆய் ..... கண்கள் ஆகி ,

உலகம் எல்லாம் .... இவை எல்லா உலகங்களையும் ,

முற்றும் விழுங்கி .... மிச்சம் இல்லாதபடி பிரளய காலத்தில் வயிற்றினுள்கொண்டு ,

உமிழ்ந்த ..... பின்பு வெளியிட்ட,

பிரானார் ..... எம்பெருமானது ,

திருவடிக் கீழ் ..... திருவடிகளின் கீழே இவ்வுலகத்தில் ,

எம்மை ..... எம்மைத் தமக்கு உள்ளாம்படி ,

உண்கின்றனவே ..... கவர்ந்து கொள்கின்றன !

066 / 101

பராங்குச நாயகியின் கண்கள் ; உண்ணாது , உறங்காது , உணர்வு உறும் , எத்தனை யோகியர்க்கும் , எண் ஆய் மிளிரும் இயல்பின !

உண்ணாது - உறங்காது , உணர்வு - உறும் - எத்தனை , யோகியர்க்கும் ;

எண் - ஆய் , மிளிரும் - இயல்பின - ஆம் ; எரி , நீர் , வளி , வான் ,

மண் - ஆகிய - எம் , பெருமான் - தனது , வைகுந்தம் - அன்னாள் ,

கண் - ஆய் - அரு , வினையேன் ; உயிர் - ஆயின ! காவிகளே !

எரி ..... அக்னி , நீர் ..... ஜலம் ,

வளி ..... வாயு , வான் ..... ஆகாசம் ,

மண் ..... பூமி , ஆகிய ..... என்னும் பஞ்ச பூதங்களின் வடிவமான ,

எம்பெருமான் தனது .... எம்பெருமானுடைய ,

வைகுந்தம் ..... ஸ்ரீவைகுண்டத்தை ,

அன்னாள் ..... ஒத்து அனுபவிக்கத் தக்கதான தலைமகளின் ,

கண் ஆய் ..... கண்கள் என்று பேராய் ,

அரு ..... தீர முடியாத ,

வினையேன் ..... தீவினைகளை உடைய எனக்கு ,

உயிர் ஆயின ..... உயிர் நிலையான ,

காவிகளே ..... செங்கழுநீர்ப் பூக்கள் ஆனவை ;

உண்ணாது ..... உண்ணாமலும் ,

உறங்காது ..... உறங்காமலும் ,

உணர்வு உறும் ..... எப்பொழுதும், த்யாக ரூபமான ஞானத்திற்குப் பொருந்தின ,

எத்தனை ..... மிக்க யோக நிலையை உடைய ,

யோகியர்க்கும் ..... முனிவர்கள் எல்லார்க்கும் ,

எண் ஆய் ..... அந்த யோகத்தை விட்டு ,

மிளிரும் ..... பிறழ்ந்து தோன்றுகிற ,

இயல்பின ஆம் ..... தன்மை உடையது ஆகும் !

067 / 100

பராங்குச நாயகியின் கண்களின் அழகு , எல்லாப் பூக்களையும் வென்று விட்டது !

காவியும் , நீலமும் , வேலும் - கயலும் , பல , பல , வென்று ;

ஆவியின் , தன்மை - அளவு - அல்ல , பாரிப்பு ; அசுரைச் , செற்ற ,

மா , விய , புள் வல்ல , மாதவன் , கோவிந்தன் , வேங்கடம் - சேர் ,

தூவி - அம் , பேடை - அன்னாள் ; கண்கள் - ஆய , துணை , மலரே !

அசுரைச் ..... அசுரர்களை , செற்ற ..... அழித்த ,

மா ..... பெரிய , விய ..... ஆச்சரியகரமான ,

புள் ..... கருடப் பறவையை , வல்ல ..... ஏறி நடத்துகிற ,

மாதவன் ..... திருமகள் கணவனும் ,

கோவிந்தன் ..... பசுக்களைக் காப்பவனும் ஆன பெருமானுடைய ,

வேங்கடம் ..... திருவேங்கட மா மலையில் ,

சேர் ..... பொருந்தி வாழ்கிற

தூவி அம் ..... சிறகழகை உடைய ,

பேடை ..... அன்னப் பேடை ,

அன்னாள் ..... போன்றவளது ,

கண்கள் ஆய ..... கண்களாகிய ,

துணை மலரே .... ஒன்றோடு ஒன்று ஒத்த இரண்டு தாமரை மலர்கள் ;

காவியும் ..... செங்கழுநீர்ப் பூவையும் ,

நீலமும் ..... கரு நெய்தல் பூவையும் ,

வேலும் ..... வேல் படையையும் , கயலும் ..... கயல் மீனையும் ,

பல பல ..... மற்றும் கண்ணுக்கு ஒப்பாகும் மான் விழி முதலிய , பல பொருட்களை .

வென்று ..... ஜயித்து ,

பாரிப்பு ..... என்னை வருத்தத்துவதற்கு அடி கோலிய பரப்பு ,

ஆவியின் ..... எனது உயிரின் , தன்மை ..... தன்மைக்கு ஏற்ற ,

அளவு அல்ல ..... அளவு அல்ல !

068 / 101

நிலம் தாவிய , எம்பெருமான் தனது வைகுந்தம் அன்னாய் ! வன் கொன்றைகள் கார்த்தனவே ! மலர்ந்தே ஒழிந்தில !

மலர்ந்தே , ஒழிந்தில ! மாலையும் , மாலைப் , பொன் , வாசிகையும் ;

புலம் - தோய் , தழைப் , பந்தர் , தண்டு - உற , நாற்றி ; பொரு , கடல் , சூழ் ,

நிலம் - தாவிய - எம்பெருமான் , தனது , வைகுந்தம் - அன்னாய் !

கலந்தார் , வரவு - எதிர் , கொண்டு ; வன் , கொன்றைகள் , கார்த்தனவே !

பொரு ..... அலை மோதுகிற ,

கடல் சூழ் ..... கடலால் சூழப் பட்ட ,

நிலம் ..... பூலோகத்தை ,

தாவிய ..... அளந்து அருளிய ,

எம்பெருமான் தனது .... எம்பெருமானுடைய ,

வைகுந்தம் ..... ஸ்ரீவைகுண்டத்தை ,

அன்னாய் ..... ஒத்து விளங்குகிறவளே !

கலந்தார் ..... உன்னோடு கலந்து பிரிந்து சென்றவருடைய ,

வரவு ..... வருகையை , எதிர் கொண்டு ..... முந்தி எதிர்பார்த்து ,

வன் கொன்றைகள் ..... வலிய கொன்றை மரங்கள் ,

கார்த்தனவே ..... கரு அடைந்து அரும்பின !

மாலையும் ..... மாலைகளையும் ,

மாலைப் பொன் ..... பொன்னால் ஆகிய சுருள் ,

வாசிகையும் ..... வட்டத்தையும் ,

புலம் தோய் ..... மனோஹரமான ,

தழைப் பந்தர் ..... தழைகளால் ஆகிய பந்தலிலே ,

தண்டு உற ..... கொம்புகளிலே நெருங்க ,

நாற்றி ..... தொங்கவிட்டுக் கொண்டு ,

மலர்ந்தே ஒழிந்தில ..... முழுதும் மலரவில்லை !

069 / 101

வார் ஏற்று இள முலையாய் !புவனிஎல்லாம் அளந்த நெடிய பிரான் அருளாவிடுமே ?
உன் வளைத் திறமே வருந்தேல் !

கார் - ஏற்று - இருள் , செகில் - ஏற்றின் , சுடருக்கு - உளைந்து ; வெல்வான் ,

போர் - ஏற்று - எதிர்த்து , புன் - தலை , மாலை ; புவனி - எல்லாம் ,

நீர் - ஏற்று - அளந்த , நெடிய , பிரான் - அருளா , விடுமே ?

வார் - ஏற்று - இள , முலையாள் ! வருந்தேல் ! உன் , வளைத் , திறமே !

கார் ..... கருத்த , இருள் ..... இருள் ஆகிய ,

ஏற்று ..... எருதானது , செகில் ..... சிவந்த ,

சுடர் ..... ஸூரியன் ஆகிய , ஏற்றிற்கு ..... எருதுக்கு எதிரில் ,

உளைந்து ..... இளைத்து ,

வெல்வான் ..... மீள வெல்லும் பொருட்டு ,

போர் ஏற்று ..... போர் செய்வதை ஏற்றுக் கொண்டு ,

எதிர்ந்து ..... வந்து எதிர் இட்டது !

நீர் ஏற்று ..... மாவலி கையால் நீரைக் கையில் ஏற்று ,

புவனி எல்லாம் ..... எல்லா உலகங்களையும் ,

அளந்த ..... அளந்து கொண்ட , நெடிய ..... நீண்ட வடிவம் உடைய

பிரான் ..... தலைவன் ,

புன் தலை ..... அற்புதமான தன்மையை உடைய ,

மாலை ..... மாலைப் பொழுதில் ,

அருளா விடுமே ..... உனக்கு அருள் செய்யாது விடுவனோ ?

வார் ஏற்று ..... கச்சை மேல் ஏறுவிக்கும்படி ,

இள முலையாய் ..... வளர்ந்த இளமை மாறாத தனங்களை உடையவளே !

உன் வளைத் திறமே ..... உன் கைவளை நிமித்தமாக ,

வருந்தேல் ..... வருத்தப்படாதே !

070 / 100

எங்கள் வானவனார் , துழாய்க்கு , வண்ணம் பயலை விளைவான் , எம்மை , திங்கள் , ஆண்டு , ஊழி , உளைவான் !

வளை , வாய்த் , திருச் , சக்கரத்து - எங்கள் , வானவனார் , முடி , மேல் ,

தளை , வாய் , நறும் - கண்ணித் , தண் - அம் - துழாய்க்கு , வண்ணம் , பயலை ,

விளைவான் , மிக , வந்து , நாள் , திங்கள் - ஆண்டு - ஊழி , நிற்க - எம்மை ,

உளைவான் , புகுந்து ; இது - ஓர் - கங்குல் - ஆயிரம் - ஊழிகளே !

வளை வாய்த் ..... வட்டமான நுனியை உடைய ,

திருச் சக்கரத்து ... அழகிய சக்கரத்தை உடைய ,

எங்கள் ..... எமக்குத் தலைவரும் ;

வானவனார் ..... பரம பதத்தில் இருப்பவருமான பெருமாளுடைய ,

முடி மேல் ..... திரு முடியில் சாத்தியுள்ள ,

தளை வாய் ..... கட்டு வாய்ந்த ,

நறும் ..... பரிமளம் உள்ள ,

கண்ணித் ..... மாலை வடிவமான ,

தண் அம் ..... குளிர்ந்த அழகிய ,

துழாய்க்கு ..... திருத்துழாய்க்கு ஆசைப் பட்டு ,

வண்ணம் ..... எனது மாமை நிறம் ,

பயலை ..... பசலை நிறம்

விளைவான் ..... விஞ்சும்படி ,

மிக வந்து ..... அடர வந்து ,

நாள் ..... நாளாயும் ,

திங்கள் ..... மாதமாயும் ,

ஆண்டு ..... வருடமாயும் ,

ஊழி ..... கற்பமாயும் ,

நிற்க ..... நின்றது தவிர ,

எம்மை ..... எம்மை ,

உளைவான் ..... முற்றும் அழிக்க ,

புகுந்து ..... நெருங்கி ,

இது ஓர் கங்குல் .... இந்த ஒரு ராத்ரி தானே ,

ஆயிரம் ..... ஆயிரம் ,

ஊழிகளே ..... கற்பமாக நின்றது !

071 / 101 எம்மை , அன்னை சூழ்கின்றனவே உரையீர் !

ஊழிகள் - ஆய் - உலகு - ஏழும் - உண்டான் - என்று - இலம் ! பழம் - கண்டு - ஆழி , களாம்பழ , வண்ணம் - என்றேற்கு ; அஃதே , கொண்டு - அன்னை , நாழ் - இவளோ - என்னும் ! ஞாலம் - உண்டான் , வண்ணம் - சொல்லிற்று - என்னும் தோழிகளோ ! உரையீர் ! எம்மை - அம்மனை , சூழ்கின்றனவே !

ஊழிகள் ஆய் ..... காலங்களுக்கு நிர்வாஹகனாய் ,

உலகு ஏழும் ..... உலகம் முழுவதையும் ,

உண்டான் ..... வயிற்றில் வைத்துக் காத்து அருளியவன்

என்று இலம் ..... என்று வெளிப்படையாகக் கூறினோம் இல்லை !

களாம்பழம் கண்டு ... களாப் பழத்தைப் பார்த்து ,

பழம் வண்ணம் ..... இப் பழத்தின் நிறம் ,

ஆழி என்றேற்கு ..... கடலின் நிறம் என்று சொன்ன எனக்கு ,

அஃதே கொண்டு ..... அந்தச் சொல்லையே பொருளாகக் கொண்டு ,

அன்னை ..... எனது தாய் ,

இவளோ நாழ் ..... இப் பெண் பிள்ளையோ சுதந்திரமாய் நடப்பவள்

என்னும் ..... என்று கடும் சொல் கூறுவள் !

ஞாலம் உண்டான் .....உலகம் உண்ட அத் தலைவனது ,

வண்ணம் ..... நிறத்தைச் சொன்னவாறு

சொல்லிற்று .....,.. இது என்று

என்னும் ..... குற்றம் கூறுவள் !

தோழிகளோ ..... தோழிகளே !

எம்மை ..... எம்மை ,

அம்மனை ..... எமது தாய்

சூழ்கின்றனவே ..... மாறுபட நினைத்து சொல்லும் சொற்களுக்கு ,

உரையீர் ..... நீங்கள் சமாதானம் சொல்லுங்கள் !

072 / 101

துழாய் மலர்க்கே தாழ்கின்ற நெஞ்சத்து , ஒரு தமியாட்டியேன் , மாமைக்கு , இன்று வாழ்கின்ற ஆறு , வாலியது வந்து தோன்றிற்று இதுவோ ?

சூழ்கின்ற , கங்குல் - சுருங்கா - இருளின் , கரும் - திணிம்பை ;

போழ்கின்ற , திங்கள் - அம் , பிள்ளையும் , போழ்க ! துழாய் , மலர்க்கே ,

தாழ்கின்ற , நெஞ்சத்து - ஒரு , தமியாட்டியேன் , மாமைக்கு - இன்று ,

வாழ்கின்ற - ஆறு - இதுவோ ? வந்து , தோன்றிற்று , வாலியதே !

சூழ்கின்ற ..... இடைவிடாது சூழ்ந்து நிற்கிற ,

கங்குல் ..... ராத்திரியினுடைய ,

சுருங்கா ..... சுருங்காமல் பெருகுகிற ,

இருளின் ..... இருளினுடைய ,

கரும் ..... கருத்த ,

திணிம்பை ..... செறிவை ,

போழ்கின்ற ..... பிளக்கின்ற ,

அம் பிள்ளை ..... அழகிய இளம் ,

திங்களும் ..... சந்திரனும் ,

போழ்க ..... என்னையும் பிளக்கட்டும் !

துழாய் மலர்க்கே ..... நாயகனது துழாய் மலரைப் பெறுவதற்காகவே ,

தாழ்கின்ற ..... ஈடுபடுகிற ,

நெஞ்சத்து ..... மனத்தை உடைய ,

ஒரு தமியாட்டியேன் .... ஒரு துணையும் இல்லாமல் மிக்க தனிமை உடைய என்னை ,

மாமைக்கு ..... இயல்பான மேனி நிறத்துக்கு ,

இன்று ..... இப்பொழுது , வாழ்கின்ற ஆறு ..... வாழ்க்கை நேரும்படி ,

வாலியது ..... சுத்தமான இளம் பிறை ,

வந்து தோன்றிற்று ..... வந்து தோன்றியது ,

இதுவோ ..... இப்படியோ ?

073 / 100

தமியாட்டி தளர்ந்து ; அடல் ஆழிப் பிரான் , பொழில் ஏழ் அளிக்கும் , சால்பின் தகைமை கொல் ஆம் ?

வால் , வெண் - நிலவு , உலகு - ஆர , சுரக்கும் , வெண் , திங்கள் - என்னும் ,

பால் , விண் , சுரவி , சுர , முதிர் , மாலை ; பரிதி , வட்டம் ,

போலும் , சுடர் - அடல் - ஆழிப் , பிரான் , பொழில் - ஏழ் - அளிக்கும் ,

சால்பின் , தகைமை , கொல் - ஆம் ? தமியாட்டி , தளர்ந்ததுவே !

விண் ..... ஆகாயத்தில் நின்று ,

வால் வெள் நிலவு ..... மிகவும் வெளுத்த நிலா ஆகிய ,

பால் ..... பாலை ,

உலகு ஆர ..... உலகம் எங்கும் நிறையும்படி ,

சுரக்கும் ..... சுரந்து சொரிகிற ,

வெண் திங்கள் என்னும் ... வெளுத்த சந்திரன் ஆகிய ,

சுரவி ..... பசுவினது ,

சுர ..... சுரப்பு ,

முதிர் ..... மிகப் பெற்ற ,

மாலை ..... மாலைப் பொழுதினில் ,

தமியாட்டி ..... நாயகன் வாராமையால் தனிமையை உடைய இவள் ,

தளர்ந்ததுவே ..... தளர்ச்சியை அடைந்த தன்மை ,

பரிதி வட்டம் போலும் ..... இத் திங்கள் ஒளியை விழுங்கவல்ல ஸூர்யமண்டலம் போலும் ,

சுடர் ..... ஒளியை உடைய ,

அடல் ஆழிப் ..... வலிய சக்கராயுதம் உடைய ,

பிரான் ..... அத் தலைவன் ,

ஏழ் பொழில் ..... ஏழு வகைப்பட்ட உலகங்களையும் ,

அளிக்கும் ..... ரக்ஷிக்கின்ற , சால்பின் ..... அமைவின் ,

தகைமை கொல் ஆம் ..... பெருமையோ ?

074 / 100

மால் வரையைக் , கீண்டு எடுத்தான் , முடி சூடு துழாய் , அளைந்து உண் , சிறு பசும் தென்றல் , வந்து உலாகின்றதே , அந்தோ !

தளர்ந்தும் , முறிந்தும் , வரு , திரைப் , பாயல் ; திரு , நெடும் - கண் ,

வளர்ந்தும் - அறிவுற்றும் , வையம் , விழுங்கியும் ; மால் , வரையைக் ,

கிளர்ந்து , மறி , தரக் , கீண்டு - எடுத்தான் , முடி , சூடு , துழாய் ,

அளைந்து - உண் , சிறு , பசும் - தென்றல் ; அந்தோ ! வந்து - உலாகின்றதே !

தளர்ந்தும் ..... கொந்தளித்து விழுவது எழுவதாய்க் கனத்தாலே தளர்ந்தும் ,

முறிந்தும் ..... காற்றாலே முறிந்தும் ,

வரு திரைப் ..... வருகிற அலைக் கிளர்ச்சியை உடைய ,

பாயல் ..... ஆதிசேஷன் ஆகிய சயனத்தில் ,

திரு நெடும் கண் ..... அழகிய நீண்ட திருக்கண்கள் ,

வளர்ந்தும் ..... உறங்கியும் ,

அறிவுற்றும் ..... அவ்வுறக்கத்தில் யாவும் அறிந்தும் ,

வையம் ..... பிரளய காலத்தில் உலகங்களை ,

விழுங்கியும் ..... வயிற்றினில் உட்கொண்டு காத்தும் ,

மால் வரையைக் ..... கோவர்த்தன கிரியை ,

கிளர்ந்து ..... மேல் எழுந்து ,

மறி தரக் ..... குடையாக கவியும்படி ,

கீண்டு எடுத்தான் ..... பெயர்த்து எடுத்தும் உதவுகிற எம்பெருமானது ,

முடி சூடு துழாய் ..... திரு முடியில் சூடுகிற திருத் துழாயை ,

அளைந்து உண் ..... அளாவி உண்ட ,

பசும் சிறு தென்றல் .... புதிய இளமையான தென்றல் காற்றானது ,

அந்தோ ..... மகிழ்ச்சி உண்டாகும்படி ,

வந்து ..... என் மேல் வந்து ,

உலாகின்றதே ..... வீசுகிறது !

075 / 100

வெம் சிலை வாள் முகத்தீர் , நும் நிலை இடமே , வைகுந்தமோ , வையகமோ ?

உலாகின்ற , கெண்டை - ஒளி - அம்பு ; எம் - ஆவியை - ஊடு - உருவக் ,

குலாகின்ற , வெம் - சிலை , வாள் , முகத்தீர் ! ; குனி , சங்கு - இடறிப் ,

புலாகின்ற , வேலைப் , புணரி , அம் , பள்ளி - அம்மான் , அடியார் ,

நிலாகின்ற , வைகுந்தமோ ? ; வையமோ ? நும் , நிலை - இடமே !

உலாகின்ற ..... காதளவும் சென்றும் உலாவுகின்ற ,

கெண்டை ..... கெண்டை மீன் வடிவமான ,

ஒளி அம்பு ..... ஒளியை உடைய கண்கள் ஆகிய அம்பு ;

எம் ஆவியை ..... எமது உயிரை ,

ஊடு உருவ ..... ஊடுருவித் துளைக்கும்படி ,

குலாகின்ற ..... அவ் வம்புகளைப் பிரயோகிப்பதற்கு வளைகின்றன ,

வெம் சிலை ..... புருவம் ஆகிய கொடிய வில்லை உடைய ,

வாள் முகத்தீர் .... ஒளி உடைய முகம் உடையவர்களே !

குனி சங்கு ..... வளைந்த வடிவம் உள்ள சங்குகளை ,

இடறிப் ..... கொழித்து எழுந்து ,

புலாகின்ற ..... மீன் நாற்றம் வீசப் பெற்ற ,

வேலைப் ..... அலைக் கிளர்ச்சியை உடைய ,

புணரி ..... கடலை ;

அம் பள்ளி ..... அழகிய படுக்கையாக உடைய ,

அம்மான் ..... ஸர்வேச்வரனது ,

அடியார் ..... பக்தர்களான நித்ய முக்தர்கள் ,

நிலாகின்ற ..... விளங்கி வாழப் பெற்ற ,

வைகுந்தமோ ..... ஸ்ரீவைகுண்ட லோகமோ ,

வையமோ ..... இந்த நிலவுலகமோ , நும் ..... உங்களது ,

நிலை இடமே .... இருப்பிடம் ?

076 / 100

இவ்வுலகு அளந்தான் , எழில் ஆர் , தண் துழாய் வடம் போது இனையும் மட நெஞ்சமே ! இது வியப்பே !

இடம் , போய் , விரிந்து - இவ் - உலகு - அளந்தான் , எழில் - ஆர் , தண் - துழாய் , வடம் , போது - இனையும் , மட , நெஞ்சமே ! ; நங்கள் , வெள் , வளைக்கே , விடம் , போல் , விரிதல் - இது , வியப்பே , வியன் , தாமரையின் , தடம் , போது - ஒடுங்க ; மெல் - ஆம்பல் - அலர்விக்கும் , வெண் , திங்களே

இடம் போய் ..... எல்லா இடங்களிலும் போய் ,

விரிந்து ..... வளர்ந்து ,

இவ் உலகு ..... இந்த உலகத்தை ,

அளந்தான் ..... அளந்து கொண்டவனுடைய ,

எழில் ஆர் ..... அழகு நிறைந்த ,

தண் துழாய் ..... குளிர்ந்த திருத்துழாய்

போது வடம் ..... மலர் மாலையைப் பெறும் பொருட்டு ,

இனையும் ..... வருந்துகிற ,

மட நெஞ்சமே ..... பேதைமை உடைய மனமே !

வியன் தாமரையின் .... சிறந்த தாமரையின் ,

தடம் போது ..... பெரிய மலர் ,

ஒடுங்க ..... குவிய ;

மெல் ஆம்பல் ..... புல்லிய ஆம்பலை ,

அலர்விக்கும் ..... மலரச் செய்கிற ,

வெண் திங்களே ..... வெள்ளிய சந்திரன் , நங்கள் ..... நமது ,

வெள் வளைக்கே ..... வெளுத்த வளைகளைக் கழலச் செய்வதற்காகவே ,

விடம் போல் ..... விஷம் போல் ,

விரிதல் ..... ஒளி பரவுதல் ஆகிய ,

இது வியப்பே ..... இது ஓர் ஆச்சரியமோ ?

077 / 100

நம் விண்ணோர் பிரானார் துழாய் , துணையா , நங்களை மாமை கொள்வான் , வந்து தோன்றி , நலிகின்றதே !

திங்கள் - அம்பிள்ளை , புலம்பத் ; தன் , செங்கோல் - அரசு , பட்ட ;

செம் - களம் , பற்றி , நின்று - எள்கு , புல் - மாலை ; தென்பால் - இலங்கை ,

வெம் - களம் - செய்த , நம் , விண்ணோர் , பிரானார் , துழாய் , துணை - ஆ ,

நங்களை , மாமை , கொள்வான் ; வந்து , தோன்றி , நலிகின்றதே !

திங்கள் ..... பிறைச் சந்திரன் ஆகிய ,

அம்பிள்ளை ..... அழகிய தன் இளம் பிள்ளை ,

புலம்பத் ..... தந்தையை இழந்து தனிப்பட ,

செங்கோல் ..... சிவந்த ஒளியை எங்கும் செலுத்தலாகிய செங்கோன்மையை ,

தன் அரசு பட்ட .... உடைய தனது தலைவனான சூரியன் இறந்து ஒழியும் ,

செம் களம் ..... செவ்வானமாகிய சிவந்த போர்க்களத்தை ,

பற்றி ..... அடைந்து ,

நின்று ..... நீங்கமாட்டாமல் அங்கு நின்று ,

எள்கு ..... வருந்துகிற ,

ல் மாலை ..... சிறுமைப் பட்ட மாலைப் பொழுதாகிய பெண்பால் ;

தென்பால் ..... தெற்கு திக்கில் உள்ள ,

இலங்கை ..... லங்காபுரியை ,

வெம் களம் ..... கொடிய போர்க் களமாகச் ,

செய்த ..... செய்த ,

நம் விண்ணோர் ..... நமது தேவாதி தேவன் ஆகிய ,

பிரானார் ..... தலைவனது ,

துழாய் ..... திருத் துழாயைத் ,

துணை ஆ ..... தனக்குத் துணையாகக் கொண்டு ,

நங்களை ..... நமது ,

மாமை ..... மாமை நிறத்தை ,

கொள்வான் ..... கவர்ந்து கொள்வதற்கு ,

வந்து ..... எதிரில் வந்து ,

தோன்றி ..... தோன்றி ,

நலிகின்றதே ..... வருத்துகிறது !

078 / 100

மை வரை போல் பொலியும் உருவில் , பிரானார் , புனை , பூம் துழாய் மலர்க்கே , மட நெஞ்சினார் , தந்து போயின , வேதனையே !

நலியும் , நரகனை , வீட்டிற்றும் ; வாணன், திண் - தோள், துணித்த ,

வலியும் , பெருமையும் , யாம் , சொல்லும் , நீர்த்து - அல்ல ! மை , வரை , போல் -

பொலியும் , உருவில் - பிரானார் , புனை , பூம் - துழாய் , மலர்க்கே ,

மெலியும் , மட , நெஞ்சினார் ; தந்து , போயின , வேதனையே !

நலியும் ..... உலகத்தை வருத்துகிற ,

நரகனை ..... நரகாசுரனைக் ,

வீட்டிற்றும் ..... கொன்றதும் ;

வாணன் ..... பாணாஸுரனது ,

திண் தோள் ..... வலிய தோள்களை ,

துணித்த ..... அறுத்துத் தள்ளிய ,

வலியும் ..... வலிமையும் ;

பெருமையும் ..... அப் போரில் வெளிக்காட்டிய பெருமையும் ;

யாம் சொல்லும் .... எளியோமான யாம் புகழ்ந்து சொல்லி ,

நீர்த்து அல்ல ..... முடிக்கும் தன்மையானது அல்ல !

மை வரை போல் ... அஞ்சன கிரி போல் ,

பொலியும் ..... விளங்குகின்ற ,

உருவின் ..... வடிவத்தை உடைய ,

பிரானார் ..... அத் தலைவனது ,

புனை ..... சாத்திய ,

பூம் துழாய் ..... அழகிய திருத் துழாய் ,

மலர்க்கே ..... பூமாலையைப் பெறுவதற்காகவே ,

மெலியும் ..... ஆசைப் பட்டு வருந்துகிற ,

மட நெஞ்சினார் ..... எமது பேதை நெஞ்சு ,

தந்து ..... தாம் எம்மை விட்டுப் போகும் போது , எமக்குக் கொடுத்து விட்டு ,

போயின ..... போனவை ,

வேதனையே ..... இத் துன்பங்கள் !

079 / 100

பாற்கடல் , பாம்பணை மேல் , பள்ளி கொண்டு, அருளும் , சீதனையே , தொழுவார் , விண் உளாரிலும் , சீரியரே !

வேதனை ; வெள் - புரி , நூலனை ; விண்ணோர் , பரவ , நின்ற ,

நாதனை ; ஞாலம் , விழுங்கும் - அநாதனை ; ஞாலம் - தத்தும் ,

பாதனைப் ; பால் - கடல் - பாம்பு - அணை , மேல் - பள்ளி , கொண்டு - அருளும் ,

சீதனையே , தொழுவார் ; விண் - உளாரிலும் - சீரியரே !

வேதனை ..... வேதம் வல்லவனும் ;

வெள் ..... சுத்தமான ,

புரி நூலனை ..... யஜ்ஞோபவீதம் உடையவனும் ;

விண்ணோர் ..... மேலுலகத்தார் ,

பரவ ..... துதிக்க ,

நின்ற நாதனை ..... அவர்களுக்குத் தலைவனாய் நின்றவனும் ;

ஞாலம் ..... பிரளய காலத்தில் , உலகத்தை ,

விழுங்கும் ..... வயிற்றினுள் வைத்து நோக்கி,

அநாதனை ..... அவ்வண்ணம் தனை நோக்குதற்கு ஒரு தலைவன் இல்லாதவனும் ;

ஞாலம் ..... உலகத்தை ,

தத்தும் ..... அளந்த ,

பாதனைப் ..... திருவடிகளை உடையவனும் ;

பால் கடல் ..... திருப்பாற்கடலில் ,

பாம்பு ..... திரு அனந்தாழ்வான் ஆகிய ,

அணை மேல் ..... படுக்கையின் மேல் ,

பள்ளி கொண்டு ..... யோக நித்திரை கொண்டு ,

அருளும் ..... அருளுகிற ,

சீதனையே ..... குளிர்ந்த தன்மை உடைய எம்பெருமானையே ,

தொழுவார் ..... இடைவிடாது வணங்கி அனுபவிக்கப் பெற்றவர் ,

விண் உளாரிலும் ... பரம பதத்தில் உள்ளவர்களை விட ,

ரியரே ..... சிறப்பு உடையவர் ஆவர் !

080 / 100

பார் அளந்த , பேர் அரசே ! அருளாய் ! இருளாய் வந்து உறுகின்றதே !

சீர் - அரசு - ஆண்டு , தன் , செங்கோல் , சில , நாள் , செலீஇக் , கழிந்த ;

பார் - அரசு - ஒத்து , மறைந்தது , நாயிறு ; பார் - அளந்த ,

பேர் - அரசே ! எம் , விசும்பு - அரசே ! எம்மை , நீத்து , வஞ்சித்து -

ஓர் - அரசே ! அருளாய் ! இருள் - ஆய் , வந்து - உறுகின்றதே !

சீர் ..... சிறப்பாக ,

அரசு ஆண்டு .... ராஜ்ய பரிபாலனம் செய்து ,

தன் ..... தனது ,

செங்கோல் ..... நீதி தவறாத ஆஜ்ஞையை ,

சில நாள் ..... சிலகாலம் ,

செலீஇக் ..... செலுத்தி ,

கழிந்த ..... பின்பு இறந்து ஒழிந்த ,

பார் அரசு ..... ஸார்வபௌமனான ஒரு சக்ரவர்த்தியைப் ,

ஒத்து ..... போன்று ,

நாயிறு ..... ஸூர்யன் ,

மறைந்தது ..... அஸ்தமித்தான் !

பார் அளந்த ..... உலகத்தை அளந்து கொண்ட ,

பேர் அரசே ..... சிறந்த தலைவனே !

எம் விசும்பு ..... பரம பதத்துக்கு

அரசே ..... நாயகன் ஆன எம் கோமானே !

எம்மை நீத்து .... எம்மைத் , தனியே பிரித்து ,

வஞ்சித்து ..... வஞ்சனை செய்த ,

ஓர் அரசே ..... ஒப்பற்ற தலைவனே !

அருளாய் ..... இங்ஙனம் நீங்கி இராதபடி எமக்கு வந்து அருள் புரிவாய் !

இருள் ஆய் ..... அங்ஙனம் அருள் புரியாமையால் , இருள் மிக்கதாய் வளர்ந்து கொண்டு ,

வந்து ..... வந்து சூழ்ந்து

உறுகின்றதே .... எம்மை வருத்துகிறது !

081 / 100

குழல் வாய்த் , துழாய், துறுகின்றிலர் ! வேங்கடம் ஆட்டமும் சூழ்கின்றிலர் ! இவள் ஆகம் , மெல் ஆவி , எரி கொள்ளவே , இறுகின்றது !

உறுகின்ற , கன்மங்கள் , மேலன ! ஓர்ப்பு - இலர் - ஆய் ; இவளைப் ,

பெறுகின்ற , தாயர் , மெய்ந் , நொந்து , பெறார் , கொல் ; துழாய் , குழல் , வாய்த் -

துறுகின்றிலர் ! தொல்லை , வேங்கடம் - ஆட்டமும் , சூழ்கின்றிலர் ;

இறுகின்றதால் - இவள் - ஆகம் , மெல் - ஆவி - எரி , கொள்ளவே !

ஓர்ப்பு இலர் ஆய் .... இவளுடைய நோய், காரணம் , தீர்க்கும் உபாயங்களில் தெளிவில்லாது ,

உறுகின்ற ..... இவள் தாய்மார் விடாது பொருந்தி நடத்துகின்ற ,

கன்மங்கள் ..... வெறியாட்டு முதலிய காரியங்கள் ,

மேலன ..... மேன்மேலும் உண்டாகின்றன !

இவளைப் ..... இவளைப் ,

பெறுகின்ற தாயர் .... பெற்று வளர்க்கின்ற தாய்மார் ,

மெய்ந் நொந்து ..... உடம்பு வருந்திப்

பெறார்கொல் ..... பெற்றார் இல்லையோ ?

குழல் வாய்த் ..... இவளது கூந்தலில் ,

துழாய் ..... எம்பெருமானது திருத்துழாயை ,

துறுகின்றிலர் ..... சூட்டுகின்றார் இல்லை !

தொல்லை ..... பழமையான , வேங்கடம் ..... திருவேங்கடமலையில் ,

ஆட்டமும் ..... இவளைக் கொண்டு போய் சேர்க்கவும் ,

சூழ்கின்றிலர் ..... ஆலோசிக்கின்றாரில்லை !

இவள் ஆகம் ..... இவளது உடம்பு ,

மெல் ஆவி ..... மென்மையான உயிரை ,

எரி கொள்ளவே ..... விரஹத் தீ கவர்ந்து கொள்ளும்படி ,

இறுகின்றது ..... முடிகிறவளவாகிறது ! ஆல் ..... (அசைச் சொல்)

082 / 100

எம்பெருமான் கண்கள் , அசுரரைப் போல் , எம் போலியற்கும் , விரிவ ! வையம் முற்றும் , விளரியது , இதுவோ ? சொல்லீர் !

எரிகொள் , செம் - ஞாயிறு - இரண்டு - உடனே - உதய மலைவாய் ;

விரிகின்ற , வண்ணத்த - எம்பெருமான் , கண்கள் ; மீண்டு - அவற்றுள் ,

எரிகொள் , செம் - தீ , வீழ் - அசுரரைப் , போல - எம் , போலியர்க்கும் ,

விரிவ ! சொல்லீர் - இதுவோ ? வையம் , முற்றும் , விளரியதே !

எரிகொள் ..... வெப்பத்தைக் கொண்ட ,

செம் ..... சிவந்த ,

இரண்டு ..... இரண்டு ,

ஞாயிறு ..... ஸூர்ய மண்டலம் ,

உடனே ..... ஒருங்கே ,

உதய மலைவாய் ..... உதய பர்வதத்தில் ,

விரிகின்ற ..... தோன்றி விளங்குகிற ,

வண்ணத்த ..... தன்மை போன்ற தன்மையை உடைய ,

எம்பெருமான் ..... எம்பெருமானது ,

கண்கள் ..... திருக் கண்கள் ,

அவற்றுள் ..... அந்த ஸூர்ய வடிவங்களில் ,

எரிகொள் ..... ஜ்வலித்துக் கொண்டு தோன்றுகிற ,

செம் தீ ..... சிவந்த நெருப்பில் ,

மீண்டு வீழ் ..... வேறு புகலிடம் இல்லாமையால் , மீண்டும் வந்து வீழ்ந்து இறக்கிற ,

அசுரரைப் போல ..... பகைவரான கொடிய மந்தேஹரன் எனும் அஸுரர்களுக்கும் போல ,

எம் ..... அஅநுகூலரான மெல்லிய எம் ,

போலியர்க்கும் ..... போன்றோர்க்கும் ,

விரிவ ..... தாபம் செய்பவனாய் பரவுகின்றன !

வையம் முற்றும் ..... எம்பெருமான் உலகம் முழுவதையும் ,

விளரியதே ..... விருப்பத்தோடு செழிக்கச் செய்யும் முறை ,

இதுவோ ..... இதுதானோ ?

சொல்லீர் ..... சொல்லுங்கள் !

083 / 100

முகில் வண்ணன் பேர் பிதற்றும் , ஆவியும் , நைவும் எல்லாம் , தளரின் கொலோ , உய்யல் ஆவது , இத்தையலுக்கே ? அறியேன் !

விளரிக் , குரல் - அன்றில் , மென் , பெடை , மேகின்ற , முன்றில் - பெண்ணை ;

முளரிக் , குரம்பை - இது - இது - ஆக ; முகில் , வண்ணன் , பேர் ,

கிளரிக் , கிளரிப் , பிதற்றும் - மெல் - ஆவியும் , நைவும் - எல்லாம் ,

தளரின் , கொலோ ? அறியேன் ; உய்யல் - ஆவது - இத் தையலுக்கே !

விளரிக் ..... விளரி என்னும் இசையை உடைய ,

குரல் ..... குரலை உடைய ,

அன்றில் ..... அன்றில் பறவை ,

மென் பெடை ..... மெல்லிய தனது பேடையை ,

மேகின்ற ..... விரும்பித் தழுவுதற்கு இடமான ,

முன்றில் ..... முன் வாசலில் உள்ள ,

பெண்ணை ..... பனைமரத்தில் உள்ளதும் ;

முளரிக் ..... முட்களை அரிந்து செய்யப் பட்டதுமான ,

குரம்பை ..... கூடு ;

இது இது ஆக ..... இப்படி எங்கும் எதிரில் இருக்க ;

முகில் வண்ணன் ..... காளமேக நிறத்தன் ஆன நம் தலைவனது ,

பேர் ..... திருநாமங்களை ,

கிளரிக் கிளரிப் ..... வலிவு இன்மையால் ,

பிதற்றும் ..... வருந்தி எடுத்து எடுத்துக் கூறி வாய் பிதற்றும்படியான ,

மெல் ஆவியும் ..... இவளது மெலிவு அடைந்த உயிரும் ,

நைவும் ..... உடம்பின் இளைப்பும் ,

எல்லாம் ..... என்னும் இவை யாவும் ,

தளரின் கொலோ .. முழுவதும் தளர்ந்து ஒழிந்தாலோ ,

இத் தையலுக்கே ... இம் மகளுக்கு ,

உய்யல் ஆவது ..... அவன் வந்து சேர உஜ்ஜீவனம் உண்டாவது ?

அறியேன் ..... அறிகிறேன் இல்லை !

084 / 100

மைய வண்ணா ! மணியே ! முத்தமே ! என் தன் மாணிக்கமே ! கைய பொன் ஆழி , வெண் சங்கொடும் , யான் , காண்பான் , அவாவுவன்

தையல் - நல்லார்கள் , குழாங்கள் , குழிய , குழுவின் - உள்ளும் ;

ஐய , நல்லார்கள் , குழிய , விழவினும் ; அங்கு - அங்கு - எல்லாம் ,

கைய , பொன் - ஆழி , வெண் , சங்கொடும் , காண்பான் - அவாவுவன் - நான் !

மைய , வண்ணா ! மணியே ! முத்தமே ! என் - தன் , மாணிக்கமே !

மைய வண்ணா ..... மையுடைய நிறம் போன்ற கரிய திரு நிறம் உடையவனே !

மணியே ..... நீல மணியைப் போல் , போல் நிறத்தையும் ,

முத்தமே ..... முத்தைப் போல் , அழகையும் ,

என் தன் மாணிக்கமே .... மாணிக்கத்தைப் போல் , ஒளியையும் உடைய எம்பெருமானே !

தையல் நல்லார்கள் ..... அழகிய ஸ்திரீகள் ,

குழாங்கள் ..... கூட்டமாய் ,

குழிய ..... கூடிய ,

குழுவின் உள்ளும் ..... திரளின் உள்ளே ஆயினும் ;

ஐய நல்லார்கள் ..... சிறந்தவர்களான நல்ல புருஷர்கள் ,

குழிய ..... திரண்ட ,

விழவினும் ..... திருவிழாக்களில் ஆயினும் ;

அங்கு அங்கு ..... இன்னும் அப்படிப்பட்ட ,

எல்லாம் ..... திரள்கள் எல்லாவற்றிலும் ஆயினும் ;

கைய ..... கைகளில் உள்ள ,

பொன் ..... பொன் நிறமான ,

ஆழி ..... சக்கரத்துடனும் ;

வெண் ..... வெண்ணிறமான ,

சங்கொடும் ..... சங்கத்துடனும் ;

நான் ..... நான் ,

காண்பான் ..... உன்னைக் காண்பதற்கு ,

அவாவுவன் ..... ஆசைப்படுகிறேன் !

085 / 100

மாணிக்கமே ! என் மரகதமே ! மற்று ஒப்பாரை இல்லா , ஆணிப் பொன்னே ! அடியேன் ஆவி , அடி அடைக்கலமே !

மாணிக்கம் - கொண்டு , குரங்கு - எறிவு - ஒத்து - இருளோடு , முட்டி ;

ஆணிப் , பொன் - அன்ன , சுடர் , படு , மாலை ; உலகு - அளந்த ,

மாணிக்கமே ! என் , மரகதமே ! மற்று - ஒப்பாரை - இல்லா ,

ஆணிப் , பொன்னே ! அடியேன் - அடி - ஆவி - அடைக்கலமே !

உலகு அளந்த ..... உலகங்களை அளந்து கொண்ட ,

மாணிக்கமே ..... மாணிக்கம் போல் சிறந்தவனே !

என் மரகதமே ..... மரகதப் பச்சை போல் எனக்கு இனியன் ஆனவனே !

மற்று ஒப்பாரை ..... தன்னை ஒப்பவர் வேறு எவரையும் ,

இல்லா ..... உடையன் ஆகாத ,

ஆணிப் பொன்னே ..... மாற்று உயர்ந்த பொன்போல் , ஒளியும் மதிப்பும் உடையவனே !

மாணிக்கம் கொண்டு ... மாணிக்கத்தால் ,

குரங்கு எறிவு ஒத்து ..... கரும் குரங்கு வீசி எறியப்பட்டால் , அம்மாணிக்கம் அழிவது போல்

ஆணிப் பொன் ..... மாற்று உயர்ந்த பொன் ,

அன்ன ..... போன்று ஒளியை உடைய ,

சுடர் ..... ஸூர்ய மண்டலம் ,

இருளோடு முட்டி ..... இருளோடு சென்று கிட்டி ,

படும் ..... தான் மறையப் பெற்ற ,

மாலை ..... மாலைப் பொழுதிலே ,

அடியேன் ..... இயல்பில் உனக்குச் சொந்தமான அடியவளான ,

ஆவி ..... எனது சொந்தமான உயிர் ;

அடி ..... உன் திருவடிக்கே ,

அடைக்கலமே ..... அடைக்கலப் பொருளாக ஒப்பிக்கப் பட்டது !

086 / 100

ஆழி , சங்கம் படைக்கலம் ஏந்தியை ;ஆய்ச்சி , வல் தாம்புகளால் , புடைக்க ,
அலந்தானை ; எம்மானை ; என் சொல்லிப் புலம்புவனே !

அடைக் , கலத்து - ஓங்கு , கமலத்து - அலர் - அயன் , சென்னி - என்னும் ,

முடைக் , கலத்து - ஊண் , முன் - அரனுக்கு , நீக்கியை ; ஆழி , சங்கம் ,

படைக் , கலம் - ஏந்தியை; வெண்ணெய்க்கு - அன்று - ஆய்ச்சி , வல் - தாம்புகளால் ,

புடைக்க - அலந்தானை - எம்மானை - என் , சொல்லிப் , புலம்புவனே ?

அடைக் ..... இலை ஆகிய ,

கலத்து ..... இடத்திலே ,

ஓங்கு ..... உயர்ந்து தோன்றின ,

கமலத்து ..... திருமாலின் நாபித் தாமரை மலரிலே ,

அலர் ..... வெளிப்பட்டுத் தோன்றின ,

அயன் ..... பிரஹ்மாவினுடைய ,

சென்னி என்னும் .... தலை ஆகிய ,

முடைக் ..... முடை நாற்றம் உடைய ,

கலத்து ..... பிக்ஷா பாத்திரத்திலே ,

ஊண் ..... உணவு இரத்தலை ,

முன் ..... முன் ஒரு காலத்தில் ,

அரனுக்கு ..... சிவனுக்குப் ,

நீக்கியை ..... போக்கி அருளினவனும் ;

ஆழி ..... ஸுதர்சன ,

சங்கம் ..... பாஞ்சஜந்யங்களை

படைக் கலம் ..... ஆயுதங்களாக , திருக்கைகளில் ,

ஏந்தியை ..... கொண்டுள்ளவனும் ;

வெண்ணெய்க்கு .... வெண்ணெய்க்காக ,

அன்று ..... களவும் கையுமாகப்,

ஆய்ச்சி ..... புடைபட்ட அந்நாளில் ,

வல் தாம்புகளால் .... வலிய கயிறுகளால் ,

புடைக்க ..... அடிக்க ;

அலந்தானை ..... வருந்தினாற் போல் தோற்றினவனும் ,

எம்மானை ..... எமது தலைவனும் ஆன திருமாலைக் குறித்து ,

என் சொல்லிப் ..... நான் என்ன என்று சொல்லிப் ,

புலம்புவனே ..... புலம்புவேன் ?

087 / 100

திருமாலே ! இது , குற்றம் ஆக , வையம் , சிலம்பும்படி , இத் திருவினையே செய்வதே ?

புலம்பும் - கன , குரல் -போழ் , வாய - அன்றிலும் ; பூம்- கழி , பாய்ந்து - அலம்பும் - கன , குரல் - சூழ் , திரை - ஆழியும் , ஆங்கு - அவை , நின் , வலம் , புள்ளது , நலம் , பாடும் - இது , குற்றம் - ஆக , வையம் , சிலம்பும் , படி, செய்வதே ? ; திருமால் , இத் , திருவினையே !

திருமால் ..... பிராட்டியிடத்து மோஹம் உள்ளவனே !

புலம்பும் ..... விரஹ வேதனையால் கத்துகிற ,

கன குரல் ..... கனத்த குரலை உடைய ,

போழ் வாய ..... பிளந்த வாயை உடைய ,

அன்றிலும் ..... அன்றில் பறவையும் ;

பூம் கழி ..... அழகிய கழியினுள்ளே ,

பாய்ந்து ..... புகும்படி பாய்ந்து ,

அலம்பும் ..... அலைகின்ற ,

கன குரல் ..... கம்பீரமான தொனியை உடைய ,

சூழ் திரை ..... சூழ்ந்த அலைகளை உடைய ,

ஆழியும் ..... கடலும் ஆகிய ;

ஆங்கு ..... அவ்விடத்தில் உள்ள ,

அவை ..... அந்தந்த வஸ்துக்கள் ஆனவை ,

நின் ..... உனது ,

வலம் புள்ளது ..... வலிமை உடைய கருடப் பறவையினது ,

நலம் பாடும் ..... நன்மையை இவள் எடுத்துப் பாடுகின்ற ,

இது ..... இதுவே ,

குற்றம் ஆக ..... குற்றமாகக் கொண்டு ,

வையம் ..... உலகத்தார் ,

சிலம்பும் படி ..... முறையிடும்படி ,

இத் திருவினையே ..... திருமகள் போன்ற

செய்வதே ..... துன்பப் படுத்துவதே (இது தகுதியா ?)

088 / 100

ஓர் திருமால் தலைக் கொண்ட நங்கட்கு , எங்கே வரும் , தீவினையே !

திருமால் - உரு - ஒக்கும் , மேரு ! அம் , மேருவில் - செம் - சுடரோன் ,

திருமால் , திருக்கைத் , திருச் , சக்கரம் - ஒக்கும் ! அன்ன , கண்டும் ,

திருமால் - உருவோடு - அவன் , சின்னமே , பிதற்றாநிற்பது - ஓர் ,

திருமால் , தலைக் , கொண்ட , நங்கட்கு ; எங்கே , வரும் - தீவினையே ?

மேரு ..... மஹா மேரு மலையானது ,

திருமால் உரு ..... திருமகள் கேள்வனான தலைவனது திருமேனியை ,

ஒக்கும் ..... ஒத்திருக்கும் !

அம் மேருவில் ..... அந்த மஹா மேருவின் அருகில் விளங்குகிற ,

செம் சுடரோன் ..... சிவந்த ஒளியை உடைய சூரியன் ,

திருமால் ..... அத் தலைவனது ,

திருக்கைத் ..... அழகிய கையில் உள்ள ,

திருச் சக்கரம் ..... திரு ஆழியை ,

ஒக்கும் ..... ஒத்திருப்பன் !

அன்ன ..... அவன் உருவத்தையும் , சக்கரத்தையும் காணாமல் ,

கண்டும் ..... அவற்றின் போலியாய் உள்ளதையே கண்டும் ,

திருமால் உருவோடு ... அவன் உருவத்தையும் ,

அவன் சின்னமே ..... அவனது அடையாளத்தையும் நேரில் கண்டாற்போல் ,

பிதற்றாநிற்பது ..... பேரிட்டுக் கூவும்படியான ,

ஓர் திருமால் ..... ஒப்பற்ற செல்வமான வேட்கையை ,

தலைக் கொண்ட ..... ஏற்றுக் கொண்டுள்ள ,

நங்கட்கு ..... எமக்கு ,

தீவினையே ..... பிரிவுக்குக் காரணமான பாவம் ,

எங்கே வரும் ..... எப்படி வரக்கடவது ? (வர மாட்டாது)

089 / 100

ஆவினை மேய்க்கும் வல் ஆயனை ; அன்று , உலகு , ஈரடியால் , தாவின ஏற்றை ;
எம்மானை ; எஞ்ஞான்று , தலைப்பெய்வனே ?

தீ , வினைக்கு - அரு , நஞ்சை , நல் , வினைக்கு - இன் - அமுதத்தினைப் ;

பூவினை , மேவிய , தேவி , மணாளனைப் ; புன்மை - எள்காது -

ஆவினை , மேய்க்கும் , வல் - ஆயனை ; அன்று - உலகு - ஈர்-அடியால் ,

தாவின - ஏற்றை - எம்மானை - எஞ்ஞான்று, தலைப் , பெய்வனே ?

தீ வினைக்கு ..... அடியார்களுடைய பாவத்துக்கு ,

அரு நஞ்சை ..... ப்ரபலமான விஷம் போன்று இருப்பவனும் ;

நல் வினைக்கு ..... அவர்களுடைய கைங்கர்யம் ஆகிய நல்வினைக்கு ,

இன் அமுதத்தினைப் .... இனிய அமிருதம் போல் இனிப்பாய் இருப்பவனும் ;

பூவினை மேவிய ..... தாமரை மலரைத் தனக்கு இடமாகக் கொண்டு பொருந்திய ,

தேவி மணாளனைப் ..... திருமகளுக்குக் கணவனும் ;

புன்மை எள்காது ..... சிறுமை கருதி இகழாமல் ,

ஆவினை மேய்க்கும் ..... பசுக்களை மேய்க்கும் ,

வல் ஆயனை ..... வலிமை உடைய இடையன் ஆனவனும் ;

அன்று ..... முன்பு ஒரு காலத்தில் ,

உலகு ..... உலகங்களை ,

ஈர் அடியால் ..... இரண்டு அடியாலே ,

தாவின ஏற்றை ..... அளந்து கொண்ட மேன்மை உடையவனும் ஆன ;

எம்மானை ..... எம்பெருமானை ,

எஞ்ஞான்று ..... எப்பொழுது ,

தலைப் பெய்வனே ..... சேர்வேன் ?

090 / 100

நிலைப்பு எய்த ஆக்கைக்கு , நோற்ற இம்மாயமும் , நிலைப்பு எய்திலாத நிலைமையும் , காண் தோறு , தொல்லை ஊழி சுருங்கலதே !

தலைப் , பெய்து , யான் - உன் , திரு - அடி , சூடும் - தகைமையினால் ;

நிலைப்பு - எய்த - ஆக்கைக்கு , நோற்ற - இம் , மாயமும் ; மாயம் - செவ்வே ,

நிலைப்பு - எய்திலாத , நிலைமையும் - காண்தோறு - அசுரர் , குழாம் ,

தொலைப் , பெய்த , நேமி - எந்தாய் ! தொல்லை - ஊழி , சுருங்கலதே !

அசுரர் குழாம் ..... அசுரர் கூட்டத்துக்கு ,

தொலைப் பெய்த ..... அழிவைப் பண்ணின ,

நேமி ..... சக்கராயுதத்தை உடைய ,

எந்தாய் ..... எம்பெருமானே !

யான் ..... நான் ,

உன் திரு அடி ..... உன் திருவடித் தாமரை மலர்களை ,

சூடும் ..... எனது தலைமேல் கொள்ளும்படியான ,

தலைமையினால் ..... அடிமைக் குணம் ஆகிய தகுதியினால் ,

தலைப் பெய்து ..... யான் உன்னைச் சேர்ந்து ,

நிலைப்பு எய்த ..... நிலை பெற்று இருக்கும்படியாக ,

ஆக்கைக்கு ..... இவ் வுடம்பைப் பெறுவதற்குத் ,

நோற்ற ..... தவம் செய்த ,

இம் மாயமும் ..... இந்த ஆச்சரியத்தையும் ,

மாயம் ..... இந்த மாயம் ,

செவ்வே ..... ஒருபடியாக ,

நிலைப்பு எய்திலாத ..... நிலை நின்று முடிவு பெற மாட்டாத ,

நிலைமையும் ..... நிலைமையையும் ;

காண் - தோறு ..... நோக்கும்போது எல்லாம் ,

தொல்லை ஊழி ..... பழமையான (அலாதியான) காலம்

சுருங்கலதே ..... சுருங்குவதில்லை !

091 / 100

மாவலி மாட்டு ; மூவடி வேண்டிச் சென்ற பெரும் கிறியானை அல்லால் , அடியேன் நெஞ்சம் பேணலதே !

சுருங்கு , உறி , வெண்ணெய் , தொடு , உண்ட , கள்வனை ; வையம் - முற்றும் ,

ஒருங்கு - உற - உண்ட , பெரு , வயிற்றாளனை ; மாவலி , மாட்டு -

இரும் - குறள் - ஆகி - இசைய - ஓர் , மூ - அடி , வேண்டிச் , சென்ற ,

பெரும் - கிறியானை - அல்லால் ; அடியேன் - நெஞ்சம் , பேணலதே !

சுருங்கு உறி ..... சுருங்கக் கட்டப்பட்டுள்ள உறியிலே ,

வெண்ணெய் ..... சேமித்து வைக்கப்பட்ட வெண்ணெய்யை ,

தொடு உண்ட ..... வஞ்சனையாக எடுத்து அமுது செய்த ,

கள்வனை ..... கள்ளத்தனம் உடையவனும் ;

வையம் முற்றும் ..... உலகம் முழுவதையும் ,

ஒருங்கு உற ..... ஒருசேர விடாமல் ,

உண்ட ..... உட்கொண்ட ,

பெரு வயிற்றாளனை ..... பெரிய திருவயிற்றை உடையவனும் ;

மாவலி மாட்டு ..... மஹாபலி சக்ரவர்த்தியிடத்தில் ,

இரும் குறள் ஆகி ..... மிக்க வாமன வடிவம் உடையவன் ஆகி ,

இசைய ..... அவன் தானே தானம் பண்ணுவதற்கு இசையும்படி ,

ஓர் மூ அடி வேண்டிச் ..... ஒரு மூன்று அடி நிலத்தை யாசித்துக் கொண்டு ,

சென்ற ..... எழுந்தருளிய ,

பெரும் கிறியானை ..... மிக்க தந்திரம் உடையவனும் ஆன திருமாலை ,

அல்லால் ..... அல்லாமல் வேறு ஒருத்தனை ,

அடியேன் நெஞ்சம் .... அவனுக்கே அடிமையான என் நெஞ்சம் ,

பேணலதே ..... விரும்பாது !

092 / 100

விண்ணோர் தொழுவது , நின் மூர்த்தி பல் கூற்றில் ஒன்று , காணலும் ஆம் கொல் ?

பேண் - நலம் - இல்லா - அரக்கர் , முந்நீர , பெரும் , பதி , வாய் ;

நீள் - நகர் , நீள் - எரி , வைத்து - அருளாய் - என்று ; நின்னை , விண்ணோர் ,

தாள் - நிலம் , தோய்ந்து , தொழுவர் ! நின் , மூர்த்தி , பல் , கூற்றில் - ஒன்று ,

காணலும் - ஆம் - கொல் , என்றே ; வைகல் , மாலையும் , காலையும் !

பேண் ..... உன்னை விரும்பி பக்தி செய்தல் ஆகிய ,

நலம் இல்லா ..... நற்குணம் இல்லாத ,

அரக்கர் ..... ராக்ஷஸர்களுடைய ,

முந்நீர பெரும் ..... கடல் ஆகிய பெரு நீர் அரணை உடைய ,

பதி வாய் ..... பெரிய மலையிடத்தில் உள்ள ,

நீள் நகர் ..... பெரிய லங்கா புரியில் ,

நீள் எரி ..... பெரிய நெருப்பை ,

வைத்து அருளாய் ..... வைத்து அழித்து அருள வேண்டும் ,

என்று ..... என்று சொல்லிப் பிரார்த்தித்து ,

நின்னை ..... உன்னை ,

விண்ணோர் ..... தேவர்கள் ,

வைகல் ..... நாள் தோறும் ,

மாலையும் காலையுமே ..... இரண்டு சந்திகளிலும் ,

தாள் நிலம் தோய்ந்து ..... தங்கள் கால்கள் தரையில் படும்படி விழுந்து ,

தொழுவர் ..... வணங்குவர் !

நின் மூர்த்தி ..... அவர்கள் அப்படி செய்வது , உனது வடிவத்தின் ,

பல் கூற்றில் ..... பல அம்சங்களுள் ,

ஒன்று ..... ஒன்றையேனும் ,

காணலும் ஆம் ..... பார்க்க வேண்டும் ,

கொல் என்றே ..... என்றோ (அன்று !)

093 / 100

காலை , கண் போது செய்து , மாலை , நல் நாவில் , கொள்ளார் ! அவன் மைப் படியே , நினையார் !

காலை , வெய்யோற்கு , முன் , ஓட்டுக் , கொடுத்த , கங்குல் - குறும்பர் ;

மாலை , வெய்யோன் , பட , வையகம் , பாவுவர் ! அன்ன , கண்டும் ,

காலை , நல் - ஞானத் - துறை , படிந்து - ஆடிக் , கண் , போது , செய்து ,

மாலை , நல் - நாவில் - கொள்ளார் ! நினையார் ! - அவன் , மைப் , படியே !

காலை ..... உதயகாலத்தில் ,

வெய்யோற்கு ..... சூர்யன் ஆகிய சக்ரவர்த்திக்கு ,

முன் ..... எதிரில் ,

ஓட்டுக் ..... நிற்க முடியாமல் புறம் கொடுத்து ஓடுதலைச் ,

கொடுத்த ..... செய்த ,

கங்குல் ..... இருள் ஆகிய ,

குறும்பர் ..... சிற்றரசர்கள் ;

மாலை ..... ஸாயங்காலத்தில் ,

வெய்யோன் ..... சூர்யன் ஆகிய பேரரசன் ,

பட ..... அழிய ;

வையகம் ..... தாங்கள் உலகம் முழுவதும் ,

பாவுவர் ..... பரவுவார்கள் !

அன்ன ..... அப்படிப்பட்ட தன்மையைப் ,

கண்டும் ..... பார்த்திருந்தும் ;

காலை ..... பலர் , காலத்துக்கு ஏற்றபடி ,

நல் ஞானத் ..... நல்ல ஞானம் ஆகிய ,

துறை ..... துறையிலே ,

படிந்து ஆடிக் ..... இறங்கி மூழ்கி (பகவத் பக்தி ஆகிய வெள்ளத்தில் ஆழ்ந்து ஈடுபட்டு) ,

கண் ..... பக்திப் பரவசத்தாலே , கண்களை ,

போது செய்து .... கண்களை மூடிக் கொண்டு ,

மாலை ..... எம்பெருமானை ,

நல் நாவில் ..... தங்களுடைய நல்ல நாவினால் ,

கொள்ளார் ..... பெயர் கூறித் துதியார் !

அவன் ..... அவனது ,

மைப் படியே ..... கரிய திருமேனியை ,

நினையார் ..... நினைப்பதும் செய்யார் !

வைதிகரே , மெய்ப் படியால் உன் திரு அடி சூடும் , தகைமையினார் போலவே , யானும் சொன்னேன் ! அடியேன் , மற்று யாது என்பேன் ?

மைப் , படி , மேனியும் , செம் - தாமரைக் , கண்ணும் , வைதிகரே ,

மெய்ப் , படியால் - உன் , திரு - அடி , சூடும் , தகைமையினார் ;

எப்படி , ஊர் , ஆ , மிலைக்கக் , குருடு - ஆ , மிலைக்கும் , என்னும் -

அப்படி , யானும் , சொன்னேன் ! அடியேன் , மற்று - யாது - என்பனே ?

மைப் படி ..... நீல நிறம் செறிந்த ,

மேனியும் ..... திருமேனியையும் ;

செம் தாமரைக் ..... செந்தாமரை போன்ற ,

கண்ணும் ..... திருக் கண்களையும் உடைய ,

உன் திரு அடி ..... உனது திருவடித் தாமரை மலர்களை,

வைதிகரே ..... வைதிகர்கள் தாமே ,

மெய்ப் படியால் ..... உண்மையான நெறியால் ,

சூடும் ..... தம் தலைக்கு மேல் கொண்டு வணங்கும்படியான ,

தகைமையினார் ..... தன்மை உடையவர்கள் ;

எப்படி ..... எப்படி ,

ஊர் ஆ ..... வெளியே மேய்ந்து , மீண்டு ஊர் வந்து சேர்ந்த கண்தெரிந்த பசுக்கள் ,

மிலைக்கக் ..... இடம் அறிந்து கனைக்க ,

குருடு ஆ ..... குருட்டுப்பசுவும் ,

மிலைக்கும் ..... கூடக் கனைக்கும் ,

என்னும் ..... என்று உலகம் சொல்லுமோ ;

அப்படி ..... அப்படியே , யானும் ..... நானும் ,

சொன்னேன் ..... உன்னைத் துதித்தேன் !

அடியேன் ..... அடியவனான நான் , மற்று யாது ..... வேறு என்ன என்று ,

என்பனே ..... சொல்லுவேன் ?

095 / 100

நீங்கும் விரதத்தை , நல் வீடு செய்யும் , மாதாவினைப் , பிதுவை ; திருமாலை ; வணங்குவனே !

யாதானும் - ஓர் - ஆக்கையில் - புக்கு ; அங்கு , ஆப்புண்டும் - ஆப்பு - அவிழ்ந்தும் ,

மூது - ஆவியில் - தடுமாறும் - உயிர் , முன்னமே ; அதனால் ,

யாதானும் , பற்றி ; நீங்கும் , விரதத்தை , நல் , வீடு , செய்யும் ,

மாதாவினைப் ; பிதுவை ; திருமாலை ; வணங்குவனே !

உயிர் ..... உயிரானது ;

முன்னமே ..... நெடு நாட்களாகவே ,

து ஆவியில் ..... பழமையான பல வகைப் பிறப்புக்களுள் ,

யாதானும் ..... ஏதாவது ,

ஓர் ஆக்கையில் ..... ஒரு சரீரத்தில் ,

புக்கு ..... பிரவேசித்து ,

அங்கு ..... அவ் வுடம்பில் ,

ஆப்புண்டும் ..... கட்டுப் பட்டு நின்றும் ;

ஆப்பு அவிழ்ந்தும் .... அதனிடத்திலிருந்து தொடர்ச்சி நீங்கியும் ;

தடுமாறும் ..... நிலை மாறி அலையும் தன்மை உடையது !

அதனால் ..... ஆதலால் ,

யாதானும் பற்றி ..... எந்த விதத்தினாலாவது ,

நீங்கும் ..... எம்பெருமானை விட்டு விலகும்படியான ,

விரதத்தை ..... கோட்பாட்டை ,

நல் வீடு செய்யும் ..... நன்றாக விடுவிக்கக் கடவன் ஆன ;

மாதாவினைப் ..... தாய் போன்றவனும் ;

பிதுவை ..... தந்தை போன்றவனும் ஆன ,

திருமாலை ..... ஸ்ரீமன் நாராயணனை ,

வணங்குவனே ..... சரணம் அடைந்து இருப்பேன் !

096 / 100

நின்னோரை இல்லாய் ! வணங்கும் துறைகள் , பிணங்கும் சமயம் , அவை அவை தோறும் அணங்கும் , பல பல ஆக்கி , நின் மூர்த்தி , பரப்பி வைத்தாய் ! நின் கண் வேட்பை எழுப்புவனே !

வணங்கும் - துறைகள் , பல , பல - ஆக்கி ; மதி , விகற்பால் ,

பிணங்கும் - சமயம் , பல , பல - ஆக்கி ; அவை - அவை , தோறு -

அணங்கும் , பல , பல - ஆக்கி ; நின் , மூர்த்தி , பரப்பி , வைத்தாய் !

இணங்கும் - நின்னோரை - இல்லாய் ! நின்கண் , வேட்பை , எழுவிப்பன் !

வணங்கும் ..... தெய்வத்தை வணங்குகிற ,

துறைகள் ..... வகைகள் ,

பல பல ..... பலவற்றை ,

ஆக்கி ..... உண்டாக்கி ;

மதி ..... அறிவின் ,

விகற்பால் ..... வேறுபாட்டால் ,

பிணங்கும் ..... ஒன்றோடு ஒன்று மாறுபடுகிற ,

சமயம் ..... மதங்கள் ,

பல பல ..... பலவற்றையும் ,

ஆக்கி ..... உண்டாக்கி ;

அவை அவை .... அந்தந்த மதங்கள் ,

தோறு ..... தோறும் ,

அணங்கும் ..... தெய்வங்கள் ,

பல பல ..... பற்பலவற்றையும் ,

ஆக்கி ..... உண்டாக்கி ;

நின் மூர்த்தி ..... இங்ஙனம் உன் வடிவத்தை ,

பரப்பி ..... பரப்பச் செய்து ,

வைத்தாய் ..... வைத்துள்ளாய் !

நின்னோரை ..... உன்னோடு ,

இணங்கும் ..... இணைத்துச் சொல்லத்தக்க உன் போல்வாரை ,

இல்லாய் ..... எவரையும் இல்லாதவனே !

நின்கண் ..... உன்னிடத்திலேயே ,

வேட்பை ..... பக்தியை ,

எழுவிப்பன் ..... வளரச் செய்வேன் !

097 / 100

தொல்லை மாலைக் கண் ஆரக் கண்டு ; கழிவது ஓர் காதல் உற்றார்க்கும் , கண்கள் , துஞ்சுதல் , உண்டோ ?

எழுவதும் , மீண்டே , படட்டு , எனை - ஊழிகள் , போய்க் ,

கழிவதும் - கண்டு , கண்டு - எள்கல் - அல்லால் ; இமையோர்கள் , குழாம்

தொழுவதும் - சூழ்வதும் - செய் , தொல்லை , மாலைக் , கண் - ஆரக் , கண்டு

கழிவது - ஓர் , காதல் - உற்றார்க்கும் ; உண்டோ , கண்கள் , துஞ்சுதலே , ?

எழுவதும் ..... ஸூர்யன் உதிப்பதையும் ,

மீண்டே ..... மறுபடி ,

படுவதும் ..... அஸ்தமிப்பதையும் ,

பட்டு ..... இங்ஙனம் நிகழ்ந்து ,

எனை ஊழிகள் ..... எத்தனையோ காலங்கள் ,

போய்க் கழிவதும் ..... சென்று கழிவதையும் ,

கண்டு கண்டு ..... பார்த்துப் பார்த்து ,

எள்கல் அல்லால் ..... வருந்துதலே அல்லாமல் ;

இமையோர்கள் குழாம் ... தேவர்கள் கூட்டம் ,

தொழுவதும் ..... வணங்குவதையும் ,

சூழ்வதும் ..... பரிவாரமாகச் சூழ்ந்து கொள்வதையும் ,

செய் ..... செய்யப் பெற்ற ,

தொல்லை மாலைக் ..... ஆதி அந்தம் இல்லாதவனான திருமாலை ,

கண் ஆரக் கண்டு ..... கண்கள் திருப்தி அடைய ஸேவித்து ,

கழிவது ஓர் காதல் ..... அவன் பக்கல் மிக்கதொரு வேட்கையைப் ,

உற்றார்க்கும் ..... பொருந்தினவர்க்கும் ,

கண்கள் துஞ்சுதலே ..... கண் உறக்கம் கொள்ளுதல் ,

உண்டோ ..... உண்டோ ? (இல்லை)

098 / 100

தன் சார்வு இலாத, தனிப் பெரு மூர்த்தி , வெண்ணெய் ஊண் எனும் ஈனச் சொல் , மாயம் , இமையோர் தமக்கும் , செவ்வே , நெஞ்சால் நினைப்பு அரிது !

துஞ்சா , முனிவரும் - அல்லாதவரும் - தொடர , நின்ற ;

எஞ்சாப் , பிறவி - இடர்க் , கடிவான் ; இமையோர் , தமக்கும் ,

தன் , சார்வு - இலாத , தனிப் , பெரு , மூர்த்தி , தன் , மாயம் , செவ்வே ,

நெஞ்சால் , நினைப்பு-அரிது !-ஆல் ;வெண்ணெய்-ஊண்-என்னும்-ஈனச் ,சொல்லே !

துஞ்சா ..... கண் உறங்குதல் இல்லாத ,

முனிவரும் ..... ரிஷிகளும் ,

அல்லாதவரும் ..... தேவர்கள் முதலிய மற்றையோரும் ,

தொடர ..... பின்பற்றி வழிபட ,

நின்ற ..... நிற்பவனும் ;

எஞ்சாப் பிறவி ..... அடியவர்களுடைய கணக்கற்ற பிறவித் ,

இடர்க் ..... துன்பங்களையும் ,

கடிவான் ..... போக்கி அருள்பவனும் ;

தன் சார்வு இலாத ..... தன்னோடு இணைத்துச் சொல்லும்படி ஓர் உவமை பெறாத ,

தனிப் பெரு ..... ஒப்பற்ற சிறந்த ,

மூர்த்தி தன் ..... ஸ்வரூபத்தை உடையவனுமான எம்பெருமானது ,

வெண்ணெய் ..... வெண்ணெய் ,

ஊண் என்னும் ..... உணவு ஆயிற்று எனும் ,

ஈனச் சொல்லே ..... இழி சொல்லுக்கு இடமான ,

மாயம் ..... ஆச்சரியம் ;

இமையோர் தமக்கும் .... மேல் உலகத்தார்க்கும் ;

செவ்வே ..... நன்றாக ,

நெஞ்சால் ..... மனத்தால் ,

நினைப்பு அரிது ..... நினைப்பதற்கும் அருமையானது !

ஆல் ..... (அசைச் சொல்)

099 / 100

ஞானப் பிரானை அல்லால் , இல்லை ; நான் கண்ட நல்லதுவே !

ஈனச் , சொல் - ஆயினும் - ஆக ! எறி , திரை , வையம் - முற்றும் ,

ஏனத்து - உரு - ஆய் - இடந்த , பிரான் ; இரும் - கற்பகம் - சேர் ,

வானத்தவர்க்கும் - அல்லாதவர்க்கும் , மற்று - எல்லா - அவர்க்கும் ,

ஞானப் , பிரானை - அல்லால் - இல்லை ; நான் , கண்ட , நல்லதுவே !

ஈனச் சொல் ..... என்னுடைய ஸித்தாந்தம் , சிலருக்கு இழி சொல் ,

ஆயினும் ஆக ..... ஆயினும் ஆகுக !

எறி திரை ..... வீசுகிற அலைகளை உடைய ,

வையம் முற்றும் ..... பிரளய வெள்ளத்தில் ஆழ்ந்த பூமி முழுவதையும் ,

ஏனத்து உரு ஆய் ..... வராஹ மூர்த்தியாய் ,

இடந்த ..... கோட்டால் குத்தி எடுத்து வந்த ,

பிரான் ..... தலைவனும் ;

இரும் கற்பகம் சேர் ..... பெரிய கல்ப விருக்ஷங்கள் பொருந்திய ,

வானத்தவர்க்கும் ..... ஸ்வர்க்க லோகத்தில் உள்ள தேவர்கட்கும் ;

அல்லாதவர்க்கும் ..... அவர்கள் அல்லாத மனிதர்களுக்கும் ;

மற்று ..... மற்றும் உள்ள ,

எல்லா அவர்க்கும் ..... நாகர் முதலியோர்க்கும் ;

ஞானப் ..... அறிவைக் கொடுக்கிற ,

பிரானை அல்லால் ..... தலைவனும் ஆகிய எம்பெருமானை அன்றி ,

நான் கண்ட ..... நான் அறிந்த ,

நல்லதுவே ..... நற்பொருள் ,

இல்லை ..... வேறு இல்லை !

100 / 100

குருகூர் நகரான் மாறன் , விண்ணப்பம் செய்த இந்நூறும் வல்லார் , பொய் நிலத்து அழுந்தார் !

நல்லார் , நவில் , குருகூர் , நகரான் ; திருமால் , திருப்பேர் ,

வல்லார் - அடிக் , கண்ணி , சூடிய ; மாறன் , விண்ணப்பம் - செய்த ,

சொல் - ஆர் , தொடையல் - இந் , நூறும் , வல்லார் ; அழுந்தார் , பிறப்பு - ஆம் ,

பொல்லா , வரு , வினை ; மாய , வல் , சேற்று - அள்ளல் , பொய் , நிலத்து - அழுந்தார் !

நல்லார் ..... நல்ல குணங்களையும் , நல்ல காரியங்களையுமுடைய மஹான்கள் ,

நவில் ..... புகழ்ந்து கூறப் பெற்ற ,

குருகூர் நகரான் .... திருக் குருகூர் எனும் திருப்பதியில் திரு அவதரித்தவரும் ,

திரு மால் ..... லக்ஷ்மீபதியான எம்பெருமானது ,

திருப் பேர் ..... திருநாமங்களைப் ,

வல்லார் ..... பயின்றவரான அடியார்களுடைய ,

அடிக் கண்ணி ..... திருவடிகள் ஆகிற பூமாலையை ,

சூடிய ..... தமது முடிக்கு அணியாகக் கொண்டவருமான ,

மாறன் ..... நம்மாழ்வார் ,

விண்ணப்பம் ..... பகவத் ஸந்நிதானத்திலே விக்ஞாபனம் ,

செய்த ..... செய்த ,

சொல் ஆர் ..... சொற்களைக் கொண்டு தொடுக்கப்பட்ட ,

தொடையல் ..... மாலை வடிவமான ,

இந் நூறும் ..... இந்த நூறு பாசுரங்களையும் ,

வல்லார் ..... கற்று வல்லவர்கள் ,

பிறப்பு ஆம் ..... ஸம்ஸாரத்திற்குக் காரணமும் காரியமும் ஆனதும் ,

பொல்லா ..... கொடியவை ஆனதும் ,

அரு வினை ..... போக்க முடியாதனவாயும் ஆன ,

மாய ..... ஆச்சரியகரமான ,

வல் சேற்று ..... கொடிய சேற்றின் ,

அள்ளல் ..... அடர்த்தியை உடையதும் ஆன ,

பொய் நிலத்து ..... பொய் ஆகிய பிரக்ருதி மண்டலத்தில் ,

அழுந்தார் ..... அழுந்த மாட்டார்கள் (முக்தராகப் பெறுவார்கள்) !

****

திருவிருத்தம் முற்றும்

****